மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

ஷண்முகர் சம்ப்ரோக்ஷண

17987

27 - 03 - 78



# கும்பாபிஷேக மலர்



## சமர்ப்பணம்

மாவைச் சண்முகர் ஆலய
சம்ப்ரோக்ஷண கும்பாபிஷேகத்
திருநாளாகிய இன்று, அப்பெ
ருமானின் பாத கமலங்களில்
இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

மாவை ஆதீனம்
மாவிட்டபுரம்
27-03-1978

சந்திரா அச்சகம், காங்கேசன்துறை.



# மாவைச் சிவசண்முகன்

எங்கும் நிறைந்த பரத்துவமே சிவசண்முகன். வேதத்திலும், வேதத்தின் அடி, நடு, முடியிலும் நர்த்தன மாடும் ஞான சொரூபன்; அறுசமய சாத்திரப் பொருளானவன், படைக்குங் காலே பிரமனுகவும், காக்கும்போது திருமாலாகவும், அழிக்கும்போது உருத்திரனுகவும், மறைக்கும்போது மகேஸ்வரனுகவும், அருளும் காலே சதாசிவனுகவும், அபேதமாயும், அவர்க்கு மேலான சதுர்த்தப் பொருளாயும் இருக்கும் சகல வடிவாய சதுரன்.

கற்பங்கள் பலகோடிகனல் நடுவே, சிற்பங்கள் போல்நின்று கடுந்தவமாற்றும் ஞானியர்க்கும் எளிதில் எட்டாத பரம் பொருளாயினும், ''மாசிலடியார்''கள் வாழ்கின்ற ஊர்சென்று கூடிவிளையாடி யங்ஙனே நின்று வாழும் மயில்வீரன். 'அரிய சமயமொருகோடி, அமரர் சரணர் சதகோடி, அரியு மயனு மொருகோடி, அறிய, அறிய அரிதாய பரம்பொருள்' ஆயினும், 'பாதமலர்மீது போத மலர் தூவிப் பாடுமவர் தோழர் தம்பிரான்.'

ஆசா பாசக் காமக் குரோதாதிகளாகிய அசுரப் பண்புகளை ஆன்மாக்களிடமிருந்து அகற்றி, தன் ஆறுமுகங்காட்டி, அருள்பொலி உருக்காட்டி, அவற்றின் ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கித் தேனினைச் சொரிந்து, வாழ்பதம் அளிக்கும் வள்ளல் பிரான், இப்பெருமான் திருமேவு மொருமாவைத் திருப்பதியிலே.

''தேமேவு நவரத்ன முடியழகு மோராறு
திருமுகக் கருணை யழகுந்
தேனொழுகு தாமரைப் பூவன்ன வருளொழுகு
திரு விழி யீராறினழகும்
பூமேவு செம்பவள விதழழகு முத்துமணி
பூத்த புன்னகை யினழகும்
பொன்னகல மார்பழகு மின்னுகுண்டல நிரைப்
பொலிவழகு மாலையழகுங்
காமேவு பூங்குழற் கன்னிமா ரோரிருவர்
கட்டழகு மிட்ட தண்டைக்
காலழகும்...''

கொண்டு முழுதுமழகிய மூர்த்தியாக, வள்ளி தேவசேனு சமேதனுய் எழுந்தருளியிருக்கும் காட்சியையே முற்பக்கத்திற் காண்கிறோம்.

இவ்வழகுபொலி ஆறுமுகப் பரஞ்சுடர், அடியார்கள் பாவம் தணியப், பவரோகம் தணிய, பிறவித் தாபம்தணிய தன் அருளொழுகு ஆறுமுகங்காட்டி, அழகுபொலி உருக்காட்டி, ஆறுதலளிக்கும் அற்புதத் தெய்வமாக விளங்குகின்றூர்.

''ஆறுமுகம், ஆறுமுகம், ஆறுமுகம்
ஆறுமுகம், ஆறுமுகம், ஆறுமுகம்''

என்று ஆறுமுறை கூவிப் பூதியணி மாதவர் ஆராதிக்க, அருள் பாலிக்கும் இப்பெருமானின் அருள் மாட்சியை,

''ஆராத காதலுடன் அனுதினமு மனமுருகி
ஆறெழுத் தோதி முன்னின்(று)
அழுதழுது தொழுகின்ற பழவடியர் கண்குளிர
அஞ்சலென வரு முருகனே
வாராத சித்தியருள் பேராயிரம் கொண்ட
வள்ளலே மாவைநகர் வாழ்
மங்கையுமை பாலனே, செங்கை வடிவேலனே
மயில் வாகனக் கடவுளே''

என்று நாவினிக்கக் கருத்தினிக்கப் பாடிப் பரவுகிறூர் ஒரு அடியார்.

உ

சிவமயம்

பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள், M. A. Ph. D.
(தலைவர், இந்து நாகரிகத்துறை,
இலங்கைப் பல்கலைக் கழக யாழ் வளாகம்.

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

## மாவை கந்தசுவாமி கோவில் - ஷண்முகர் கோவில் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம்

ஈழவள நாட்டிலே வரலாற்றுப்புகழ்மிக்க மாவிட்ட புரம் கந்தசுவாமி கோவில் பல வழிகளிலும் சிறப்புப் பெற்ற திருத்தலமாகும். இக்கோவில் மூர்த்தி, ஸ்தல, தீர்த்த மகிமை பெற்றது.

கலியுகவரதனுகிய மாவைக் கந்தப் பெருமான் அடியார்களுக்கு இன்னருள் புரிவதற்கென அப்பெருமானின் திருவருளால், ஷண்முகர் கோவில் ஒன்று நிர்மாணிக்கப் பட்டு, அதற்கு சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் நிகழ்த்த திருவருள் பாலித்திருப்பதை அறிந்து அகமகிழ்வு கொள் கிறேன். அதனையொட்டி வெளிவரவிருக்கும் கும்பாபி ஷேக மலர் மூலம் இக்கைங்கரியம் நிறைவேறியதனை யிட்டு நான் பெறும் மட்டிலா மகிழ்ச்சியை வெளி யிடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது மாவைக் கந்தப் பெருமானின் திருவருளேயாம்.

எம்பெருமானைத் தரிசிக்க வரும் பல்லாயிரக்கணக் கான பக்த கோடிகளுக்கு எம்பெருமானுக்கென உரு வாக்கப்பட்ட ஷண்முகர் கோவில் அவரது திவ்விய தரி சனத்தைப் பெற்றுய்யச் சிறந்த வாய்ப்பளிக்குமென்பதை உணரும்போது இத்தலத்தின் மகிமை மேலும் சிறப் படைகின்றது.

எம்பெருமானுக்குரிய இத்திருத்தலத்தில் உரிய புன ருத்தாரணக் கைங்கரியங்கள் உரியபடி மேன்மேலும் நிறைவேறத் தேவஸ்தான ஆதீனத்திற்கு எம்பெருமா னின் திருவருள் என்றென்றும் கிட்ட வேண்டுமெனக் கந்தப்பெருமானை இறைஞ்சுகின்றேன்.

மாவையம்பதி கந்தப்பெருமானின் திருவருள் சகல அடியார்களுக்கும் கிட்டுவதாக.

திருநெல்வேலி,
*16 — 3 — 1978.*

உ

சிவமயம்

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

அவர்கள் வழங்கிய

# பிரார்த்தனை உரை

மாவிட்டபுரம் என்ற பெயர் மிக்க பழமையையும் அற்புதமானதோர் அருள் நிகழ்ச்சியையும் புலப்படுத்திக்கொண்டிருக்கின்றது.

தமிழ் அரசர்களாகிய ஆரியச் சக்கரவர்த்திகளுக்கும், யாழ்ப்பாணம் என்ற பெயர் உண்டாதற்கும், முந்தியது மாவிட்டபுரம்.

சோழராசாவின் புதல்வியாகிய மாருதப்புரவல்லி, ஊழ்வயத்தால் தனக்கமைந்த குதிரை முகத்தை நீத்தற்கு உபகாரமாயமைந்த புனித புண்ணிய சமுத்திர தீர்த்தத்தைக் கொண்டது மாவிட்டபுரம்.

மாவிட்டபுரம் என்ற பெயர் மாமுகத்தை நீத்த மாருதப்புரவல்லி யால் இடப்பட்டது. தனக்குக் கிடைத்த அருட்பிரசாத தலவிசேடத்தைக் காட்டும் முகமாக இடப்பட்டது அப்பெயர்.

மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயில் தந்தையாகிய சோழராசாவின் கட்டளைக்கிணங்க, சிதம்பரம் தீட்சிதர்கள், பெரியமனத்தள்ளார், சின்ன மனத்துள்ளார் ஆகியோரின் சாஸ்திரோக்தமான ஆலோசனைப்படி மாரு தப்புரவல்லியால் அமைக்கப்பட்டது.

இந்த ஈழவள நாட்டில் வேதாகம சம்மதமான ஒரே ஒரு கந்தன் கோயில் இஃதொன்றே என்று ஒரே ஒரு விரலைமட்டும் மடிக்கத்தக்க வகை யில் முதன்முதல் அமைந்தது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் 'மா' விலங்கு என்ற பொருளையுந் தரும். இப்பொழுதைய மக்கள் மாக்களாய் விட்டார்கள். மனிதரை மனிதர் வதைத்து வாழும் எண்ணம் உலகம் எங்கணும் தலைதூக்கிவிட்டது.

இந்தக் கொடூர சந்தர்ப்பத்தில் மாருதப்புரவல்லி செய்து வைத்த மாதவம் பலித்தது என்று சொல்லத்தக்க வகையில் மாவைத் திருமுரு கனின் கருணைகூர் முகங்கள் ஆறிலும் அருட்பிரவாகம் ஊற்றெடுக்கும் அறிகுறிகள் காணப்படுகின்றன. அவனைச் சரணடைந்தாரை அவன் காத் தருளுவன் என்ற தைரியம் பிறக்கின்றது.

மாவைத்திருமுருகன் ஆலயவளர்ச்சி நாளொரு வண்ணம் வளர்ந்து கொண்டிருப்பதைக் கண்கள் கண்டு களிக்கின்றன.

வேதாகம வகுப்புக்கள், திருமுறைப் பண்பயிற்சி, சமய சாத்திர ஆய்வு என்றின்னோரன்னவைகளைக் கொண்ட குருகுலம் மாவை வீதியில் அமைவதாக!.

ஈழத்திலும், தமிழகத்திலும் உள்ள சாத்திரம்வல்ல தக்கோரின் புத்தி மதிகள் மாவையாதீனத்துக்குக் கிடைத்துக்கொண்டிருப்பதாக!.

கலியுகவரதனாகிய மாவைத் திருமுருகன் கலியிருள் போக்கி அருட் கிரணங்களை எங்கும் பரப்புவானாக!.

என்றிங்ஙனம் திருவருளை வேண்டுதல்செய்து பிரார்த்திப்போமாக!.

மாவை முருகன் மலரடி சரணம்

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

சிவமயம்

**பண்டிதர் இ. நமசிவாயம்**

அவர்கள் வழங்கிய

# ஆசிச் செய்தி

ஈழவளநாட்டில், மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றும் சிறப்புற அமைந்ததும், சைவாகம விதிப்படி நடத்தப்படுவதும், பழமை வாய்ந்ததுமான மாவை முருகன் ஆலயக் கட்டடங்கள் இற்றைக்குப் பல ஆண்டுகளின் முன்பிருந்தே பகுதி பகுதியாகத் திருத்தப்பட்டு வருகின்றன. புதிய ஆதீனகர்த்தராகிய சிவாகம வித்தியா பூஷணம் பிரம்மஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள் அவர்களின் நிருவாகத்தில் அப்புனருத்தரரணம் அதிவேகமடைந்திருப்பது யாவருமறிந்தது. நித்திய நைமித்திகச் சிறப்புக்களாலும், பலவித கலைகளையும் பேணி வளர்த்தலாலும், கலைஞர்களை மதித்து ஆதரித்தலாலும் இன்னும் பல ஏதுக்களாலும் இவ்வாலயம் புதுப் பொலிவுடன் விளங்குகின்றது. ஆதீனகர்த்தரைத் தலைவராகக் கொண்டு, ஊக்கத்தோடு ஆக்கப் பணிபுரியும், திருப்பணிச்சபையும் இங்கு கருதத்தக்கது.

இவ்வாலய வளர்ச்சியின் சின்னங்களில் ஒன்றாக 27-3-78 திங்களன்று சம்புரோக்ஷண கும்பாபிஷேகமொன்று நிகழ இருக்கின்றது. அவ்விழாவை ஒட்டி, அன்று மலர இருப்பது இந்த மலர். பல கலை அம்சமும் மணக்க, அவ்வவ்வற்றில் துறைபோய பெரியார் பலரின் கட்டுரைகளைத் தாங்கி மிளிர்கின்றது.

கலியுக வரதராகிய கந்தப்பெருமான் திருவருளால், இம்மலர், பக்தர்களாகிய வண்டுகளைக் கவர்ந்து, ஆலயத் திருப்பணிகள் நிறைவெய்தலாகிய நற்பயனைத் தருவதாக.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.
21-3-78.

குகமயம்

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஸ்ரீ மகாவல்லி - தேவசேனு சமேத ஷண்முகப் பெருமானின் மகத்தான திருவிழாக்களின் சிறப்புகளும் வரலாறுகளும்

மாவை ஆதீனகர்த்தா
**சிவாகம வித்யாபூஷணம் பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**

ஆதியாய், அநாதியாய், அன்பே வடிவாய் அழகே உருவாய், ஆனந்த அமுதமாய், அவனிவாழ் மக்கட்கெல்லாம், அருள் பாலிக்கும், மாவை வளர் அறுமுகப் பரஞ்சுடரின் கருணைபொழி திருமுகங்களும், அழகிய மணிமகுடமும், அணிபணிகளேந்திய அகண்ட மார்பும், ஆயுதம் பல தாங்கிய பத்துக் கரங்களும், அபயவரத கரமிரண்டும், அவற்றில் தாங்கிய அழகிய வேலும், குக்குடக் கொடியும், சிறகு விரித்த சிக்கி வாகனமுமாய்க் காட்சிதரும், முழுதும் அழகிய மூர்த்தியையும், அவனருகே, மலர் மாலையணிந்த தோள்களும், முழுமதியன்ன வதனங்களும், தெய்வமொழித் திருவாயில் புன்னகையும், அணிபணிகள் பூண்ட திருமேனியும், சிலம்பணி திருவடிகளையுமுடைய தேவியர் இருவரையும் பார்க்கும் போது,

''பக்தித் திருமுகமாறுடன், பன்னிரு
கைகளுமாய்த்
தித்தித்திருக்கும் திரு அமுது கண்டேன்''

என்ற அருணகிரியார் திருவாக்கு எம் முள்ளத்தில் வராமல் விடாது.

எங்கும் நிறைந்து, எதிலும் கலந்து, எதையும் கடந்து, இப்பாலுக்கிப்பாலாய், அப்பாலுக்கப்பாலாய், அகில உலகமும், அளாவி நிற்கும் அறுமுகப் பரம்பொருளை கச்சியப்ப சுவாமிகள்,

'' எங்கணும் திருவதனங்கள்,
எங்கணும் விழிகள்
எங்கணும் திருக்கேள்விகள்,
எங்கணும் கரங்கள்
எங்கணும் திருக்கழல்கள்,
எங்கணும் வடிவம்
எங்கணும் செறிந்து
அருள்செயும் அறுமுகத்திறைக்கே ''

எனக் கந்தப் புராணத்தில் ஓர் விசுவரூப சித்திரமாக மிக நுட்பமாகக் காட்டுகிறார் இப்பரஞ்சுடர்

'' அயனெனவாகி, அரியெனவாகி,
அறிபொணுப் பொருளதுவாகி''

விளங்கித்

' திசையாகி, அத்திசைக்கோர் தெய்வமாகி''

நான்கு திசைகளுடன், கீழ், மேல் ஆகிய ஆறு திசைகளிலும் வாழ்கின்ற மக்கட்கெல்லாம் அருள் சுரக்கும் ஐயனுக அறுமுகம் தாங்கி நிற்கிறுன். இவ்வழகிய பெருமானைப் பார்த்தாலும், அவன் புகழ் கேட்டாலும், அவன் திருநாமம் ஓதினுலும் உள்ளமெலாம் தித்திக்கும் பேரானந்த அனுபவம் பெறலாம்! தேறுமுகமில்லாத அடியார்க்கு, தன் அருள்பொலி ஆறுமுகங் காட்டி, அழகுபொலி உருக்காட்டி, தன் அழகாலும், அருளாலும், அவர்தம் பாவம் தடிந்து, பிறவித் தாபம் தணிக்கும் பேரருளாளனுக மாவைப்பதியில் திகழ்கிறுன். இவ்வருள் மாட்சியைத் தானே, மாவை முருகன்மேல் ஆராத பக்திகொண்ட அடியவரொருவர்,

''தெய்வநிறை சந்நிதிச்
செந்நின்று கைநீட்டித்
திருவருட் டிறங்க ளுன்னித்
தேயுமன மழியுமவர்
செங்கைக்கு மெட்டுநீ ''

என்று பாடுகிறுர்.

இவ்வழகான திருப்பெரும் வடிவத்தை யுடைய எம்பெருமானின் விக்கிரகத்தைச் சகல கலைகளிலும் பாண்டித்தியம் கொண்டவரும், சிற்ப சாஸ்திரங்களில் மிகத் திறமான ஞானத்தை உடையவரும், சங்கீதப் பிரியரும், சைவானுஷ்டானங்களில் அதி சிரத்தை உடையவரும், தர்ம சிந்தனையாளருமான பிரம்மஸ்ரீ. ஏரம்பையர் அவர்கள் தமது கைகளாலேயே உருவாக்கினர் என்பதைக் கர்ணபரம்பரைக் கதையாகவும் நாம் அறிகிறோம். இவர் ஸ்கந்த சஷ்டியில் உபவாசமிருந்து, திருக்கார்த்திகையன்று, மெழுகிலே இச்சுவரூபங்களை வார்த்தெடுத்து, வைகாசி விசாகத்தன்று, பஞ்சலோகங்களினாலே பூர்த்தி செய்தார் எனப் பதிவேடுகள் கூறுகின்றன. சிவபூஜா துரந்தரர்கள் வேதகீதம் ஒலிக்க, மெய்யடியார்கள் திருமுறை ஓத, இளமங்கையர் இன்னிசை வாத்தியங்கள் ஒலிக்க, ஜன்னிய இராகங்களை ஆதீன இசையாளர் நாதஸ்வரமூலம் இசைக்க, அஷ்டமங்கள சகிதம் பூரணத்துவம் பெற்றதோர் யாக சாலையுள் வைத்து ஷண்முகப் பெருமானையும் வல்லி தேவசேனை சக்திமார்களையும் பஞ்ச லோகத்தினாலே உருப்பெறச் செய்தாரென ஏடுகள் மூலம் அறியப்படுகிறது. ஜெயவீர சிங்கையாரியச் சக்கரவர்த்தியும் இவ்வுருவங்களைத் தரிசித்தாரெனவும் அறியப்படுகிறது. *(1458 – 70)*

இத்திருவுருவங்கள் ஆனி உத்தரத்திற் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு, முதன்முதலாக மகோற்சவ காலத்தில் ஐந்தாம் திருநாளன்று ஆனந்தத் திருநடனத்துடன் எம்பெருமானின் சிறந்த உற்சவங்கள் ஆரம்பமாயின. இத்திருநடன உற்சவத்தை இங்கிருந்த நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் ஆரம்பித்து வைத்தனர். தாந்தாம் வேண்டியவற்றைச் சித்திகரமாகத் தந்தருளிய ஷண்முகப் பெருமானிடத்து அளவிலாப் பக்தி கொண்ட இச் செட்டிமார் திருச்செந்தூர் விழாக்களை அடி ஒற்றி இத் திருநடன உற்சவத்தை ஆரம்பித்து வைத்தனர். இன்றும் இத்திருநடனம் மிகவும் சிறப்பாக இடம்பெறுவதை யாவரும் அறிவர்.

மகோற்சவ காலங்களில் அதி முக்கியமாக இடம்பெறும் 'இரதோற்சவம்' பிரசித்தமானதாகும். இங்கே, விக்னேஸ்வரர், முத்துக்குமாரர், மீனாட்சி சமேத சுந்தரேஸ்வரர் தேரில் முன்செல, பின்னால் இரதாரூடராய்ச் சண்டேசுவரர் தொடர, நடு நாயகமாக அழகிய சிற்பங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிரும் 'முகோத்தர மகாரத'த்திலே ஷண்முகப் பெருமான் சக்திகளுடன் திருவூஞ்சலிற் றருங் காட்சியை வார்த்தைகளால் வடிக்க முடியாது.

வருட முழுவதும் இடம்பெறும் விழாக்களுள் ஷண்முகப் பெருமானின் இரதோற்சவக் காட்சியே அதிசிறப்பு வாய்ந்ததாகும். அதிகாலையிலிருந்து மாலைவரையும் தேர்விழாவின் சிறப்புகளையும் திருவருள் சுரக்கும் திருக்கோலப் பொலிவையும் வேறு எங்கேயும் காணமுடியாது. உற்சவங்களை நடாத்துவதற்கு எத்தனையோ புண்ணியங்கள் சேரவேண்டுமாம். அதுவும், இரதோற்சவம் செய்வதற்குப் பெரும்பெரும் தவங்களையும் செய்யவேண்டுமாம். பெருந்தவமுடையார்க்கே இச் சிவ புண்ணியம் கிடைக்குமென நூல்கள் இயம்புகின்றன. மாவிட்டபுரத்திலும் உற்சவங்களை நிகழ்த்துவோர் பூர்வகன்மப் பயனுடையர் என்றே பகர வேண்டும். அதனால் உற்சவங்களும் புனிதமடைகின்றன.

பறங்கியர் காலத்தில் தரைமட்டமாக்கப்பட்ட இவ்வாலயத்தை, ஆங்கிலேயர் ஆட்சி மலர்ந்தவேளை – 1782ம் ஆண்டளவில் தீட்சிதர், சபாபதிக்குரு அவர்கள் மீண்டும் நிர்மாணித்து, திருமஞ்சனக் கிணற்றுள் பாதுகாப்பாக ஜலாதிவாசம் செய்யப்பட்ட மூர்த்திகளை வெளிக்கொணர்ந்து, பிரதிஷ்டை செய்து உடனேயே மகோற்சவங்களை ஆரம்பித்தபோது பஞ்ச ரதங்களையும் ஓடவிட்டுச் சிறப்பாக மகோற்சவங்களை நடாத்தினர் எனக் கச்சேரியிலுள்ள பதிவேடுகள் சான்று பகர்கின்றன. இப்பஞ்சரதோற்சவத்தை முன்னின்று நடாத்திய கந்தரோடை விஸ்வநாதர் அவர்கள் எக்காலமும் தமது சந்ததியினரே இதனை நடாத்தி வரவேண்டுமெனப் பிரார்த்தித்து அதற்கான சாசனங்களை நெறிப்படுத்தினர். 1825ம் ஆண்

டிலும் 1896ம் ஆண்டிலும் 1910ம் ஆண்டிலும் நிறைவேற்றப்பட்ட உறுதிகளின் படியும் இச்சந்ததியினரே இன்றும் இவ்விழாவை நடாத்துகின்றனர். அதுவே ஓர் உன்னத தவமாகும். 1927ம் ஆண்டு இப் பரம்பரை வழிவந்த ஆறுமுக ஞானியாரது இரண்டாம் புத்திரன் சுப்பிரமணியர் மகன் வைத்திய கலாநிதி ஆறுமுகம் அவர்களின் திருக்குமாரத்திகளான பிரகத் சுந்தரகுகாம்பாள், மரகதவல்லி என்போரை வதுவை செய்த, மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வாசகரான புண்ணிய சீலர் சின்னத்தம்பி (சாணையர்)யின் குமாரர்களான கந்தையா, சரவணமுத்து என்போர், இந்த இரதோற்சவத்தை நடாத்தும் சிவபுண்ணியத் திருத்தொண்டைப் பொறுப்பேற்றனர். ஐம்பது வருடங்களாகத் தொடர்ந்து, இன்றும், இவர்களே இவ்விழாவினைச் சிறப்புற நடாத்துகின்றனர். இவர்கள் கல்வி, செல்வச் சிறப்போடு குடும்பச் சிறப்பும் பெற்றதோடு, எந்நாளும் மலர்ந்த முகத்தோடும் தெய்வீக உணர்வோடும் இன்புற்று வாழ்கின்றனர்; இவர்களை நாடு நன்கறியும்.

''நகை ஈகை, இன்சொல் இகழாமை
நான்கும்
வகை என்ப வாய்மைக் குடிக்கு''

என்னும் குறளுக்கமைய வாழ்ந்து வரும் இப்பெருந்தகையார்கள் குடிச்சிறப்பு இந்நாட்டின் மேன்மைக்கு உறுதுணை தருகிறது. இவர் முன்னோர்கள் ஆரம்பித்து வைத்த பெரும் புண்ணிய தர்மங்களை இன்றும் இவர்கள் மிகு சிறந்த சக்தி வாய்ந்தனவாக நடாத்தி வருகின்றனர். இவர் எண்ணங்கள் யாவும் தெய்வீகமுடையவையே, செயல்கள் எல்லாம் அதன் வழியனவே.

''மண்ணிற் பிறந்தார் பெறும்பயன்
மதிசூடும் அண்ணலார்
அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினல் அவர்தம் விழாப் பொலிவு
கண்டு ஆர்தல்''

என்னும் பெரியபுராண அடியொற்றி மண்ணிலே வாழும் மாந்தர்களில் இறைவனைக்கண்டு, அமுது செய்வித்து ஆனந்த பரவசங் கொள்வார்கள், அன்னதானம் செய்து செய்து அளவற்ற திருவருளுக்காளாகிவிட்டனர். தமது தேர்த்திருவிழாவன்று திருமுருகப் பெருமானுக்கு சர்க்கரைப் பொங்கல் திருவமுது செய்வித்து வேதியர்கட்கெல்லாம் ஊண் பொருளீந்து, அன்றையதினம் தேர்த்திருவிழாக் காண வரும் அடியவர்களுக்கு அமுது கொடுத்து மகிழ்வதை எங்ஙனந்தான் வார்த்தைகளாற் கூறமுடியும்! ''ஷண்முகப் பெருமானுக்கு'' எனக் கூறினுற் போதும்! உடல், பொருள், ஆவி அத்தனையையும் ஒருங்கே அர்ப்பணிப்பர், இம் பெருந்தகையோர். முன்னர், இவர்கள் முந்தையோர் ஷண்முகப் பெருமானுக்கு வெள்ளைக் கல்லினாலான ஒரு திருக்கோவிலை நிர்மாணித்தனர். கந்தையா - சரவணமுத்துவோவெனின், 1961ஆம் ஆண்டு ஷண்முகப் பெருமானுக்கு மகா மண்டபத்தில் ஒரு கருங்கற்றிருக்கோவிலை நிர்மாணிக்க முன் வந்தனர். 1968-ம் ஆண்டு இத் திருக்கோவிற் கருங்கற் றிருப்பணியை முற்றுவித்து இன்று ஸ்துபி வேலைகளையும் முற்றுவித்து முழுமையான ஒரு ஷண்முக ஆலயம் அமைத்துவிட்டனர். இக் கும்பாபிஷேகத்தையும் தம் பொருட் செலவிலேயே நடாத்துகின்றனர். ஷண்முகப் பெருமானின் இரதோற்சவ உபயம் மூலம் நிரம்பிய திருவருளுக்காளான இவர்களும், இவர்தம் குடும்பத்தினரும் திரும்பத் திரும்பத் தமது செல்வங்களை மகேஸ்வர பூசை, அதிதி பூசை ஆகியவற்றிற்குச் செலவிடுவதால் இவர்களது குடும்பம் பரந்து விரிந்து இன்புற்று வாழ்வதை நாம் காணமுடிகிறது. ஷண்முகப் பெருமானின் இரதோற்சவத்தைப் பற்றியும் அவ்வுபயத்தை நடாத்துவது பற்றியும் ஒரு கதையுண்டு. இரதோற்சவத்துடன் ஒரு பரம்பரையும் வளர்ந்து வருகிறது. ஆல் போல் வளர்ந்து அறுகுபோல் வேரூன்றி வளர்ந்துவரும் இப் பரம்பரையினர் எம் பெருமானின் திருவருளுக்காளாகி அட்ட ஐஸ்வரியங்களையும் பெற்று வாழ்வதைக் காணும்போது ஏனையோர் உள்ளம் பூரிப்பதுபோல் எமது உள்ளமும் பூரிப்படைகின்றது ''ஆறுமுக ஞானியார்'' என்பவர்

ஆறுமுகப் பரஞ்சுடரில் அளவிலாப் பக்தி பூண்டவர். பெருமானின் நீழலில் வாழும் நோக்கோடு கீழை வீதியில் மடம் ஸ்தாபித்து ஜபதபங்களை இயற்றி வாழ்ந்து வரும்போது, இப்போதிருக்கும் விசால மான தேரோடும் வீதியை அமைப்பதற்கு அயராது உழைத்தனர். இவர் கந்தரோடை விசுவநாதரது மகன் கதிரித்தம்பி அவர்களின் புதல்வராவர். எக்காலமும் மாவை முருகப் பெருமானின் ஆலயம் வைதீக சமய அனுஷ்டானங்களின் கோட்பாடுகளுக்கமைய நடாத்தப்பட வேண்டுமென்ற அவாவினைக் கொண்டு பூசைகள் யாவும் தவறாது நடைபெற வேண்டு மென்பதற்காக சாதனங்களையும் உருவாக்கியவர். 1838-ம் ஆண்டளவில் கதிரித்தம்பி சிவபதமடைந்ததும், ஆறுமுக ஞானியார், முற்றுந்துறந்த முனிவர் போல கிழக்கு வாயிலிற் கட்டப்பட்ட தமது மடத்திலேயே யிருந்து நல்லறம் நடாத்திவருங் காலை 1849-ம் ஆண்டில், இப்போது ஷண்முகப் பெருமானின் திருத்தேர் நிற்குமிடத்துக்கு முன்பாக இறைவனடி சேர்ந்ததும், அவ்விடத்திலேயே சமாதி வைக்கப்பட்டார். இன்றும் ஷண்முகப்பெருமானின் 'முகோத்தர மகாரதம்' இச்சமாதிக்கு முன்பாகவே நிலை கொண்டிருக்கிறது. ஆறுமுக ஞானியாரது மௌனஞ்சலியும், தெய்வீகத் திருத்தொண்டின் பெறுபேறுகளும், உயர்ந்த புனிதமான சிந்தனைகளும் அவ்விடத்தில் இன்றும் நிலை கொண்டிருக்கின்றன. ஆறுமுக ஞானியாரது பேரன் வைத்திய கலாநிதி மூலம் இச்சந்ததியாரது வாரிசுகளாக வந்துள்ள கந்தையா, சரவணமுத்து ஆகியோரும் எவ்வித குறைவுமில்லாது தமது முன்னோரது பணிகளை நடாத்தி வருகின்றனர். இவர்களும் இவ்விழாவினைச் சிறப்புற இயக்குவதற்கு 1972-ம் ஆண்டில் ஒரு சாதனம் இயற்றியுள்ளனர். திரு கந்தையா அவர்களின் வாரிசு திருமதி இராசேஸ்வரி கலியாணசுந்தரம், வைத்தியகலாநிதி திரு. சிவகுமாரன் அவர்களும், திரு.சரவணமுத்து அவர்களின் வாரிசாக, திருமதி. இராஜலட்சுமி - மகேஸ்வரன், பிரகதசுந்தரகுசாம்பாள் - கந்தையா, வைத்தியகலாநிதி திருமதி. தனலட்சுமி, சரவண பவானந்தன் ஆகியோரும், இத்தேர்த்திருவிழா உபய தர்மகர்த்தர்களாகச் செயற்படுவதோடு, ஒவ்வொரு வருடமும் முறை முறையாகச் சங்கற்பங்களை ஏற்று விழாவினைச் சிறப்பாக நடாத்த வேண்டுமென்றும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கந்தையா, சரவணமுத்து சகோதரர்கள் 1927ஆம் ஆண்டில் இப்பஞ்சமகாரதோற்சவ உபயப் பொறுப்பை ஏற்று ஐம்பது வருடங்கள் பூர்த்தியடைகின்றனவெனில் அவர் தம் பெருமை சொல்லவும் ஆமோ? இதே வேளையில் ஷண்முகருக்கும் பூரணத்துவம் கொண்டதோர் திருக்கோவிலையும் நிர்மாணித்து பெருமானை அங்கு எழுந்தருளுவித்து கும்பாபிஷேகமும் செய்விக்கின்றனர். ஆனந்தத் திருநடனத்துடன் மகாவல்லி. கஜவல்லி சமேத ஷண்முகப் பெருமான் வசந்த மண்டபத்திலிருந்து தமது புதிதான கருங்கற்றிருக்கோவிலுக்குச் செல்லுங்காட்சியை என்னென்றுதான் வர்ணிப்பது! யசுர் வேதகீதங்களை அந்தணர்கள் ஒலிக்க, ருத்திரகான் இசையோடு வேதியர்கள் வெண்சாமரையிரட்ட, அஷ்டமங்களங்களைத் தீட்சைபெற்ற வேதிய கன்னியர்கள் கையிலேந்திச் சூழ்ந்துவர, அருணகிரியார் திருப்புகழ்ப் பாடல்களை மாவை யாதீனத்து இசையாளர் நாதஸ்வர மூலம் அஞ்சலி செய்ய, சங்கம், முரசு, சேமக்கலம், சல்லரி ஓசைகளோடு அறுமுகப் பரஞ்சுடரின் திருவடிகள் தாம் துணையென வாழும் அடியார்களின் முருக பஜனைக்கூட்டம் பின்வர எம்பெருமான் தொண்டர்களின் தோள்மேலேற்றப்பட்ட அழகிய சிங்காசனத்தில் வீற்றிருந்து, அழகிய மரகத மயிலுடன், பன்னிரண்டு திண்டோளும், அச்சம் அகற்றும் அயில் வேலும், கச்சைத் திருவரையும், சீறடியும், செங்கையும், ஈராறு அருள் விழியும், மாமுகங்கள் ஆறும், விரிகிரணம் சிந்தப்புனைந்த திருமுடிகள் ஓராறும் எந்தத் திசையும் எதிர் தோன்ற வந்து அடியார் இடுக்கணெல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்து புகுந்து உல்லாசமாக உளத்திருந்து, அடியாருடன் கூட்டித் தோயும் பரபோகம் துய்ப்பித்து, சேய கடியேமுக்கும் பூங்கமலக் கால்காட்டி எம்மையெல்லாம் ஆட்கொள்ளும் காட்சியை வேறெங்கேனும் காண்போமே? முடியாது!

இக்காட்சியை என்னென்று தான் சொல்வது ! ! இந்த வையகமே இதன் மூலம் புனிதமடைகின்றது. இதுபோன்ற, பெருந்தவப் பயனாக வந்ததொரு சந்தர்ப் பத்தை எமக்கு ஏற்படுத்திய மகான்களை, ''நீங்கள் எங்கு தான் பிறவி எடுப்பினும் அங்கெல்லாம் உங்கள் தருமம் துணைதருவ தாக'' என நாம் ஆசீர்வதிப்பது போல, ஏனையோரும், கந்தையா, சரவணமுத்து சகோதரர்களுக்கு எக்காலமும் ஷண்முகப் பெருமானின் திருவருள் துணைநிற்கவேண்டு மெனப் பிரார்த்திப்பார்களாக.

பஞ்சரத உற்சவச் சிறப்பால் இந் நாடே செழிப்புறுகிறது. 1927ம் ஆண்டில் இவ்வுற்சவத்தைப் பொறுப்பேற்றபோது, ஈழ்நாட்டிலே, முதன்முதலாக 1789 ஆம் ஆண்டில் தென்னிந்தியா காரைக்குடி ஸ்த பதிகளால் அழகாக உருவாக்கப்பட்ட ''முகோத்தர மகாரதமும்'' வேறும் நான்கு பழமையான தேர்களுந்தான் இருந் தன. 1782ஆம் ஆண்டில் உள்ளூர்ச் சிற்பி களால் ஆக்கப்பட்ட ஷண்முகரது தேரா னது, 1789ம் ஆண்டிற்குப்பின் மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேராக 1952ஆம் ஆண்டு வரை பவனி வந்தது. பின்னர் இத்தேர் கீரிமலைச் சிவாலயத்தின் உபயோகத்துக்கு விடப்பட்டது. 1945ம் ஆண்டிலிருந்து விக் னேஸ்வரர், முத்துக்குமாரர், மீனாட்சி சுந் தரேஸ்வரர் சுவாமிகளுக்குப் புதிய தேர் கள் உருவாக்கப்பட்டன. இத்தேர்த்திருப் பணிக்குப் பொதுமக்களிடமிருந்தும் நிதி யுதவி வேண்டப்பட்டது. சகடைத் தேர் களாகக் காணப்பட்ட இத் தேர்களை மாற் றிப் புதுச் சிற்பத் தேர்களாக உருவாக்கிய பெருமை எமது கோவிற் சிற்பாசாரியர் களான மாவை திரு. செ. சுப்பிரமணியம், திரு. நடேசு ஆகியோர்களைச் சாரும்.

1782ஆம் ஆண்டில் ஷண்முகருக்கு உரு வாக்கப்பட்ட புதிய 'முகோத்தர மகா ரதம்' 1955ஆம் ஆண்டில் திருத்தியமைக் கப்படவேண்டிய நிலை ஏற்பட்டதும் கந் தையா - சரவணமுத்து குடும்பத்தினர் உடனடியாக எனது தந்தையாரைக் காரைக்குடிக்கு அனுப்பிவைத்து, இந்தி யாவிற்றலைசிறந்த சிற்பியான சோமசுந்த ஸ்தபதியை அவரது ஆட்களுடன் இங்கே வரவழைத்து இவ் இரதத்தைத் தமது செலவிலேயே புதுப்பித்தனர். இவ்வேளை யில் சோமசுந்தர ஸ்தபதி தனது மகன் லெட்சுமணனுக்கு எமது கோயிலில் வைத்துச் சிற்பசாஸ்திர வித்தியாரம் பத்தை ஆரம்பித்து வைத்தார். அவர் தனது தந்தையாரையும் விஞ்சிய சிற்பி யாகி, இன்று அனலைதீவு ஐயனார் கோவி லில், ஈழமே பிரமிக்கத்தக்கதோர் 'முகோத் திர மகாரதத்தை, எமது இரதத்தின் சாய லிலேயே செய்துள்ளார். இன்றும் இவ் இலட்சுமண ஸ்தபதி மாவை முருகப்பெரு மானின் திருவருளை நாடி அடிக்கடி இங்கு வருவது குறிப்பிடத்தக்கது. இன்று நான்கு தேர்களும் அழகு வாய்ந்ததோர் பெருங் காட்சியைத் தேர்விழாவினன்று தருவத னல், இந்நாடே மேன்மையடைகின்றது. இருப்பினும், ஐந்தாவது தேரான சண் டேஸ்வரருடைய தேர் அழகற்றதாயிருக் கும் குறை ஒன்றுண்டு. இக்குறை விரை வில் நீக்கப்பட வேண்டுமென்பது எமது பிரார்த்தனையாகும்.

தேர்த் திருவிழாவன்று அன்னதானம், வஸ்திரதானம், ஹிரண்யாதானம், அதிதி பூசை, கோபூசை, தேவ பூசை என்றெல் லாம் இவ்வுபயகாரர்கள் இயற்றுவது வழக் கமாகி விட்டது. இறைவனும் இவர்களுக் குத் திரவியம் வழங்கவழங்க, இவர்களும் அதனை இறைவனுக்கே வழங்கி வருகின்ற னர். அதிகாலையில், வேத சிவாகமங்கள் கூறும் அபிஷேக பூசைத் திரவியங்களால், இறைவனை அபிடேகித்து, விசேஷ பூசை கள் நடாத்தி, அதிமதுரமான சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்து, பஞ்சமூர்த்தி களைப் பஞ்ச ரதங்களில் எழுந்தருளச் செய்து, தமது தர்மங்களைச் சோரவிடாது நீடூழி நிலை பெற்று இயங்க வேண்டுமென் பதற்காகப் பெருந்தொகைப் பணத்தில் புதிதாக்கிய அன்னசத்திரம் போன்று விழங் கும் கீழ் வீதியிலுள்ள தமது மடத்தில் நைவேத்திய பூஜைகளை ஒழுங்கு செய்து, அங்கிருந்து உரிய உபசாரங்களோடு பஞ்ச ரதங்களை வலம்வந்து சங்கற்பங்களைக் கொண்டு விலையுயர்ந்த பட்டு வஸ்திரங் கள், சுகந்த மலர்மாலைகள் ஆகியவற்றை

அணிவித்துத் தத்தமது நேர்த்திக் கடன்களைச் சமர்ப்பித்தபின் மகேசுவர பூசைகளை நடாத்துவர். அன்றுமாலை இந்த இரதோற்சவத்திற் பங்குபற்றிய நாதஸ்வரகாரர்களுக்கும், பூமாலை சாத்தி அழகு செய்தவர்களுக்கும், தேரினை நெறிப்படுத்திப் பவனி செய்வித்த சிற்பிகளுக்கும், தேர்களை அலங்கரித்த ஊழியர்களுக்கும், இன்னும் யார் யாரெல்லாம் இவ்விழாவில் ஊழியஞ் செய்தனரோ அவர்கள் யாவர்க்கும் வஸ்திர தானம், ஹிரண்ய தானம் ஆகியன கொடுத்து உபசரிக்கும் மாண்புமிகு பெருந்தொண்டை நினையுந்தோறும், இத்தொண்டினைச் செய்வதற்கு நாம் எத்தனை தவம் இயற்றவேண்டும் என்பது புலனாகும். கொல்லங்கலட்டி, ''சங்கர சாணையர்'' என்றால் எல்லோருக்கும் இவரைத் தெரியும். எந்நேரமும் மாவை முருகனின் வாசலிலேயே நிற்பர். இவரது மூத்தவர் சங்கரப்பிள்ளையோ தர்மங்களை ஆற்றுவதற்குப் பின்நிற்கார். மிகுந்த குருபக்தி கொண்டவர். சிவாச்சாரியர் இடும் கட்டளை எதுவாயினும் அதனைக் குரு வாக்கெனக் கொண்டு உடனியற்றுவர். தனது சகோதரர்களான கந்தையா, சரவணமுத்து ஆகியோர்க்கு அவர்களாற்றும் திருத்தொண்டில் உறுதுணையாக நின்று செயலாற்றும் கர்மவீரர், இவரது நல்லறங்களை நாடு நன்கறியும், ஷண்முகரது பூரண திருவருளுக்காளாகிய இவர்களும், இவர்களது குடும்பமும் குறையெதுவுமின்றி இனிது வாழவேண்டுமென்பதே எமது நித்திய பிரார்த்தனை. இரதோற்சவத்தை யடுத்து ஷண்முகப் பெருமானின் அடுத்த உற்சவம் தைப்பூச விழாவாகும். திருக்கார்த்திகைத் திருநாளின்போதும் ஷண்முகப் பெருமானுக்கு விசேஷமான அபிஷேகமும் ஷண்முகார்ச்சனைகளும் நிகழும். மகர மாதத்தில் இடம் பெறும் இலட்சார்ச்சனைப் பூர்த்தியிலன்று மஞ்சத்தின் மீது பவனி வருவார். இலட்சம் உருப் பெறுவதற்காக வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளும் ஷண்முகர் பத்துத் தினங்கள் வரை அபிஷேக ஆராதனைகளைப் பெற்று இலட்சம் உருக்கொண்டு மஞ்சத்தின் மீதிருந்து அடியார்களை ஆட்கொள்ளும் காட்சி மகா அற்புதமானது. இந்த இலட்சார்ச்சனை உற்சவங்களைப் பலர் பங்குகொண்டு நடாத்துகின்றனர். இவற்றோடு பலர், தத்தமது இஷ்டகாமிய சித்திகளைப் பெறுவதற்காக ஷண்முகர்க்குச் ஷண்முகார்ச்சனை நடாத்துவதும் வழக்கம்.

மாவையம்பதியிலே ஷண்முகப் பெருமானுக்கு நடாத்தப்படும் உற்சவங்களை நடாத்துவோரும், தரிசிப்போரும் உண்மையில் இக்கலியுக இடர்கள் நீங்கப் பெற்று பேரின்ப சுகத்தைப் பெறும் அதிக வாய்ப்புகளைப் பெறுவர்; எனக்கூறி முருகப் பெருமான் குருவாய் வந்து எல்லோருக்கும் அருள வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறேன்.

*கலியுகம் 5079*
*பாற்குண மீ' உம் நாள் புதவாரம்*
*(15-3-1978)*

# ஆறெழுத்துப் பத்து

## பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை

முருக மந்திரமாகிய சரவணபவ என்னும் ஆறு எழுத்துக்களையும் முறையே செய்யுளின் ஆறு அடிகளதும் முதலெழுத்தாக வர அமைத்துப் பாடப்படும் பத்துப்பாடல்களின் தொகுப்பே ஆறெழுத்துப் பத்து என்பது.

ஐந்தெழுத்தைப் பஞ்சாட்சரம் என்பது போல ஆறெழுத்தைச் சடாட்சரம் என்பர். எழுத்துக்களுக்கு சமய விளக்கக் குறிப்புக் கூறுவதும் உண்டு. சடாட்சரத்தைக் கந்தசட்டிக் கவச நூலார் சரஹணபவ என்றும் கூறுவர்.

ஆறெழுத்துப் பத்தை ஆக்கியவர் மாவை மகா வித்துவாந்தா மூ. பூ. பொன்னம்பலபிள்ளை அவர்கள் ஆவர். இவர் 'மாவைச் சித்திரகவித் திருவிரட்டை மணிமாலை,' 'மாவை யமக அந்தாதி' முதலிய பல நூல்கள் செய்திருக்கிறார்.

இதிலுள்ள பாடல்கள் யாவும் மிக மிகச் சிறப்புடையன. எனினும் ஒரு பானை சோற்றுக்கு ஒரு அவிழ் பதம் பார்ப்பது போன்று ஒரு பாடலைப் படித்துச் சுவைத்துப் பாருங்கள்.

அகன்ற நிலவுலகின் அநித்தியத்தை அழகுற விளக்குவது அச்செய்யுள்.

பாம்புக்கு யமன் போன்ற கருடன் வாயில் பாம்பு; பாம்பின் வாயில் தேரை; தேரையின் வாயில் வண்டு; வண்டின் வாயில் சிறு தேன் துளி.

வண்டு தன்வாய்ப்பட்ட தினைத்தனையுள்ளதோர் தேனை தான் இருக்கும் அவல நிலையை அறியாமல் அயர்த்துப்போய் அத் தேனை அனுபவித்து அகம்மிக மகிழ்வது போன்றது அவனி வாழ்க்கை என்கின்றனர் அறிஞர்.

''அரியயற் கரியானை அயர்த்துப் போய்
நரிவிருத்தம் ஆகுவர் நாடரே''

என்பர் அப்பர்.

கருடன் பாம்பைக் கவ்வ, பாம்பு தேரையைப் பற்ற, தேரை வண்டைத் தின்ன, வண்டு தான் இருக்கும் தவற முடியாத சாகவேண்டிய அவல நிலையையும் மறந்து நாக்கில் சொட்டும் தேனைச் சுகித்துக் கொண்டே இருக்கிறது.

இது போன்றதே எமது வாழ்வும் என்கின்றார் புலவர்.

கார்மாமிசைக் கடுகிவரும் காலன் காலமாகிய நாளைக்காட்டி உடம்பை அரிந்து கொண்டே இருக்கிறான். அதேநேரம் உடம்பகத்திருக்கும் ஐவர் சிவ விளைவுண்டாகாத படி உயிரை உலைக்கின்றனர். உயிரானது உற்ற ஆக்கையின் உறுபொருளை உணராது உழல்கின்றது.

அதாவது உற்ற ஆக்கையின் உறு பொருள், நறுமலர் எழுதரு நாற்றம் போற் பற்றலாவதோர் பரம்பொருளைக் காண்டலே தனது இலட்சியம் என்பதை மறந்து இன்பத்துறையில் பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்து பித்தர்போல் பேதுறுகின்றது எனத் தொனிப்பொருளுந் தோன்றச் சொற்களை அமைத்தமை சுவைத்தின்புறத் தக்கது.

மேனும், வண்டுற்ற பூ மாவை வாச! ஆறெழுத்துப்பத்தை அனுதினமும் அகமுருகிப் பாடும் அடியேனது பண்டுற்ற பாசப் படர் ஊழ் மயல் நீக்கி பூ மாவை வாசம் நயம் அருள்வாயாக.

செய்யுள்,

'சண்டைக் கருடன்வாய்ச் சர்ப்பம் அதன்வாயநீ
ரண்டுற்ற தேரை அதன்வாய் அகப்பட்ட
வண்டுற்ற தேனை மகிழும்இயல் ஆனதிம்மண்
ணண்டுற்ற வாழ்க்கை அதுவென் றறியாமே
பண்டுற்ற பாசப் படரூழ் மயல்நீக்கி
வண்டுற்ற பூமாவை வாச நயம் அருளே.'

மாவைத்தல விசேடத்தால் மாருதப் புரவல்லியின் வல்வினை மாறியது போல் பெருமானே; எமது சிற்றின்பத் துறையில் செல்லலால் வரும் நட்டத்தை நீக்கி பேரின்பத் துறையால் வரும் பெரு நயத்தை அருள்வீராக!

இன்னும்

(மாருதப்புரவல்லியின்) பண்டுற்ற பாசப் படரூழ்மயலாகிய (குதிரை முகத்தை) நீக்கியவனே! வண்டுற்ற பூ மாவை வாச! (வேண்டத்தக்கதெது வேண்டத்தகாததெது என்பதை அறியமாட்டாத சிற்றறிவுஞ் சிறு தொழிலும் உடையேமாகிய எமக்கு வேண்டத்தக்க) நயத்தை அருள்வாயாக என்றும் வாயூறுகின்றார் மாவைப் புலவனார்.

சுபம்.

## கந்தபுராணக் கருவூலம்

# 'மாயை மயக்கமுஞ் செய்யுமன்றே'

மு. கந்தையா, ஏழாலை

சைவசித்தாந்தங் கொள்ளும் முப்பொருளின் இலக்கண தத்துவ தாற்பரியங்களை உருவக நடைப்படுத்தி அவற்றைக் கதாபாத்திரங்களாக நிறுத்திக் காவியம் படைத்திருக்கின்றார் கச்சியப்பர். அவருடைய கதாபாத்திரங்களிலொன்று மாயை. கச்சியப்பர் சூட்டும் மாயை பிறள் எவளுமன்று. முப்பொருள்களில் ஒன்றான முப்பாசங்களில் மூன்றாவதான மாயையேயென்பது அவர் வாக்கிலேயே வெளிவந்திருக்கக் காணலாம்.

''அருவினள் சேறலும் அற்பு தத்தவண்
வருபொரு ளியாவையும் மறைந்துபோயின''

என்ற மாயைநீங்கு படலச் செய்யுள் மாயையை அருவினள் என்ற சொல்லாற் குறிக்கின்றது. 'சூக்ஷமம் அரூபகம்' என்ற சொற்களால் மிருகேந்திராகமம் மாயையைப்பற்றிக் கூறியதும், நித்தமாய் அருவாய், ஏகநிலையதாய்' என்ற சொற்களால் சிவஞானசித்தியார் அதைப்பற்றிக் கூறியதும் இங்கு 'அருவினள்' என்று கச்சியப்பர் குறிப்பிடுவதும் ஒன்றேயாம். அற்புதத்தவண் வருபொருள் என்றதில் மதங்கபாரமேஸ்வரர்சுமம் மாயைபற்றிக் கூறிய அற்புதகுணவகம் என்ற இலக்கணந் தொனிக்கின்றது. அவண் வருபொருள் என்றதனால் புவனபோகந்தநுகரணமு முயிர்க்காய் வைத்ததோர் பொருளாய் என்ற சித்தியார் விளக்கம் தெரிவிக்கப்படுகின்றது. மதங்கபாரமேஸ்வரம் கூறிய, பிரசவ தர்மிணி என்ற மாயையிலக்கண விளக்குமும் இங்கே பெறப்படுகின்றது. அவள் சேறலும் யாவையும் மறைந்துபோயின என்றதனால் தோன்று தற்கிடமாயிருந்த மாயையே அனைத்தும் ஒடுங்குதற்குமிடமாம் எனக் காட்ட வந்த 'யத்ப்ரயந்த் யபிசம்விஷந்திச' என்ற உபநிடத உண்மையும் புலனாகின்றது. இவ்வாற்றால் கச்சியப்பர் தரும் மாயை கற்பனை மாயையன்று, சித்தாந்த மாயையே என்பது கண்கூடு. இம்மாயை பற்றிக் கச்சியப்பர் தருஞ் செய்திகள் இன்னும் உற்று நோக்கற்பாலவை.

காசிபர் தவஞ்செய்திருந்த இடம் நீரும் நிழலுமின்றி வெறுங் கற்பாறைப்படையாய்க் கிடந்த வன்னிலம். மாயை அந்நிலத்தை ஒரு கணப்பொழுதினுள்ளே, வாவியுஞ் சோலையுஞ் செய்குன்றுகளும் நிறைந்ததோர் சித்திரவனமாக்கினாள். அதன்கண் ஐம்புல நுகர்ச்சிக்கமைந்த நானாவித படைப்புக்களையுந் தோற்றுவித்தாள். மானும் மயிலும் தம் எழில்நலந் தோன்ற உலாவுகின்றன. மெல்லிளந் தென்றல் 'ஜில்'' என அசைகின்றது. காசிபரைத் தவநிலையின் ஆழத்திலமிழ்த்தி வைத்திருந்த அமைதிச் சூழ்நிலை இங்ஙனம் ஆடம்பர சூழ்நிலையாகிறது. இவ்வளவு மியற்றிய மாயை தானும் ஒரு அற்புதலாவண்ய அழகுசுந்தரியாய் அவர்முன் உருக்கொண்டு தோன்றினாள். கயிலையென்னவே காசிபனிருந்து நீறுடித் தவமியற்றிய அச்சூழல் தற்போது மயலை வெல்லவும் மனிதரிங் குளர் கொலோ என்னத்தக்கவாறு காசிபர்க்கே ஒருவகை உணர்ச்சிக் கிளுகிளுப்பை உண்டாக்குகிறது. கண்ணை விழித்தார் காசிபர். கண்கள் செய்துவிட்ட பாவம்! கண்டுவிட்டார் மாயையை. அவளும் காசிபர்பாற் கருவறவரண்டு சாம்பிப்போய்க் கிடந்த காம உணர்ச்சியைக் கிள்ளிவிட்டாள். தோன்றிய மறுகணமே தான் மறைந்து, அதன்மூலம் அவர் தம் ஆவலை நீள வளர்த்துப் பெருக்கி 'அருமை காட்டினாள். பின், முன்போலெதிர் தோன்றி ஆசைகாட்டி மோசஞ் செய்தாள்.

விவாக சம்பந்தமான உலக நடைமுறை ஒழுங்கிலேயே துணிகரமான ஒரு

பெரும்புரட்சி ஏற்பட்டாகிறது. நடந்தால் ஆரிடமாய் அமையவேண்டிய விவாகம் இங்கே காந்தர்வ விவாகமாகிவிட்டது.

புரட்சியோ புரட்சி!

காசிபரைக் கலந்த மாயை இரவோடிரவாக உலகையே கலக்கியடிக்க வல்ல ஒரு மூன்று பெருவீரர்களேயும், ஒரு வீராங்கனையையும், எண்ணிறந்த பல்லாயிர வெள்ளமான அவுண சைந்நியங்களேயும் பெற்றுப் பெற்றுப் பெருக்கி அவ்வெளி முழுவதும் பரப்பினுள். இவளேப் 'பிரசவதர்மிணி' என்று மதங்கம் கூறியதில் ஏதும் விசேஷமுண்டோ இல்லேயோ! இப்பொழுதுதானே விளங்குகிறது இரகசியம்.

பொழுது விடிந்ததும் கடுந்துறவி காசிபரின் கண்கள் அகல விரிந்து மருண்டு நோக்குகின்றன. முற்றப் பற்றற்ற காசிபர் பரந்ததோர் புத்திரப் பெருங்கடலே முகத்தெதிரே காண்கின்றுர். இரவோடிரவாய்ப் பிறந்த அப்புத்திரப் பெருஞ்சமூகம் ரிஷிகர்ப்பமாதலின் விடியுமுன்னரே வளர்ந்து கல்வித்தரமு மெய்திவிடுகின்றது.

காசிபர் கலா போதனே புரியச் சங்கற்பித்தார். ''சான்றேனுக்குதல் தந்தைக்குக் கடனே'' என்றபடி எல்லாக் கலேகளுக்கும் இராஜகலேயாகிய சைவசித்தாந்தக்கலேயைப் போதிப்பதே காசிபர் சங்கற்பம்.

''சான்றவ ராய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை
வான்றிதழ் தளேயென வகுப்ப ரன்னவே''

என்று அடியெடுத்த காசிபர் முப்பொருள் நுட்பமெல்லாம் அலசி ஆராய்ந்துரைத்துக் கொண்டுபோய்

''தருமமென் றெருபொருளுளது தாவிலா
இருமையி லின்பமு மெளிதினுக்குமால்
அருமையில் வரும்பொரு ளாகு மன்னதும்
ஒருமையி னேர்க்கலா லுணர்தற்
கொண்ணுமோ''

என்று தரும உபதேசத்திலே தரிப்பிட்டு, இவ்வறநெறி வழுவாது போற்றி வரும் பாங்கில் உங்களால் மேற்கொள் ளற்பாலது தவம் ஆகும் என்றுணர்த்த வேண்டி

''ஆற்றலே யுனதுமா தவம தன்றியே
வீற்றுமொன் றுளதென விளம்பலாகுமோ
சாற்றருஞ் சிவகதி தனேயு நல்குமாற்
போற்றிடி னனேயதே போற்ற
வேண்டுமால்''

என்றிங்ஙனம் தவத்தின் மகிமையெல்லாம் விரித்து விளக்கிக்கொண்டுபோய்

''ஆதலின் மைந்தர்கா ளறத்தை யாற்றுதிர்
நீதினே விலக்குதிர் சிவனே யுன்னியே
மாதவம் புரிகுதிர் மற்ற தன்றியே
ஏதுள தொருசெய லியற்றத் தக்கதே''

என்று முடித்தார், போதனேப் பயன் குழந்தைகளின் பிஞ்சுள்ளத்திற் பெரிதும் அழுந்தவேண்டுங் கருணேயால் மார்க்கண்டேயர் கதையையும் விரித்து விளக்கியுரைத்தார்.

பிள்ளேகளும் பரிவாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றுர்கள். வந்ததே மோசம்! மாயை குறுக்கிட்டுவிட்டாள்! எங்கள் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலேக்குள்ளே வெள்ளேக்காரப் பாடத்திட்டம் வந்தது போல வந்துவிட்டாள் மாயை!

எண்ணும் எழுத்துங் கற்றுத் தேர்ந்து மெய்ந்நூற்பொருளுணர்ந்து கடவுளே யடைதலே கல்விப் பயன், கற்றதனுலாய பயனென் கொல் வாலறிவன், நற்றுள் தொழாரெனின்' என்ற வள்ளுவர், வெள்ளேக்காரப் பாடத்திட்டம் கண்டதும், திக்கிட்டுவிட்டார். ''ஊழிற் பெருவலி யாவுள மற்றென்று சூழினுந் தான்முந்துறும்'' என்று தன்னேத்தானே சமாளித்துக்கொண்டு மெல்ல நழுவிவிட்டார் வள்ளுவர். பிறகு, நாவலர், குமாரசுவாமிப் புலவர்களுக்கு இங்கென்ன வேலே! அவர்களும், 'நில்லுங்கள் வருகிறேம்' என்று போயேவிட்டார்கள். வாருங்கள்! வாருங்கள்!! என்று அவர்களே எத்தனே கூச்சல்கள் இத்தனே காலமாய்க் கூப்பிட்டுக்கொண்டிருக்கின்றன. பலன் விபரீதந்தான்!

வாழ்க்கைக்காகவேகல்வி. காசொன்றே காரணமுங் காரியமும். நல்லாய்க் காசு ழைக்க, நல்லாய்ப் போராட இரண்டுக்குந்தான் கல்வி. உழைத்துழைத்துப் படிக்கவேண் டும். போராடிப் போராடிப் படிக்க வேண் டும். சாவொன்றையே தலைக்கிடையாக நம் பிக்கொள்ளவேண்டும். இலக்கியம் தத்துவம் பொருளாதாரத்துக் குதவுமோ? வேண் டாம் விடு. பரவாயில்லை. நாட்டுக் கல்விப் பாடத்திட்டம் இந்த மோடியில் இருக்கை யில் நாவலர்தான், குமாரசாமிப் புலவர் தான், நவநீதகிருஷ்ண பாரதிதான் எப்படி இங்கே கால்வைக்க முடியும்? எங்கள் கூச் சலுக்கு அவர்கள் காட்டக்கூடிய கூடிய பட்சக் கருணை தங்கள் தங்கள் சிலைவடி வைக் காட்டுமளவுதான்!

பிள்ளைகள் கல்வியிற் குறுக்கிட்டுக் கொண்டாள் மாயை. அவளும் பயிற்சி பெற்ற ஆசிரியை. காசிபர் மாதிரி அன் சேட்டிவிக்கற் அல்ல அவள். அவளுடைய பாடத்திட்டம் இன்றைய எங்கள் பாடத் திட்டத்தின் மூலப்பிரதி. ஒரு நச்சரிப்புச் சிரிப்போடு சொல்லத் தொடங்குகிறாள் மாயை.

''மறைதெரி முனிவநீ வாய்மையாகிய
உறுதியை மொழிந்தனை யுயர்ந்த வீடுறும்
அறிவுடை முனிவரர்க் கன்றி யாமருள்
சிறுவருக் கித்திறஞ் செப்ப லாகுமோ''

இது மாயை காசிபரைக் கடிந்துரைத்த காண்டம்.

''நன்பெருஞ் சுற்றமும் நவையில் கொற்றமும்
இன்பமும் அழிவிலா திருக்கு மாயுளும்
மன்பெருஞ் சீர்த்தியும் மறுவில் வாழ்க்கையும்
அன்புடை இனையவ ரடைதல் வேண்டுமால்''

மாயை தன்பாடத் திட்டமுரைத்த பரிச்சேதம் இது.

மாயை நாகரீக வனிதை. இழிப்பினும் பழிப்பில்லாத மாதிரியே பேசுகின்றாள். உனக்கு உலகம் தெரியாது என்று சொல் லுவது இழிப்பை இழிப்பாய்க் காட்டி விடுமே! உனக்கு வேதந் தெரியும் என் றாள் நயமாக. 'மறைதெரிமுனிவ' என் றாள் எடுத்தாற்போல். பேச்சு நல்லா யில்லை என்று அபிப்பிராயமானால், பேச் சாளரைப் பார்த்துப் பாட்டு நல்லாயிருந் தது என்னும் படிப்பாளர் பண்பின் மூல முதல் அவள்தானே! இப்படிக் காசிபரைக் கண்டித்துத் தொடங்கிய மாயை 'நீ என்ன! கிழவருக்குச் சொல்லும் உபதேசத்தைக் குழந்தைகளுக்குச் சொல்லுகிறாய். என் பாலாவரசுகளின் பருவநிலை இதற்கிடங் கொடுக்குமோ என்றிருக்கிறது மாயை யின் மாசாலம். காசிபர் கையை விட்டுவிட் டார். 'பிள்ளைகளே! இனி, கொம்மாவிடமே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்வ தாயிருந்தது அவர் மனோபாவம். அப்பால் மாயையின் போதனை தான்பட்டபாடு.

கொப்பர் சொன்னமாதிரி பதி, உயிர், தளை அல்ல; கல்வி, செல்வம் இரண்டு தான் இன்றியமையாத உள்பொருள். அவற்றில் ஒன்றுவது பெறாதவன் பேய். ஆனால், அவ்விரண்டிற் கல்விதான் வீக் கம் என்று யாருஞ் சொல்லுவர். அவர் வீணர் 'கல்வியிற் சிறந்தது திரு' செல்வத் தினாற் கல்வியையும் வாங்கலாம்.

''அளப்பருங் கல்வியும் ஆக்கம் யாவையுங்
கொளப்படு தன்மையிற் குறைவு றாதவை
வளர்த்தலின் மேதக வனப்புச் செய்தலின்
கிளத்திடின் மேலது கேடில் செல்வமே''

என்ற தனது சாரசித்தாந்த தத்துவ உச்ச நிலையைத் தொட்டு நிற்கின்றது மாயையின் கல்விப் போதனை. இனியும் அதிகம் பேசுவது அநாவசியம்.

''வித்யா ததாதி வினயம் வினயாத்யாதி பாத்ரதாம்
பாத்ரத்வாத் தனம் ஆப்னோதி
தனாத் தர்மம் ததஸ் ஸுகம்'' –நீதி மாலா

கல்வி ஒருவற்கு வினயம் உண்டாக் கும். வினயத்தினால் அறிவொழுக்க ஆசா ரத் தகுதியுண்டாம். அத்தகுதியினாற் பொருள் சேரும். அப்பொருளால் அறப் பயன் கைகூடி இகபரசுகங்கள் விளையும்.

''கல்வியினூங்கில்லைச் சிற்றுயிர்க் குற்றதுணை''
—நீதிவெண்பா

இந்த உண்மையைப் பிடுங்கித் தலை கீழாய் நட்டுவிட்டிருக்கின்றுள் மாயை. பொருளாதாரக் கலையின் பூருவ போதகா சிரியை போலும் இந்த மாயை!

இப்படியாக்ப் பொருட்செல்வப் போதையைப் புகட்டி, மருட்டி அநித்தி யத்தை நித்தியமென்றும், அநாவசியமான வற்றை ஆவசியகமென்றும் ஆன்ம ஈடேற் றத்துக் கொவ்வாதனவற்றை ஒவ்வுவன என்றும் காட்டித் தான் கருதியது முடித் தாள் மாயை!

இந்த மாயா மயக்க அடிச்சுவடுகளாக தழுவல்களாக, தழும்புகளாக நம் நம் மைப் பொறுத்தவரையில் இன்றைக்கும் எவ்வளவோ காண உண்டு. இவை அப் போதும் இருந்தவை, இப்போதும் இருக் கின்றவை, இனிமேலும் இருக்கப்போபவை. இறைவன்போலப் பண்டும் இன்றும் என் றும் உள்ளவை. இனி நாங்கள் விஷயத்தை முடிவுகட்டுமுன் அவசியமான ஒரு அம்சம் இங்கே குறுக்கிடுகின்றது.

இத்தனையுஞ் செய்த மாயை தன்கரு மம் முடிந்ததுங் கணமும் நில்லாமலே மறைந்தாள். அவள் மறையவே அனைத்தும் மறைந்தன. மாயை இயல்பின் வண்ணம் (நிலையா இயல்பு) மாயை மறைந்தாள். மாயை மறைந்ததுதான். மாயையால் விளைந்த மயக்கம் மறைந்தபாடில்லை காசி பருக்கு. இங்ஙனம் மாயையின் தாக்கத்தினு லேற்பட்ட சோர்வு அவரைத் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டது. விட்டார் பொடிநடையில் அவள்பின்னே கொஞ்சத் தூரம்! கெஞ்சினுர் பேதை போல.

''ஏதில ளுமென எனைவிட் டேகுதல்
நீதிய தாகுமோ வுரைத்தி நீ''

என்று கெஞ்சுகிறுர். ''நான் மாயவள் தெரிந்ததா? இதுவே அவள் பதில். அவள் போயேவிட்டாள். ஆண் நல மழிவுற அழுங்குகின்றுர் இவர். களிறுண் விளாங்கனி யாய்விட்டார் காசிபர். வாயிழந்து புலம் பவுஞ் செய்கிறுர். அவரைப் பழைய நிலைக்கு மீட்க அவரைப் படைத்த தந்தை யாகிய பிரமனே ஒருகால் வரவேண்டியதா யிற்று.

''மாயை மயக்கமுஞ் செய்யுமன்றே'' என்று சிவஞான சித்தி செப்புகின்றது. உரைகாரர் சொல்லும் விளக்கங்களும் ஏதோசில. படிக்கும் உள்ளங்கள் — மாயை யியல்போ என்னவோ — தெளிவனவாகத் தெரியவில்லை. இதற்கிது தான் விளக்க நிலை யம். கச்சியப்பர் தரும் மாயையைக் காணு மல் இத்தொடர்க்குரைக்கும் உரை உரைப் பவர்க்கும் விளங்காது; கேட்பவர்க்கும் விளங்காது.

கந்தபுராணம் முழுமையும் இவ்வாறே என்றுமுள்ள சித்தாந்த உண்மைகளின் உறைவிடமாகும். ஏனைய பகுதிகளையும் சந்தர்ப்பம் வந்தபடி கண்டுகொள்வோம்.

## ஆறுபடை வீடுகளும் ஆறு ஆதாரங்களும்

முருகன் அமர்ந்து அருள்பாலிக்கும் ஆறுபடை வீடுகளாவன — திருப் பரங்குன்றம், திருசீரலைவாய் (திருச்செந்தூர்) திருவாவினன்குடி (பழனி) திருவேரகம் (சுவாமிமலை) குன்றுதோருடல் (பலமலைகள்) பழமுதிர்சோலை ஆகியவை ஆகும். இவ்வாறுபடை வீடுகளும், ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம், அவாதிஷ்டாமை, மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகியவற்றைக் குறிக்கின்றன.

## மாவை ஆலயச் சிறப்பு உற்சவங்கள்

# கருத்து நிறைந்த கந்தசஷ்டி விழா

### 1. கந்தசஷ்டி – வரலாறு – பயன்

தக்கன் வேள்வியில் எழுந்த அசுர மாயை அளித்தது ஆயிரம்கோடி அவுணர் களை. அவர்கள் தலைவன் சூரபத்மன், தும்பி முகத்தாரகன், ஆயிரமுகத்து அரிமுகன் அவன் தம்பியர். இவர்களைச் சுற்றிப்பல கோடி அசுரவெள்ளம்.

அவுணர் மூவரும் அரனை உன்னி அருந்தவம் இயற்றினர், வரம்பல பெற் றனர். அண்டம் ஆயிரத்தெட்டையும் ஆண் டனர் நூற்றெட்டு யுகங்களாக.

அசுர ஆட்சியில் ஆணவம் மலிந்தது. அமரர் உலகைச் சூறையாடினர் அசுரர். வானவர் பலரைச் சிறையிலிட்டனர். ஏவ லாளர் ஆக்கினர் சிலரை. இந்திரனும் இந்திராணியும் கரந்துறைந்தனர் மண் ணுலகில். அமரர் உலகமே அல்லோலகல் லோலப்பட்டது.

நாரணனும் நான்முகனும் நாடினர் கயிலையை. சிவத்தைப் பணிந்து துயர் துடைக்க அருள் வேண்டினர்.

நிஷ்டையில் அமர்ந்தது விமலசிவம். ஒருமை உணர்வோடு உலகம் உய்ய உன் முகமாகி, இடர் தவிர்க்க வல்ல இன்ப உருவை நுதல்விழி வளியே வெளியேற்றி யது.

இவ்வுரு விண்ணிலே எழுந்தது, காற் றிலே கலந்தது, அனலிலே தோய்ந்தது, நீரிலே நின்றது, நிலத்திலே உருவெடுத் தது.

கார்த்திகைப் பெண்கள் பாலூட்ட, அம்பிகையின் அரவணைப்பிலே, கருணை முகங்களாறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்ட ஒருதிரு முருகாய் ஆடியது ஆடல் பல.

ஆடல் அழகொக்க ஆடுமயில் ஏறி, ஆண்மையுடன், கிடுகிடென உலகை ஒரு நொடியில் வலம் வந்தது.

நெருப்பில் உதித்து அங்கட்புவனம் எல் லாம் அழித்து உலவிய செங்கட்கடாவை அடக்கி, அதன் மீதிவர்ந்து திக்கெட்டும் நடத்தி விளையாடியது.

படைக்கும் பங்கயனைக் குட்டிச் சிறை யிருத்திக் கண்டிகையுங் குண்டிகையுங் கர மேந்தி சிருட்டித் தொழில் செய்து காட் டியது சில காலம்.

முக்கட்பரமர்க்குச் சுருதியின் முற்பட் பட்டது கற்பித்து, பரசிவ உபதேசமூர்த்தி ஆகியது.

சித்ரமுகமாறும், முத்துமணி மார்பும் திக்கினில் இலாத பெருமாளாக அமரர் சிறைமீட்க எழுந்தது.

எதிர்த்து வந்த மாய கிரௌஞ்ச சயி லத்தைப் பொடிப் பொடியாக்கியது.

தருக்கி வந்த தாரகனின் தலையைச் சாய்த்தது. சீறிவந்த சிங்கமுகனைச் சிரங் கொய்து வீழ்த்தியது. மாமரமாய் வந்த மாயச் சூரனைக் குத்திக் கிழித்து கூறு இரண்டாக்கியது. மயிலாகவும், சேவலாக வும் வந்து கூறுகளை மறக் கருணையால் ஊர்தியாகவும் கொடியாகவுமாக்கியது.

அவுணர் குலமறுத்து அமரர் சிறை மீட்டு வெற்றிவாகை சூடியது.

அழுது கதறிய உயிர்கட்கெல்லாம், ஆதாரமாக ஆறுமுகத்தோடு தேறுமுகங்

காட்டி தேவர்குறை தீர்த்து அருள் பொழிந்த ஆறு நாள் விழா, கந்தசஷ்டிப் பெருவிழா.

ஆண்டுதோறும் ஐப்பசித் திங்களில் சுக்கிலப் பிரதமை முதல் சுகந்தரு சஷ்டியீருக வரும் ஆறு நாட்களை அறுமாமுகவனின் வெற்றி விழாவாகக் கொண்டாடுகிறது சைவ உலகம்.

புராண க்காலத்தில் தேவரும், முனிவரும் யாவரும்,

''சொற்படு துலையின் திங்கள்
சுக்கில பக்கந்தன்னில்
முற்பகலாதியாக மூவிரு
வைகல் நோற்றுர்''

எனக் கந்தப்புராணம் கூறி வைத்திருக்கிறது.

கந்தசஷ்டி மகாவிரதம் அனுட்டித்து, தேவரும், முனிவரும், முசுகுந்தச்சக்கரவர்த்தி முதலானேரும் பெரும் பேறு பெற்ருர்கள் என்பது நூல்களின் கூற்று.

இம் மகா விரதத்தை அனுட்டிக்கும் மாநிலத்தோர், யாவரும், அறிவு, ஆற்றல், அழகு, நிறை நன்மக்கட்பேறு பெற்று பெருவாழ்வும், பேறும் பெற்றனர் என்பது ஆன்றேர் அனுபவம்.

## 2. மாவையில் கந்தசஷ்டி

நெஞ்சத்தில் கந்த மகா சஷ்டியின் பின்னணி அசைபோட சிவம் பொலியும் திறன் மாவைத் திருப்பதிக்கு விழாக்காண விரைகிறேம்.

ஞான ஒளி வீசி, வேதமணங்கமழும், இத்தொன்மைத் திருப்பதியில் காலங்களையும், வேதங்களையும் கடந்து நிற்கும், கலியுக வரதன், கருணை வேலவன், காங்கேய மூர்த்தியர்கக் காலங்காலமாக அருள் பாலித்து வருகிருன்.

கோபுர தரிசனம் முடித்துக் கொண்டு, இருகரம் சென்னி மேற்கொண்டு கந்தவேளின் தெய்வநிறை சன்னிதிக்கு விரைகிறேம்.

எங்கு திரும்பினுலும், அடியவர் கூட்டம் பொங்கி வழிகிறது. கூட்டத்திற் கூட்டமாக ஒருவாறு கோபுர வாயில் தாண்டி மூலவர் முன்னிலையில் நிற்கிறேம்.

பெருமான், திவ்யமங்கள சொரூபனுக திருக்கைவேல் ஒளிவீச, அன்னையர் இருபுறமும் சூழ நிற்கிருன். அழகனைக் கண்குளிரக் கண்டு தெரிசிக்கிறேம்,

தெரிசனம் முடிவடைந்ததும் சுற்றிப் பார்க்கிறேம். எங்கும் பக்தர் கூட்டம், பக்தி பரவசமாக வழிபாடு செய்து கொண்டிருக்கிறது.

அன்ன ஆகாரமின்றி, ஆறு நாள் நோன்பு நோற்கும் ஆயிரமாயிரம் அடியார்கள் தம் குறைதீர அருள் வேண்டி அழுதழுது தொழுகின்ற காட்சி, உள்ளத்தை உருக்குகிறது, மெய்சிலிர்க்கிறது. கொஞ்சமோ பக்தி வெள்ளம்! என்று பிரமிக்கிறேம். அருணகிரியாரின் அமுத வாக்குக்கள் நினைவில் வருகின்றன.

செந்திலாண்டவனை
''முடிமேல் அஞ்சலி
செய்வோர் நேயக்காரா''
''செஞ்சொலடியார்கள் வாரக்காரா''
''பக்தி புரிவோர்கள் பனுவல்காரா''
''முக்தி பெறவே சொல் வசனக்காரா''

என்றெல்லாம் அருணகிரியார் வழுத்துகிருரே, எத்தனை இன்ப அனுபவத்தைப் பெற்று இப்படிக் கூறியிருப்பார்? இங்கே மாவைப் பெருமான் சந்நிதியில் நாம் காணும் இந்த அனுபவக் காட்சியைப் போல்தான் கண்டிருப்பாரோ? என்று வியக்கிறேம்.

'மனது துயரற, வினைகள் சிதறிட
மதன பிணியொடு, கலைகள் சிதறிட
மனது பதமுற, எனது தலை பதமுற –
அருள்வாயே.

என்ற சுவாமிகள் திருப்புகழைப்பாடிய படியே உற்சவாதிகளைப் பார்க்க விழைகிறேம்.

## 3. திக்கெட்டும் விளையாடும் நாதன்

முதலாம் நாள் உற்சவத்தில் மாவை முத்துக்குமரன் செக்கச்சிவந்த கடாவில் எழுந்தருளி வருகின்றான்.

அணிபணிகளேந்திய மாவை அழகன் ஆரோ கணித்து வீதிவலம் வரும் அற்புதக் காட்சியில் மெய்மறந்து உள்ளங்குளிர வீதி வலம் வருகிறோம்.

புராணகால சித்திரமொன்று எமது எண்ண அலைகளில் மோதுகிறது.

நாரதர் வேள்வி ஒன்று செய்கிறார். வேள்வியின் மத்தியில் மந்திர மாறுபாட்டால் அக்கினி குண்டத்தில் எழுகிறது செங்கட்கடா ஒன்று. வெளிவந்ததும் சினத்துடன் வேள்வியைச் சிதைத்து, அண்டங்கள் புவனங்கள் அத்தனையிலும் பாய்ந்து, அழிக்க முற்படுகிறது.

நாரதரும், அங்கு குழுமியிருந்த தேவரும், முனிவரும் ஆறுமுகப் பெருமானை அடைந்து கடாவை அடக்கி, அருள் பாலிக்க வேண்டும் என்று வேண்டி நிற்கின்றனர். பெருமானும், வீரவாகு தேவரைக் கொண்டு அதனைத் தருவித்து, தேவர்களும், முனிவரும் வேண்டிய வண்ணம் அதன் மீதிவர்ந்து அதனை அடக்கி திக்கெட்டும் நடத்தி விளையாடி, அதனை ஊர்தியாக்குகிறான்.

ஆறுமுகன் திருவிளையாடல் அல்லவா, இன்றைய உற்சவத்தின் உட்பொருள் என்று எண்ணியபடியே கந்தர்கலிவெண்பாவில் இக்காட்சியை,

''.............................................

நெருப்பில் உதித்து
அங்கட் புவன மனைத்தும் அழித்துலவும்
செங்கட் கிடாயதனைச்
சென்று கொணர்ந்தெங்கோன்
விடுக்குதி என்றுய்யப் அதன் மீதிவர்ந்து
எட்டுத் திக்கும் நடத்தி விளையாடிய நாதா'

என்று குமரகுருபர சுவாமிகள் கனிவோடு பாடிய அடிகளை நாமும் பாடிய வண்ணம் வீதிவலம் வரும் பெருமானைப் பார்க்கிறோம். மாவை ஆண்டவனே! அஞ்ஞான இருளில் அலமந்து அவலமுறும் எம்மையும் அடக்கி, எம்முள் புகுந்து, எம்மை நீ நடத்தி விளையாட மாட்டாயா? என்று மானசீகமாகக் கேட்டு, உள்ளம் உருகியபடி வீதிவலம் வருகிறோம்.

## 4. பிரணவ மூர்த்தி

இரண்டாம் நாள் உற்சவத்தில் மாவைப் பெருமான் கஜவாகனருடனுகக் காட்சி தருகிறான்.

அழகிய வெள்ளை யானையில் அமர்ந்து வீதிவலம் வரும் பெருமானின் அருட்கோலக் காட்சி, சொல்லொணாத ஆனந்தக் காட்சி.

கருத்தாளமான இந்த யானைவாகனத்தைப் பற்றிச் சிந்தித்த வண்ணம் பெருமானுடன் வீதிவலம் வருகிறோம்.

யானை எப்படிப் பெருமானுக்கு ஊர்தி ஆயிற்று என்பது எமது சிந்தனையைத் தூண்டுகிறது. அருணகிரியாரின் அற்புத வாக்குக்கள் எமக்கு அரணுகின்றன. சுவாமிகள்,

'நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே'

'' கொந்துவார் குரா அடி
நிழலிலும் அடியவர்
சிந்தை வாரிச நடுவிலும்
நெறிபல கொண்ட
வேத நன் முடியிலும்
மருவிய — குருநாதா''
'சுருதி முடிமோனஞ் சொல்
சிற்பரம ஞான சிவ
சமய வடிவாய வந்த
அத்துவிதமான பர
சுடரொளி யதாய் நின்ற நிட்கள
சொரூப முதலொரு வாழ்வே'

என்றெல்லாம் முருகப் பெருமானை வேதத்திலும், வேதத்தின் அடி, நடு, முடியிலும், முடியிலுள்ள மோனமான ஓங்காரத்திலும் இருப்பவனுகப் பாடுகிறாரல்லவா?

பிரணவமும், பிரணவப் பொருளும், பிரணவத்தினுள் இருப்பவனும் முருகனல்

லவா? பிரணவத்தின் ரூபம் யானை. பிரணவத்தின் மேல் இருப்பவன் முருகனல்லவா? ஆகவே யானை என்றும் பெருமானைத்தாங்கும் பேறு பெறுகிறதல்லவா என்னும் எண்ணம் மேலிட, பிரணவ யானையின் மேல் அமர்ந்திருக்கும் பெருமானைப் பார்க்கிறோம். பெருமான் ஓம் வடிவாய, பிரணவ மூர்த்தியாகக் காட்சி அளிக்கிறான். பெருமானை வணங்கி,

''காமியத் தழுந்தி – யிளையாதே
காலர் கைப்படிந்து – மடியாதே
ஓமெழுத்திலன்பு – மிகவூறி
ஓவியத்திலந்தம் – அருள்வாயே''

என்ற திருப்புகழைப் பாடுகிறோம். உணர்ச்சி பொங்கிவர

''ஓமெழுத்திலன்பு மிகவூறி
ஓவியத்திலன்பு தருவாயே.''

என்ற ஞான வாக்குகளைத் திரும்பத்திரும்பச் சொல்லியபடி பெருமானுடன் வீதி வலம் வருகிறோம்.

## 5. வேல் வாங்கு விழா

கந்தசஷ்டியின் மூன்றாம் நாள் உற்சவம் மிகச் சிறப்பான உற்சவம்.

'வேல்வாங்கு விழா' வாக முருகனடியார்கள் கருதி மகிழும் உற்சவம்.

பெருமான் 'இந்திர விமானம்' என்று சொல்லப்படும் கேடக விமானத்திலிவர்ந்து காட்சி அளிக்கிறான்.

வழமையாக அவன் கையில் துலங்கும் மரகத வேல் இன்று இல்லை என்பதை அவதானித்துக் கொள்கிறோம்.

பெருமானை உட்பிரகாரத்தில் உள்ள நடராஜன் சந்நிதிக்கு மேளவாத்தியங்களுடன் எழுந்தருளப் பண்ணுகிறார்கள்.

கண்டாமணி அடிக்க, வாத்தியங்கள் முழங்க, பக்த கோடிகளின் முருகநாம பஜனை பிரகாரம முழுக்க எதிரொலிக்க, ஆடலரசனுக்கும், அழகு முருகனுக்கும் சமகாலப் பூசை நடைபெறுகிறது.

அற்புதமான இப் பூசையில், மெய் சிலிர்க்க நின்று வணங்குகிறோம். அம்பிகைக்கும், நடராஜனுக்கும் நடுவே மரகத வேல் பூஜையில் இருப்பதையும் அவதானிக்கிறோம்.

பக்தி பரவசமான சூழலிலே தீபாரதனை முடிவடைகிறது.

தொடர்ந்து அந்த அற்புதக் காட்சி நடைபெறுகிறது. சிவனுக்குப்பூஜை செய்த சிவாச்சாரியார், வில்வமேந்தி பூசையிலிருந்த ''அநந்தகுணம்'' என்ற வேலை எடுத்து, மிகவும் பக்தியோடு வேத பாராயணத்துடன், முருகன் அமர்ந்திருக்கும் கேடகத்திற்கு எடுத்து வருகிறார்.

அடியவர் கூட்டம் அமைதியாக இந்தக் காட்சியைப் பார்த்த வண்ணம் நிற்கிறார்கள்.

கேடகத்தில் அமர்ந்திருக்குந் பெருமானின் கையில், அந்தச் சுடர்நெடுவேல் சாத்தப்பட்டு பெருமானுக்கு மலர் மாலையும் அணிவிக்கப்படுகிறது. உடனே பெருமானுக்குத் தீபாராதனை நடைபெறுகிறது. எங்கும் நிறைந்திருக்கும் பக்தர் கூட்டத்தில் எழுந்த 'அரோகரா' கோஷம் வான் முகட்டை எட்டுகிறது.

கண்கள் பனிக்க இந்த 'வேல்வாங்கு' காட்சியைக் கண்டுகளிக்கிறோம்.

பெருமானைத் திருவீதி உலாவரக் கொண்டு செல்கிறார்கள். எமது சிந்தனைகள் நாம் பார்த்துப் பரவசப்பட்ட நிகழ்ச்சியை அசைபோடுகிறது.

சிவன் அளித்த 'தனிச் சுடர்வேல்' பற்றி எமது எண்ண அலைகள் சுழல்கின்றன.

பெருமானுக்கு சிவனார் அளித்தவேல் மிகவும் சக்தி வாய்ந்த வேல். அது சிவனை நினைந்து வீசும் போதெல்லாம் பஞ்சபூதங்களையும் அழிக்க வல்லது. வரம்பல பெற்றவர் மேல் ஏவினாலும், அவர் வர பலம் குன்றிக்கெட்டு, அவர்களை அழிக்கும் சக்தி வாய்ந்தது. சர்வ ஆன்மாக்களையும் ஒருங்கே முடிப்பது. எப்படைக்கும் நாயகமாகிய

இச் 'சுடர்நெடுவேல்' என்ற புராணக் கருத்துக்கள் ஓங்கி வளர்கின்றன.

தேவசேனுபதியாக முருகன் புறப்படும் போது சிவபெருமான் இச் 'சுடர்நெடு வேலுடன்' வேறு படைகளையும், பூத கணங்களையும் அளித்தான் என்ற கருத்தும் வந்து போகிறது.

பதினெரு உருத்திரர்களையும் கொடி, தோமரம், வில், வாள், அம்பு, தண்டு, அங்குசம், குலிசம், வச்சிரம், தாமரை, மழு ஆக்கி. அவர்களை அறுமுகப் பெரு மானின் பதினேரு கரங்களுக்கும் வழங் கினன் அல்லவா?

முருகன் யுத்த சன்னத்தனுகப், புறப் படும் காட்சியைத் தானே, இன்று நாம் பார்க்கிருேம் என்ற எண்ணம் படருகிறது.

கேடகத்தில் எழுந்தருளி வரும் பெரு மானைப் பார்க்கிருேம். அவன் திருக்கையில் வேல் ஒழிவீசிப் பிரகாசிக்கிறது. இவ்வேல் எப்படிப்பட்ட வேல்?

ஆறணி செஞ்சடை அண்ணல் அளித்தி டும் பேறுடைவேல்! தெய்வேந்திர நகர் வாழ, அவுணர் குலம் அடியோடு மாள, கிரெளஞ்ச சயிலம் தவிடுபொடியாக, தாரகன் தலை கொய்ய, சிங்கன் சிரமறுக்க, சூரனைக் கூருக்க எழுந்த சுடர்வேல்! எப்படைக்கும் தலையாய, நாயகவேல்! ஆணவம் அழிக்கும் அயில்வேல்! அச்சம் அகற்றும் அற்புதவேல்! துன்பம் துடைக்கும் தூயவேல்! பசிதீர்க்கும் பக்குவவேல்! வழித்துணையாகும் வச்சிரவேல்! ஒப்பற்ற துணையாகும் ஓங்காரவேல்!
என்று எண்ணி, எண்ணி, மகிழ்கிருேம்.

''வீரவேல், தாரைவேல், விண்ணேர்சிறை
மீட்டவேல்
தீரவேல், செவ்வேள் திருக்கைவேல் – வாரி
குளித்தவேல், கொற்றவேல், சூர்மார்பும்
குன்றும்
துளைத்தவேல், உண்டே நமக்குத் துணை''

என்ற நக்கீரர் பாடலையும் பாடியவண் ணம் பெருமானின் திருவீதி வலத்தில் வந்துகொண்டிருக்கிருேம்.

## 6. தாரக வதம்

நான்காம் நாள் உற்சவத்தில் மாவைப் பெருமான் விடை ஏறி வீதிவலம் வருகி ருன். அமைதி சாந்தம், தவழும் திருமுகப் பொலிவுடன் ஏறூர்ந்த செல்வனைக் காட்சி கொடுப்பது, சிவனும் முருகனும் ஒன்றே, ஈருருவும், ஓருருவே அன்றி வேறல்ல என் எடுத்துவிளக்கும் அற்புதக் காட்சி, என்ற சிந்தனையோடு பெருமானு டன் வீதிவலம் வருகிருேம். சிந்தனைகள் விரிகின்றன.

அருணகிரிநாத சுவாமிகள்,
''பேத அபேதமொடுலகாய் வளர்வது,
பிந்துநாத
பேருமாய்க், கலையறிவாய்த், தூரிய
அதீதமாய்,
வினையேன், முடிதவப்பேறுமாய், அருள்
நிறைவாய், வளர்வது. ஒன்றுநீயே''

என்று, கதிர்காமத் திருப்புகழில் முரு கப்பெருமானின் பல்வேறு ரூபநிலைகளைப் பகுத்துக் கூறுகிருர். அத்தோடு,

''அகரமுமாகி, அதிபனுமாகி, அதிகமுமாகி,
அகமாகி
அயனெனவாகி, அரியெனவாகி, அயனெவாகி
யவர்மேலாய்
இகரமுமாகி, எவைகளுமாகி
இனிமையுமாகி வருவோனே.

என்று மூவர் முதலாய மூர்த்திகளுக்கு மேலானவன் முருகனே என்றும் கூறுகிரு ரல்லவா?'
கச்சியப்பசுவாமிகள், கந்தப்புராணத்தில்
''அருவமும் உருவமாகி, அநாதியாய்ப்
பலவாய் ஒன்ருய்ப்,
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர்
மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்
பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன்
உலகமுய்ய''

என்று அருபமாகிய பிரமம் முருகனுக உருவெடுத்தது என்ற முருகன் அவதார தத்துவம் கூறிவைக்கிருரல்லவா?

ஏகமான பரம்பொருளே பல்வேறு நாமங்களுடன் பல்வேறு ரூபங்களாக எழுந்தருளுகிறது. அதன் ஒரு ரூபம் சிவன், ஒரு ரூபம் சக்தி, ஒரு ரூபம் நாராயணன் ஒரு ரூபம் சிவசண்முகன். ஆயினும் இந்த ரூபங்கள் யாவும் முருகனில் அடக்கம் என்பதைக் கவிகுஞ்சரபாரதியார்

''முப்பத்து முக்கோடி தேவரும் உன்இதய கமலத்துள் அடக்கம்''

என்று சுருக்கமாகவே விளக்கிவிடுகிறு ரல்லவா?

ஆம், எங்கும் நிறைந்த சிவதத்துவமே சிவசண்முகன் என்பதில் சந்தேகமே இல்லை என்று எண்ணியபடி கீழைக்கோபுர வாயிலை அடைந்துவிடுகிறோம்.

அங்கே, போர்க்கோலம் பூண்டு நிற்கும் தாரகனை வடக்கு வீதி வழியாகக் கொண்டு செல்கிறுர்கள். பெருமான் வீதியை வலமாக வலம்வந்தால், அசுரன் இடமாக வலம்வருகிறுன். இதுதான் அசுர இயல்போ! என்று எம்மனம் அசைபோடுகிறது. மாறுபடு சூரனல்லவா, தாரகன்!

தென்கிழக்கு மூலையில் பெருமானைத் தாரகன் எதிர்த்துப் போராடும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பெருமானைச் சுற்றிச் சுழன்று முன்னும் பின்னுமாகப் பெரும் போர் செய்வதுபோல் பாவனை செய்த பின், வேலாயுதத்தால் அவன் தலைகுத்தி விழுத்தப்படுகிறது. சுவாமிக்கு தீபாராதனை நடைபெற்றதும் வீதிவலம் தொடர்கிறது. தாரகன் பற்றிய சிந்தனையுடன் நாமும் பெருமானுடன் வலம்வருகிறோம். புராணக் காட்சிகள் படருகின்றன எம் உள்ளத்தில்,

முருகனை எதிர்க்க வருகிறுன் தாரகன். களத்திலே முருகன் முன்னிலையில் தருக்குற்று நிற்கிறுன். குனிந்து, நிமிர்ந்து முருகன் தோற்றத்தைப் பார்க்கிறுன். அவன் உள்ளத்தில் தான் அழிந்துவிடுவேன் என்ற சபலம் உண்டாகின்றது. அவன் கண்ட பெருமானின் தோற்றத்தை,

'முழுமதியன்ன ஆறுமுகங்களும்
முந்நான்காகும் விழிகளின் அருளும்,
வேலும்,
வேறுள படையின் சீரும்,
அழகிய கரமீராறும்
அணிமணி தண்டையார்க்கும்
செழுமலரடியுங் கண்டான்''

என்று கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் பாடி,

''அவன் தவம் செப்பற் பாற்றே!''

என்றல்லவா வியக்கிறுர்.!

ஆம் தற்போதம் நிறைந்த தாரகன் பெருமானின் ''தண்டை ஆர்க்கும், செழுமலரடி'' கண்ட மாத்திரத்திலே நெகிழ்கிறுன், தவம்பல புரிந்த தாரகனல்லவா அவன்?

தொடர்ந்து அவன் நிலையைப் பாடும் கச்சியப்பர்,

''சிற்பரமூர்த்தி கொண்ட திருவுருவனைத்தும் நோக்கி
அற்புதமெய்தி நம்மேல் அமர்செய்ய வந்தானென்றுல்
கற்பனை கடந்த ஆதிக்கடவுளே,
இவன் கொல் என்றுன்''

என்று பாடிவைக்கிறுர்.

ஒரு சற்றுப் பொழுதுமட்டும் நிர்மலமான உள்ளத்துடன் பெருமானை உணர்ந்த தாரகன் மீண்டும் தற்போதம் தலைதூக்க எதிர்த்தான். மாயப் போர் பல புரிந்தான் இறுதியில் முருகன் வேலுக் கிரையானுன்.

''மாயையின் முதலோனுகி,
மால்முதலானேரை வென்று
ஆயிரத்தோ ரெட்டண்டம், அரசுசெய்யுகம் நூற்றெட்டும்
காயமதழி வின்றுகிக் கடவுளர்க்
கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்தாள்
சென்னிவைப்பாம்'

என்ற கந்தபுராணப் பாடல் எமது நினைவிலூசலாட வீதிவலம் வருகிறோம்.

## சிங்கன் தோற்றம்

ஐந்தாம்நாள் உற்சவத்தில் முத்துக் குமரன் வெண்புரவியேறி வீதிவலம் வருகிறான். குதிரை ராவுத்தன்போல் தலையில் பாகை அணிந்து கம்பீரமாகக் குதிரைச் சவாரி செய்யும் கோலம் கண்கொள்ளாக் காட்சியாக எம்மை ஈர்க்கிறது. இக்காட்சி பெருமான் துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்ய எழுந்தருளும் காட்சியாகவே அடியவர்கள் கொள்கிறார்கள்.

வெண்புரவிக் காட்சி, அருணகிரிநாத சுவாமிகளிடம் மீண்டும் எம் சிந்தனைகளை இழுத்துச் செல்கின்றன, சுவாமிகள் முருகனுக்கு உகந்த ஊர்தியாகிய மயிலை அதிகமான பாடல்களில் குதிரையாக உவமித்துப் பாடுகிறார்கள்.

'ஆடும்பரி' என்று கந்தரனுபூதியிலும்
''நடநவில் மயூர துரகம்''
'வெங்கலாப ஒரு பராக்கிரம துரகம்''
''சம்பரம்ம மயூரதுரகம்''
''பக்கரை விசித்திரமணி,
பொற்கலணை யிட்டநடை
பட்சியெனும் உக்ர துரகம்''
என்று திருப்புகழிலும் உவமிக்கிறார்கள்.

மேலும்........... கொடுஞ்சூர் நடுங்க
இடிக்கும் கலாப தனிமயில் ஏறும்
இராவுத்தனே!''

என்று கந்தரலங்காரத்தில் முருகப் பெருமானை 'இராவுத்தன்' அதாவது குதிரை வீரன், என்றும் அழைக்கிறாரல்லவா?

இன்றைய வீதிவலத்திலே பெருமான் தலைப்பாகை அணிந்த 'ராவுத்தனு'க் காட்சிகொடுத்துச் சிவபெருமான் மணிவாசகருக்காக நரியைப் பரியாக்கி, அரிமர்த்தன பாண்டியன் சபையிலே 'குதிரையேற்றம்' காட்டிய 'ராவுத்தன்' கோலத்தை ஞாபகம் ஊட்டுகிறானே என்று எண்ணியபடி மாவைப் பெருமானின் வீதிவலத்தில் கலந்து கொள்கிறோம்.

கீழைக்கோபுரவாயிலில் சிங்கமுகனைப் போர்க்கோல வடிவுடன் இடப்புறமாக வீதிவலம் வரச் செய்கிறார்கள்.

மாவைப்பெருமானின் ஊர்வலம் தெற்கு வீதியை அடைந்ததும் சிங்கமுகன் வருகிறான். அதிக நேரமாக இவ்வீதியில் போர் நிகழ்வதற்குரிய சம்பாவங்கள் நடைபெறுகின்றன. அடியார் கூட்டம் இடித்து நெருக்கியபடி சிங்கனின் ஓட்டம், சாகசம், ஆகியவை பார்த்து மகிழ்கிறார்கள்.

இறுதியில் சிங்கன் ஓடி மறைந்துவிடுகிறான் என்பது பாவனையாக அவனைப் பின்னோக்கி எடுத்துச் சென்றுவிடுகிறார்கள்.

இவற்றையெல்லாம் பார்த்து மகிழ்ந்த எம் எண்ணங்கள் சிங்கன் பற்றியே சிந்தனை செய்கின்றன. சிந்தனைகள் பரவப் பெருமானின் ஊர்வலத்தில் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறோம்.

சிங்கமுகாசுரன் மிகுந்த ஞானவான். அரனிடம் வரம்பெற்றபோது அவர் கூறிய '' நுங்களை, தாவிலாத நம்சக்தியொன்றே அலால் ஏவர்வெல்வார்'' என்பதை எள்ளளவும் மறக்காதவன். அவனை ''அறிஞரில் மிக்கான்'' என்று கச்சியப்ப சுவாமிகள் கூறுகிறார்கள். இவனுடைய அறிவின் சிறப்பாலே, இவன்தன் தமையனுக்குப் பல்வேறு உண்மைகளை இடித்துரைக்கிறான்.

சூரன் அமைச்சரவை கூடியபோது
''தன்னை நேரிலாப் பரம்பொருள்
தனியுருக்கொண்ட
தென்ன காரணம் என்றிமேல்,
ஐந்தொழில் இயற்றி
முன்னை ஆருயிர்ப் பாசங்கள் முழுவதும்
அகற்றிப்
பின்னை வீடுபேறருளுவான்
நினைந்த பேரருளே''

என்று முருகன் அவதார தோற்றத்தையும்,
''அருவுமாகுவன், உருவமுமாகுவன்,
அருவும்
உருவும் இல்லதோர் தன்மையுமாகுவன்,
ஊழின்
கருமமாகுவன், நிமித்தமும் ஆகுவன்
கண்டாய்
பரமன் ஆடலை யாவரே பகர்ந்திட வல்லார்''

''வேதக்காட்சிக்கும், உபநிடதத்துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்கும் காணலன, புதியரிற் புதியன்
மூதக்கார்க்கு மூதக்கவன், முடிவிற்கு முடிவாய்
ஆதிக்காதியாய் உயிர்க்குயிராய் நின்ற அமலன்''

'ஞானந்தான் உருவாகிய நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்து மென்றுலஃ, தெழிதோ
மோனம் தீர்கலா முனிவருந், தேற்றிலர் முழுதும்
தானும் காண்கிலன், இன்னமுந்தன் பெருந்தலைமை''

என்றெல்லாம் இறைவன் பெருமைகளை அசுரனுகிய சிங்கன் கூறித் தன் தமையனைப் பார்த்து

''கெடுதலில்லதோர் வளனெடுநீயும் நின்கிளையும்
படுதல் இன்றியே வாழ்தியென்றின்னன பகர்ந்தேன்
இடுதல் கொண்டிடு சிறையிடைத் தேவரையின்னே
விடுதல் செய்குதி யென்றனன் அறிஞரின் மிக்கான்''

என்று புத்தியும் கூறிவைக்கிருன்.

இவனைத்தானே இன்று நாம் பார்த்தோம் என்ற எண்ண அலைகளுடன் பெருமானுடன் வீதிவலம் வருகிறோம்.

## 8. சூர சங்காரம்

கந்தசஷ்டியின் ஆரும் நாள், ஆலயத்தில் பிற்பகல் இரண்டு மணிக்கே அடியார் கூட்டம் பெருகி நிற்கிறது. எங்கு பார்த்தாலும் ஆண்கள், பெண்கள் குழந்தைகளாக ஜனத்திரள் பொங்கி வழிகிறது.

கீழைக் கோபுர வாயில் மண்டபத்தை அடைகிறோம். சூரபத்மன் ஆரோகணித்து யுத்த சன்னத்தனுகக் கையில் பெரிய வில்லும் அம்பும், வாள், தண்டம் முதலியவையும் ஏந்திக் கம்பீரமாக நிற்கிருன்.

வாசலில் தேர் கட்டப்பட்ட மயில் வாகனம் வைக்கப்பட்டுள்ளது. மயில் அருகே சென்று, அதனையும் தேரையும் பார்க்கிறோம். சிந்தனைகள் படருகின்றன. முருகனுக்குகந்த ஊர்திகளாகிய ஆடு, யானை, மயில் ஆகியவற்றில் ஆடும், யானையும் முதலாம், இரண்டாம்நாள் உற்சவங்களிற் கண்டு தரிசித்தோம். இன்று மயிலேறிவர இருக்கிருன் முருகன் என்று எண்ணியதும், மயில் எப்படி ஊர்திஆயிற்று என்று சிந்திக்கிறோம்.

முருகன் குழந்தைப் பருவத்தில் ஏறி விளையாடிய மயில் பிரணவரூபமான ஆடும்மயில். ஆம். ஆடும் மயில் ஏறி உலகை வலம்வந்தல்லவா மாங்கனி வேண்டி நின்றுன்! பிரணவ மயில் என்பது தோகை விரித்து நடனமாடும் மயில், ஓங்கார வடிவாக, ஞானமூர்த்தி, தட்சிணமூர்த்தி சனகாதி முனிவர்க்கு உபதேசித்த சின்முத்திரை வடிவாயது இந்த மயில். இதனை ''ஆன தனிரூபமந்த்ரம், ஆடு மயில்'' என்று அருணகிரிநாத சுவாமிகள் கூறிவைக்கிருர். முருகன் முதல் நிலையில் ஏறி விளையாடியது பிரணவ மயில், இதனை 'மூலமந்திர மயில்'' என்று பெரியவர்கள் கூறி வைக்கிருர்கள்.

முருகன் இடைநிலையில் ஏறிய ஊர்தி, இந்திரமயில், சூரன் மாயப்போர் புரிந்த போது, காற்ருகக் கனலாக, விண்ணுக, மண்ணுக, கூற்ருகக், குறளாக, இருளாக, ஒளியாக, வளியாக, இன்னும் பல்வேறு மாயாஜால ரூபங்களில் தோன்றிச் சமர் புரிந்தான். ஒரு சமயம் சக்கரவாளப் பறவையாக விண்ணில் நின்று போர் தொடுத்தான். இதனைக் கண்ணுற்ற இந்திரன், நிலத்தில் நின்ற பெருமானை, மயிலாகச் சென்று, தன்மேல் சுமந்து, போர் செய்ய வைத்தான். முருகனும், இந்திரமயிலேறி அசுரனை அழித்தான் இம்மயிலை ''அமரேந்திர மயில்'' என்றனர் ஆன்ருேர்.

அசுரமயில் முருகன் மயிலேறிய மூன்ருவது நிலை. மாமரமாய்க் கடல்நடுவே நின்ற மாயச்சூரனை, முருகன் விட்ட வேல் இரு கூருக்கியது. ஒரு கூறு சேவலாக மாறி,

அவன் கொடியில் தங்கியது. மறுகூறு மயிலாக உருவெடுத்து முருகனைத் தாங்கும் பேறுபெற்றது. இதனை ஆன்றோர் 'அசுரேந்திர மயில்' என்றனர்.

மயில் பற்றிய சிந்தனைகளோடு வசந்த மண்டபம் வந்தடைகிறோம். பெருமானுக்கு ஆராதனைகள் முடிவடைந்து எழுந்தருளச் செய்துகொண்டிருக்கிறார்கள். பெருமானைச் சிரம்மேல் கைகூப்பி வணங்குகிறோம். சூர சங்கார மூர்த்தியாகக் காட்சிஅளிக்கிறான். மாவை முத்துக்குமரன் கையில் சிவன் அருளிய வேல் 'சுடர்நெடு வேலாகக் காட்சி அளிக்கிறது. வேலுக்கும் ஒரு வணக்கம் செலுத்துகிறோம்.

மேளவாத்யங்கள் முழங்கப் பெருமானை கோபுர வாயில் வழியாக எடுத்துச்சென்று மயில் மீது அமர்த்தி ஆராதனை செய்ததும், மயில், தேர் ஆகியவற்றுடன், பெருமானைத் தூக்குகிறார்கள். எங்கும் ஒரே 'அரோகரா' கோஷம் முழங்குகிறது.

சூரனையும் தூக்கி, வடக்குவீதி வழியே கொண்டுசெல்கிறார்கள்.

முருகநாம பஜனையுடன் பெருமானின் வீதிவலம் ஆரம்பிக்கிறது. நாமும் பெருமானுடன் வீதிவலம் வரும் பல்லாயிரம் பக்தகோடிகளில் ஒருவராக வீதிவலம் வருகிறோம்.

தென்பிரகார வீதியில் பானுகோபன் பெருமானை எதிர்க்கிறான். பெருமான் முன்னின்றும், அவனைச் சுற்றியும், பானுகோபன் தலையை ஆட்டி, ஆட்டிப் போர் செய்வதாகப் பாவனை நடக்கிறது. முன்னும் பின்னுமாக ஓடியபின், வேலாயுதத்தினால் அவன் தலை துண்டிக்கப்படுகிறது. எங்கும் ஆரவாரம் 'அரோகரா' கோஷம். பெருமானுக்குத் தீபாராதனை நடைபெறுகிறது. மீண்டும் வீதிவலம் தொடர்கிறது.

எமது சிந்தனைகள் பானுகோபன்மேல் படர்கிறது. சூரன் மகன் அவன். சிறந்த மகாவீரன். வீரமகேந்திரபுரிக்கு வருமுன்னே, முருகனை எதிர்த்துப் போர்புரிந்து ஆற்றாது புறங்காட்டி ஓடியவன், முருகப் பெருமானின் சக்தியை நன்குணர்ந்து தேவர்களைச் சிறைவிடுக்குதி என்று சூரனிடம் வேண்டி நின்றவன், இறுதியில் சூரன் தன் மானங்காக்க வேண்டி அழிந்தவன். இந்த எண்ணங்கள் சூழ்ந்துவர தென் மேற்குவீதியை அடைந்துவிடுகிறோம்.

இங்கே ஜனத்திரள் முண்டியடித்துக் கொண்டு நிற்கிறது. குழந்தைகள் உற்சாகமாக நடைபெறும் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தவண்ணம் இருக்கிறார்கள். பெரியவர்கள் பக்திசிரத்தையோடு பெருமானுடன் வலம் வருகிறார்கள்.

இதோ,

சிங்கமுகனைக் கொண்டுவந்துவிட்டார்கள். அவனை அங்கும், இங்குமாகச் சுற்றிச் சுழன்றுகொண்டு செல்கிறார்கள். பெருமானைச் சுற்றிச் சுழன்று தன் பயங்கர முகத்தை ஆட்டியபடி சிங்கன் போர் செய்வதாகப் பாவனை. முன்னும் பின்னுமாக ஓடியபின், சிங்கனைச் சுவாமிக்கு மிக அண்மையாகக் கொண்டு செல்கிறார்கள். தலை துண்டிக்கப்படுகிறது. பெருமானுக்குப் பலத்த அரோகரா கோஷத்துடன் தீபாராதனை நடைபெறுகிறது. சிங்கன் உடலத்தைப் பின்னோக்கியபடி எடுத்துச் செல்கிறார்கள்.

எமது எண்ண அலைகள் புராணகாலச் சிங்கமுகாசுரன் போர்பற்றிச் சுழல்கின்றன.

சூரன் அழைப்பின்பேரில் சிங்கன் தண்டம், நேமி, சங்கரன் அளித்த குலிசம், மாயை அளித்த மாயா பாசம் ஏந்திப் படைகள் பல சூழப் பத்துநூறுயிரம் பரிகள் பூட்டிய சித்திர மணித்தேரேறிக் களம் செல்கிறான். அங்கு,

"ஆயிர மாகின அகன்றலை கொண்டான்,
ஆயிர மாயிரம் அங்கை படைத்தான்,
ஆயிர மேற்படும் அண்டமும் வென்றான்,
ஆயிரம் யோசனை யாவுயர் மெய்யான்"

செங்கட்சியமாகிய பயங்கர ரூபத்துடன் கடும்போர் நிகழ்த்துகிறான். திக்கெல்லாம் தீக்கனல் பறக்கச் சிங்கமுகன் எதிர்த்து வந்த பூதப்

படைகளை வாரி, வாரிக் குழுக் குழுவாகத் தன் இரண்டாயிரம் கைகளால், வீசுகிறன். அவன் வீச, வீச, அண்டகோளங்கள் புவனங்கள் எங்கும் பூத உடல்களாயின. சிலரைமிதித்துக் கொல்கிறன். பலரைத் தன் வாளால் கண்டதுண்டமாக்குகிறன். எங்கும் குருதிவெள்ளம் பாய்ந்தோட

''ஆயிர முடியின் மௌலி
அண்டத்தின் முகட்டை நக்க
பாயிருங்கரங்கள் அண்டப்
பாங்கரை அலையப்பாருட்
போயின் பதங்கள், அண்டத்
தடியினை பூழைசெய்ய
மாயையின் இளையவாறேர்
வடிவுகொண் டார்ந்து வந்தான்''

இறுதியில், பயங்கர யுத்தம் செய்த சிங்கன் மீது முருகன் குலிசாயுதத்தை ஏவி, அவனை அழித்த காட்சிகள் யாவும் எம் கருத்து அலைகளில் மோத, மோத, மாவைப் பெருமானின் வீதி வலத்தில் வந்துகொண்டிருக்கிறேம்.

மேலை வீதி மத்தியில், சூரனை இந்திர ஞாலத்தேரோடு கொண்டுவருகிறர்கள். போர் புரிவதுபோலப் பாவனை செய்து பெருமானைச் சுற்றிச் சுற்றித் தலையாட்டியபடி சூரனைத் தூக்கிச் செல்கிறர்கள். பெருமானை நெருங்கி வந்ததும் வேலால் அவன் இந்திரஞாலத்தேர் உடைபடுகிறது. மீண்டும், வாள், வில் தண்டு, சால்வை ஆகியவை ஏந்திவந்தவனின் ஆயுதங்கள். சால்வை ஆகியவை பெருமானிடம் பறி போகின்றன.

வடமேற்கு வீதியில், தன்னந்தனியாகச் சூரன், ஆயுதமின்றிப் பெருமானைச் சுற்றி வருகிறன். அவனுக்கு பெருமான் தன் திருப்பெருவடிவம் காட்டியதைப் பாவனை செய்கிறர்கள்

சிறிது நேரம். பெருமான் முன்னிலையில் நின்று வணங்கிய சூரனைப் பின்வாங்கிச் சென்று மாமரத்தில் மறைந்தபடி திரும்பவும் எடுத்து வருகிறர்கள். வெகு அகோரமாகப் போர் நடைபெறுவதாக வடக்கு வீதியில் சுவாமியும் சூரனும் இடம் வலமாகச் சுழன்று போர் செய்யும் பாவனை நடைபெறுகிறது. பெருமானும் சூரனும் மிகநெருங்கி, நெருங்கி நின்று போர் புரிவதுபோல சூரனையும் பெருமானையும் மிக, மிக நெருக்கமாகக் கொண்டு வந்து பின் பிரிந்து போகிறர்கள், தூக்கி வருபவர்கள், பக்தர்கள், குழந்தைகள் யாவரும் மெய் மறந்து இவ்வற்புதக் காட்சிகளைப் பரவசமாகப் பார்த்து நிற்கிறர்கள்.

இறுதியில், மணிகள் அடிக்க, வாத்தியங்கள் முழங்க, அரோகரா கோஷம் வானைப் பிளக்க, வேலாயுதப் படையினல் மாமரம் துண்டுபடுகிறது, சூரனும் வெட்டி வீழ்த்தப்படுகிறன். எங்கும் ஒரே ஆரவாரம், பரவசம், மெய்சிலிர்க்க பெருமானுக்கு நடைபெறும் தீபாராதனையைத் தெரிசிக்கிறேம். லௌகீகத்தில் அல்லும், பகலும், அனவரதமும் தோய்ந்து வாடும், எமக்கு, ஒரு சிறிது பொழுது கருணைக் கடலின் அருளாடற் காட்சி கிடைக்கும் வாய்ப்புப் பெற்றேமே என்று மனம் நெகிழ்கிறேம்!

வீதிவலம் தொடர்கிறது மெதுவாக. எமது எண்ண அலைகளும், புராண காலத்தில் நடைபெற்ற போர்க் காட்சிகளுக்குத் தாவுகிறது.

தன்னிகரில்லாத் தாரகனை இழந்து, சுத்த வீரன் சிங்கமுகனை இழந்து, மக்கள் சுற்றம் இழந்து மந்திரிமாரை இழந்து, தானை சேனை இழந்து, நின்ற சூரனைத் தட்டி எழுப்பியது தன்மானம், ஆட்டிப் படைத்தது ஆணவம். தேரேறி மீண்டும் களம் சென்று எதிர்க்கிறன் பெருமானை.

''காலமாய்க் காலமின்றிக்
கருமமாய்க் கரும மின்றிக்
கோலமாய்க் கோலமின்றிக்
குணங்களாய்க் குணங்களின்றி
ஞாலமாய் ஞாலமின்றி,
அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இருந்த வள்ளன்,
மூவிரு முகங்''

கொண்டு சூரனுடன் போர்புரிகிறன். கடும்சமர் விளைகிறது இருவரும் விட்ட கணைகள்.

"வான் மறைத்தன, மாதிரம் மறைத்தன,
மதிதோய்
மீன் மறைத்தன, கதிர்வெயின்
மறைத்தன வேலை
தான் மறைத்தன, வசுமதி மறைத்தன,
தருவார்
கான் மறைத்தன, வரைகளை மறைந்தன''

போரிலே கொடி, குடை, வாள், தண்டம், வில், ஆகிய யாவையும் இழந்து நின்ற சூரனுக்கு நல்லுணர்வு வர முருகன் தன் விசுவரூபம் காட்டுகிறான்.

ஆம் பெருமான்,

''புண்டரீகரண்டமும், கொண்ட பகிரண்டமும் பொங்கியெழக்'' கடல், உலகம், திக்கு, புவனம், அண்டம், தேவர்கள், உயிர்கள் யாவும், அறுமா முகவன் திருமேனியில் அடங்கினவன்றி வேறில்லை என்று சொல்லக்கூடிய வியன் பெரு வடிவு கொண்டான்.

அவுணர் கோனாகிய சூரபத்மன், இவ்வரும் பெரும் அற்புதக் காட்சியைத் தன் கண்ணாரக் காண்கிறான். என்றும் தலையே குனிந்தறியாத தானவன் தன் தலைகுனிந்து இப்பெருவடிவினைப் பாதாதிகேசம் வரை பார்க்கிறான்! பகுதி, பகுதியாக; நிதானித்து, நிதானித்துப் பார்க்கிறான்!

இப்பெருவடிவத்தின், உள்ளடியிலே சகல மலைகளையும், திருவடியின் புறப்பாகத்திலே சகல சமுத்திரங்களையும், திருவடியின் விரல்களிலே இடி, நட்சத்திரங்கள், கிரகங்களையும், அழகுப் பரல்களில் வருணன், குபேரன், நிருதி, இருடி, இராட்சதர் ஆகியோரையும் கணைக்கால்களிலே முனிவர்களையும், சிந்தாமணி போன்ற தெய்வமணிகளையும், முழந்தாளிலே வித்யாதரர் வானவர் ஆகியோரையும், தொடையிலே இந்திரனையும் அவன் மகன் சயந்தனையும், தொடை மூலத்தில் இயமனையும், காலனையும், அரையின் முற்பகுதியில் அசுரர்களையும், விலாப் புறத்தில் தேவர்களையும் சூரபத்மன் கண்டு மலைக்கிறான்.

மீண்டும் தொடர்ந்து பார்க்கிறான்

மூலாதாரத்தில் நாகரையும், கோசரையும் கோசநுனியில் அமிர்தத்தையும் நாபியில் ஜீவராசிகளையும், மார்பில் சகல கலைகளையும், முப்புரிநூலில் ஞானத்தையும் நுனி மயிரில், சகல அண்டங்களையும், உள்ளங் கையில் சகல போகப் பொருட்களையும், தோள்களில் நாரணன், நான்முகனையும், கண்டு சூரபதுமன் அதிசயிக்கிறான்!

மீண்டும் தன் பார்வையை மேலே செலுத்துகிறான்.

பெருமான் கைவிரல்களிலே தெய்வப் பெண்களையும், கண்டத்தில் நாதத்தையும் அக்கினியைம், பற்களில் எழுத்துக்களையும், நாவில் சிவாகமங்களையும் உதட்டில் ஏழுகோடி மந்திரங்களையும், நாசியில் வாயு தேவனையும் கண்டு உள்ளம் பொங்க மீண்டும் தலையை உயர்த்திப் பார்க்கிறான்.

அனைத்துமாய்த் தோன்றும் இப்பெருந் திருவுருவின் சிரசுப் பகுதியைப் பார்க்கிறான். அங்கே, கண்களில் சூர்யசந்திரர்களையும், காதுகளில் திக்கெட்டும் விளங்கும் நூறாயிரம் உருத்திரர்களையும், நுதலிலே ஓங்காரப் பிரணவத்தையும், சென்னியிலே சிவப்பரஞ்சுடரையும், கண்டு தன்வயமிழக்கிறான்.

தேவாதி தேவருக்கும் தேர்ந்த பல ஞானியருக்கும் காணக்கிடைக்காத காட்சிப் பேறைக் கண்ணுற்றதானவர் தலைவன். தன்னை மறந்து, தன் சூழலை மறந்து, தான் செய்யவந்த போரை மறந்து, களிவிரக்கத்தோடு பாடிப் பரவுகின்றான்.

''கோலமா மஞ்ஞை தன்னிற்
குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன்,
அந்நாட் பரிசிவையுணர்ந்திலேன் யான்
மாலயன் தனக்கும், ஏனை
வானவர் தமக்கும், யார்க்கு
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி
இம்மூர்த்தி அன்றோ!''

தான் பெற்ற இப் பேரின்பக் காட்சி வேறு யாராலும் பெறமுயாது என்று பெருமை கொள்கிறான்.

''எண்டரு விழிகள் யாக்கை
எங்கணும் படைத்தோர்க் கேனுங்
கண்டிட அநந்த கோடி கற்பமுங்
கடக்கும் அன்றே.''

என்று கூறி

''சீர்க்குமரேசன் கொண்ட
திருப்பெரு வடிவந் தன்னில்
ஏர்க்குறும், ஒளியுஞ், சீரும்,
இளமையும், எழிலும், எல்லாம்
ஆர்க்குள உலகில் அம்மா!
அற்புதத்தோடும் பல்காற்
பார்க்கினுந் தெவிட்டிற்றில்லே,
இன்னு மென் பார்வைதானும்

என்று பெருமானின் திவ்வியவடிவிலே திளைத்துநின்று மேலும் இச் சௌந்தர்ய வடிவை.

''ஆயிர கோடிகாமர்
அழகெலாந் திரண்டொன்ருகி
மேயின எனினுஞ் செவ்வேள்
விமலமாஞ் சரணந்தன்னில்
தூய நல்லெழிலுக்காற்ரு
தென்றிடின் இளைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம்
உவமையார் வகுக்கவல்லார்'',

என்று வியந்து நயந்து போற்றுகிருன் மேலும்

''அண்ணலார் குமரன்மேனி
அடிமுதல் முடியின் காறும்
எண்ணிலா வூழிகாலம்
எத்திறம் நோக்கினுலும்
கண்ணினுல் அடங்கா
துன்னிற் கருத்தினுல் அடங்காதென்பால்
நண்ணினன் அருளுக்கென்கை
அருளென நாட்டலாமே.

எனத் தான்பெற்ற இன்பத்தைத் தனக்குக் கிடைத்த அருட்பேருகக் கருது கிருன். உடனே,

''போயின அகந்தை, போதம்
புகுந்தன, வலத்ததான
தூயதோர் தோளுங் கண்ணுந்
துடித்தன, புவனமெங்கும்
மேயின பொருள்கண் முற்றும்
வெளிப்படு கின்ற விண்ணேர்
நாயகன் வடிவங்கண்டேன்
நற்றவப் பயதனீன்ரே.

என்று இறும்பூதுகின்ற நிலையை அடைகின்ருன். அந்த வேளையில் அவன்

''சூழுதல் வேண்டும் தாள்கள்,
தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி,
துதித்திடல் வேண்டுற் ருலுஞ்
ஆழுதல் வேண்டுந் தீமை,
அகன்றுநாந் னிவற்காளாகி
வாழுதல் வேண்டும்'' என்று சிந்தித்தவன்
''நெஞ்சம் தடுத்து மானம் ஒன்றே''
என்று முத்தாய்ப்பு வைக்கிருன்.

மூலவாசனை, சூலவாசனை முந்திநிற்கத் தன்மானம் தலைதூக்க, மீண்டும் தன் பழைய ஆணவ நிலைக்கு வந்துவிடுகிருன். தான் இந்தவேளையில் சரண் புகுந்தால் ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் பரந்த தன் புகழ், வீரம் ஆகியவை அழிந்துவிடுமே என்றஎண்ணம் மேலிட, மீண்டும் போர் தொடுக்கிருன் பெரும் போர் நிகழ்ந்து, சூரன் மாமர உரு எடுத்து, முருகப் பெருமான் வேலால் அழிந்தொழிகிருன். அவன் எடுத்த மயில், சேவல் வடிவங்களுடன் பெருமானை அடைந்து பேறு பெறுகிருன்.

எமது சிந்தனையிலே புராணசித்திரங்கள் படர வீதிவலம் வந்த நாம் திருக்கோயில் வாயிலை அடைந்துவிடுகிறேம். பெருமானும் வாயிலை அடைகிருன். அற்புதமான அவ்வேளையிலே

''தீயவை புரிந்தரேனும்
குமரவேள் திருமுன்னுற்ருல்
தூயலராகி, மேலைத்
தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ
அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்ரே
வரம்பிலா அருள்பெற்றுய்தான்,

என்று பாடிப் பெருமானை வணங்கி விடை பெறுகிறேம்.

## 9. தெய்வநாயகி திருமணம்

கந்தசஷ்டி விழாவின் ஏழாம் நாட் காலை, ஆலயத்தில் தீர்த்தத் திருவிழா நடைபெறுகிறது. ஆறு நாட்களும், கந்த மகாவிரதம் அனுட்டித்த ஆயிரமாயிரம் அடியார்களை, ஆட்கொள்ளும் அற்புத விழாவாக இது நடைபெறுகிறது.

பெருமான் அசுரேந்திர மயிலேறி, மின்னொளி வேலும், செஞ்சேவற் கொடியும் கரத்தேந்தி, எழுந்தருளி ஆலயத் திருமஞ்சனக் கிணற்றில் தீர்த்தமாடி, அடியார்க்குக் காட்சி கொடுத்து வீதிவலம் வருகின்றான்.

வீதிவலம் முடிவடைந்தபின், ஆறுநாட் காலையில் நடந்து வந்த திருச்செந்தூர்ப் புராணபடனம் நிறைவேற்று விழா அடியார் மத்தியில் நடைபெறுகிறது.

அதன்பின்னர், விரதமனுட்டித்த அடியார்கள் அத்தனை பேரும் சிவாச்சாரியர்களின் ஆசி பெற்றுத் தமது விரதபூர்த்தியைச் செய்து கொள்கிறார்கள். இவை யாவற்றையும், கண்டு களித்து, ஆனந்த பரவசத்துடன் அன்று மாலை நடைபெறவிருக்கும் தெய்வயானையம்மை திருக்கல்யாண விழா பற்றிய நினைவுகளுடன் வீடு திரும்புகிறோம்.

மாலை ஆறு மணிக்கு ஆலயமடைகிறோம். மாவை ஆலய வசந்த மண்டபம் வாழை கமுகு, மாவிலை, தோரணங்கள், மின்தீபங்கள் ஆகியவற்றால் அலங்கரிக்கப், பட்டு கல்யாண மண்டபமாகக் காட்சியளிக்கிறது. உட்பிரகார வாசலில் ஊஞ்சல் அமைக்கப்பட்டிருக்கிறது. ஊஞ்சலின் முன்னே திருமண விழா அக்கினி காரியங்கள் நடைபெறப் பூரணகும்பங்கள், ஓமகுண்டங்கள் ஆகியவையும் தயார் செய்யப்பட்ட யாகசாலை அமைக்கப்பட்டுள்ளது.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் பெருந்திரளாகக் குழுமியிருக்கிறார்கள். நாதஸ்வர இசை முழங்கிக்கொண்டிருக்கிறது. எங்கும் ஓர் பரவச நிலை காணக் கூடியதாக இருக்கிறது. நாமும் தெய்வத் திருமணம் காண ஊஞ்சலுக்கு அருகே இடந் தேடி அமர்ந்திருக்கிறோம். ஆறரை மணிக்கு வசந்தமண்டபக் கோவிலிலிருந்து விநாயகர், முத்துக்குமரர், மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆகிய மூர்த்திகளைக் கல்யாணம் நடைபெற இருக்கும் ஊஞ்சலுக்கு எழுந்தருளச் செய்கிறார்கள். மூர்த்திகளை யாகசாலையை வலம்வரச் செய்து முத்துக்குமரனை ஊஞ்சலிலும், விநாயகர், சிவன் ஆகியோரை வலம், இடமாகவும் அமர்த்துகிறார்கள். ஆராதனைகள் ஆரம்பமாகின்றன. அடியார்கள் கண்களெல்லாம், அமர்ந்திருக்கும் மூர்த்திகளைப் பார்த்துத் துதித்த வண்ணம் இருக்கின்றன. இசை வெள்ளம் பெருகி, காற்றினிற் பரவி, எமது உள்ளத்தில் நிறைந்த வண்ணமிருக்க ஊஞ்சற் பலகையிலிருக்கும் மாவை முத்துக்குமரனைக் கண்குளிரப் பார்க்கிறோம். பாதாதிகேசம்வரை பார்க்கிறோம். உள்ளமெல்லாம் கொள்ளை கொள்ளும் அற்புதக் கோலத்தில் சர்வலங்கார பூஷிதனுகக் காட்சி கொடுக்கிறான் மாவை அழகன். திருக்கரங்களில் வேலும், கோழிக்கொடியும், அவன் மார்பிலே பதக்கம், முத்தாரம், மணிமாலை, உருத்திராட்சம் அவன் நெற்றியிலே பட்டம் சுட்டி, இடுப்பிலே பஞ்சகச்சம், தலையில் ஜரிகை மடித்த தலைப்பாகை அத்தனையும் அணிந்து, மலர் மாலைகள் பல சூடி, முழுது மழகிய கல்யாண சுந்தரனுக எழுந்தருளியிருக்கிறான். இவ்வற்புதக் காட்சியைத்தானே

''கமல முகமும், கோமளத் திலங்கும்
நகையும்
நெடுங்கண்ணும், காதில் துலங்கும்
கனகக் குதம்பையும்
தோடும், வஜ்ர அங்கதமும், அடர் சுடர்
வேலும்
கடிது உலகங்களும் தடியிட்டு வந்த
மயிலும், இலங்கும்
அலங்காரப் பொற்சதங்கையும் கழலொலி
தண்டையங்
காலும், ஒக்க வந்து வரமெனக்
கருள்கூர்வாய்

என்று மதுரகவி பாடிப் பேரானந்தப் பெருவெள்ளம் மூழ்கி அரிய தமிழ் ஓசை ததும்பும், ஒலிவசன வாக்குகளால் செஞ்சொல்சேர் சித்திரத் திருப்புகழ் பதினாறாயிரம் பாடிய அருணகிரிநாத சுவாமிகள் வேண்டி நிற்பது எமது கருத்தில் உதிக்கப் பெருமானை வணங்குகிறோம்.

அற்புதமான இசைவெள்ளம் தோடி ராகமாக எமது காதிலே வந்து புக, அங்கு நடைபெறும், திருமணச் சடங்குகளை அவதானிக்க முற்படுகிறோம்.

உட் கோயிலிலிருந்து மேள வாத்தியம் முழங்க தேவசேனையை எடுத்து வருகிறார்கள். வலமாகக் கொண்டு வந்து சிவன்பார்வதிக்கு அருகே நிறுத்துகிறார்கள். தேவியின் திவ்விய சுந்தரவடிவைக் கண்குளிரப் பார்க்கிறோம். அழகே உருவான திருமணப் பெண்ணாக, செந்நிறப்பட்டணிந்து, தலையில் பொற்கிரீடம், காதில் தோடு, கரத்தில் கமலமலர், மேனி முழுவதும் பல்வேறு ஆபரணங்கள், இடையில் ஒட்டியாணம் அணிந்து அமைதி தவழும் புன்னகை அரும்ப, அமரர் கோன்மகள் காட்சி கொடுக்கிறாள். எமது உள்ளங் கரைகிறது. அழகனுற்கேற்ற அழகியாகவே, அமுதமாது தோற்றமளிக்கிறாள்.

சிவனுக்கும், உமைக்கும் தீபம் காட்டப்பட்டபின் முருகனுக்கும் காட்டப்படுகிறது. புராணகாலத் திருப்பரங் குன்றத் திருமண நிகழ்ச்சியொன்றின் பாவனை ஒன்று நடைபெற்றது என மனமகிழ்கிறோம். அங்கே இந்திரன் தனது செல்வத் திருமகளை அழைத்து வருகிறான். தேவசேனை தனது மாமன் மாமியராகிய சிவனுக்கும் பார்வதிக்கும் வணக்கம் செலுத்தியபின் முருகனை நோக்கி வெகுவாக நாணங்கொள்கிறாள் என்பதை,

''அணங்கு தன்னுடன் ஆதியந்தேவனை
வணங்கி, வேலுடை அண்ணலை நோக்கியே
சுணங்கு சேர்முலை துள்ளென வெள்கினாள்''

•

எனவும் அதை மறைக்கச் சிவபார்வதியை வீழ்ந்து வணங்கினாள் எனவும் கந்தபுராண சித்திரம் காட்டுவது, கருத்தில் வருகிறது. பரங்கிரி புராணத்தில், இந்நிகழ்ச்சியில் சிவன் பார்வதிக் கருகில் அமர்ந்த தெய்வயானை, வெட்கம் மேலிடத் தலைசாய்த்து வெட்கத்தோடு கடைக் கண்ணால் முருகனைப் பார்த்தாள் என்பதை தன் திருமுகம் சாய்த்திருத்தபின், கடைக் கண் தழைத்த ஆதாரத்தொடு பார்த்தாள்' எனவும், முருகப்பெருமானும் தன் பன்னிரு விழிமலராலும் தெய்வயானையைப் பார்ப்பதை,

''அக்கணம் இளமை அழகுடன் ஒழுக
அண்ணல்
பன்னிரண்டு கண்கடையா மிக்கதோர்
கருணைக் கடலெனப் பெருகி வெள்ளம்
ஊற்றெழுந்து
மிக்கொழுக பக்கம் வீற்றிருந்த கிளிதனைப்
பார்த்தான்''

என்று பாடப்பட்டிருப்பதும் எமக்கு கருத்தில் படுகிறது.

அக்கினி காரியங்கள் முடிவுற்றதும், வேதியர் மங்கலநாணை எடுத்து முருகன் திருக்கையில் வைத்து மந்திரங்களை உச்சரித்துத் தேவியின் கழுத்தில் சாத்திவிடுகிறார். மங்கள வாத்யங்கள் முழங்குகின்றன. அடியவர்கள் ஆனந்தத்தோடு 'அரோகரா' எனக் கோஷிக்கிறார்கள். பெருமானுக்கும், பெருமாட்டிக்கும், மலர்மாலைகள் சாத்தித் தீபாராதனைகள் நடைபெறுகின்றன. மெய் சிலிர்க்க இக்காட்சியைக் கண்டு களிகூர்ந்த எமது எண்ண அலைகள் மீண்டும் புராண காலத் திருப்பரங்குன்றத் திருமணக் காட்சிகளை நாடுகின்றன.

அங்கே, திருமணச் சடங்கியற்றிய பிரமதேவர் தான் சிருஷ்டி செய்த மங்கல நாணை முருகன் கையிலிட, பெருமான் அதை வாங்கிப் பெருமாட்டியின் கழுத்தில் அணிந்து, அவள் தலைக்குப் பூச்சூடியதைச்

''செங்கமலத் திறை சிந்தையில் ஆற்றி
அங்கையில் ஈந்திட ஆண்டகை கொண்ட
மங்கல நாணை மணிக்களம் ஆர்த்து
நங்கை முடிக்கோர் நறுந்தொகை
சூழ்ந்தான்

எனக் கச்சியப்பர் பாடுவது கருத்தில் வருகிறது

மேலும்,

சுருதிமறை பிலிற்றியிடுஞ் சதுர்முகனார்
சடங்கியற்றத் தோகை பாகன்
கருதிவிழி விருந்தருந்தக் கண்ணிறைந்த
மேனியாள்கை நீர்வார்ப்பத்
தகுதி யெனக் கையேந்திப் பரிதிமதி
விளக்கேந்தத் தந்தி மாதை
வருதியெனக் கைபிடித்துப் பரங்கிரியில்
மணந்தவனை வணக்கம் செய்வாம்

எனப் பிரம்மா திருமணச் சடங்கியற்ற சிவபார்வதி ஆகியோர் கண்டுகளிக்க, ஆயிரங் கண்ணுடை அண்ணல் இந்திரன் தாரைவார்க்கச் சூரிய சந்திரர்கள் ரத்ன தீபம் காட்டத் தேவகுஞ்சரியை மணம் செய்துகொண்டான், என்ற பரங்கிரிப் புராணச் செய்யுளும் கருத்தில் தோன்றுகிறது.

திருமணச் சடங்குகள் அம்மி மிதித்தல் முதலியவற்றை ஆவாகன கும்பங்கள் மூலம் வேதியர்கள் செய்துமுடிக்கத் தெய்வயானை திருமணம் இனிது நிறைவேறுகிறது.

## 10. விழா நிறைவு

வேதமழை பொழியும், ஞானத்தல மான மாவைப்பதியில், அஞ்ஞான இருள கற்றும் மெஞ்ஞான மூர்த்தியாகக் காலங் காலமாகக் கந்தவேள் அருள் சுரக்கிறுன். இத்தொன்மைத் திருப்பதியின் கருத்துமிகு கந்தசஷ்டி விழாவிற் கலந்து இன்புற்றோம். எம்மை மறந்த லயத்திலே பெருமானின் அருட்காட்சிகளைக் கண்குளிரக்கண்டு, கண்டு உள்ளம் குளிர்ந்தோம். கருத்தில் நிறுத்தி மகிழ்ந்தோம். இன்பக் கடலாடி எமக்கு இனியவனுன மாவை முருகனின் அருட் பேறு பெற்றோம். இருள்கவிந்த எம் வாழ் நாளில் ஒளிவீசும் நாட்களாக இக்கந்தசஷ்டி விழாவும், அதன் இனிய காட்சிகளும், பஜனைகளும், சொற்பொழிவுகளும், இசை நிகழ்ச்சிகளும், எமது நினைவிலே நீக்கமற நிறைந்து நிற்குமல்லவா! ஆகவே மாவைப் பெருமானை,

"வேறுன பாவங்கள் செய்தபே ரென்னிலும்
மெஞ்ஞான வள்ளலே யுன்
மேலான சந்நிதி யடைந்தபேர் தூயராய்
மிகுவாழ்வு பெறுவர் என்கை
தேரு தெதிர்த்து முன் மாரு சமன் செய்த
தீரமிகு சூரனுக்குந்
திருவடி பரிந்திடும் பேறுதந்திடு மருட்
செய்கையா லினிதுணர்ந்தோம்
நீருடி மைந்தனே! யாறுன வக்கர
நிறைந்த வோங்கார வொளியே!
நின்னடித் தொண்டுபுரி யேழையடி யேங்கட்கு
நீ யிரங்காத தென்னே!
மாருத பிணிமாற்று நகுலமலை யருவியுடை
மருவிடும் மாவை நகர்வாழ்
மங்கையுமை பாலனே! செங்கை வடிவேலனே
மயில் வாகனக் கடவுளே!.

என்ற சோமசுந்தரப் புலவர் பாடலால் ஏற்றிப் போற்றி; அடுத்த கந்தசஷ்டி விழாவில் அடியேம் கலந்து பேறுபெற அருள் புரிய வேண்டி விடைபெறுவோமா?

**பொன். சோமசுந்தரம்**

---

### "திருமேவுமொரு மாவை வருமான்ம நாயகன்"

ஒருமா முகம்வள்ளி யுறவாட, வொருமுகம்
உறுதேவர் குறை வினவ, வோ
ரொருமுக மெழுங்கன்ம முங்கரித் துறுமநிக
மொருமுகங் களங்கறுவ வப்
பெருமா மனத்துளார் மருவார் குலப்பெருமை
பெறு மாவை யந்தணர் சீர்ப்
பெருவேள்வி யோர்த்து மகிழொருமா முகத்திநெடு
பேதித்து வாதித் தருங்
கருமாசறுத்து நமர் பெருவாழ்வு காணவருள்
கருணைப் பிரவாக முகமுங்
காண்பினிய வறுமுகக் காட்சி தந்தணிவீதி
கனமணித் தேரி வர்ந்து
திருமா பவனி தெருவூர வருமண்ணல்
சிறு தேருருட்டி யருளே!
திருமேவு மொரு மாவை வருமான்ம நாயகா
சிறு தேருருட்டி யருளே!

மாவை பிள்ளைத் தமிழ்
**பண்டிதர். மு. கந்தையா**

# பழமுதிர் சோலை

## ஆசிரியர் T. சுப்பிரமணியம்

திருமுருகாற்றுப்படையிலே கூறப்பட்ட ஆறுபடை வீடுகளில் இறுதியாகக் கூறப் படுவது பழமுதிர்சோலையே. முருகனை அடைய வேண்டும் என்ற ஆசை எழுமானால் அதனை இக்கணமே நீ பெறலாம். அவன் எழுந்தருளியிருக்கும் இடங்கள் பல. அவற்றில் ஒன்று பழமுதிர்சோலை என்கிறார் நக்கீரர். தமிழுக்குரிய அர்ச்சனை மந்திரங்கள் இப்பகுதியில் கூறப்பட்டிருக்கிறது. முழுவதையும் பாராயணம் செய்யாவிடினும் பழமுதிர்சோலைப் பகுதியில் உள்ளவற்றைப் பாராயண்ம் செய்து பயனடைந்தோர் பலர் சிவஸ்தலங்களிலே சிதம்பரம் எவ்வளவு சிறப்புப் பெறுகிறதோ அதேபோல முருகஸ்தலங்களில் பழமுதிர்சோலை சிறப்புப் பெறுகிறது. சிவன் பஞ்சகிருத்தியங்களை நடனமூலம் செய்கிறார். மக்கள் இருதயத்திலே அந்த நடனம் நடைபெறுகிறது. அதேபோல மக்கள் இருதயத்திலே மயில் நடனமிடுகிறது. இருமாதர் புடைசூழ முருகன் மயிலின் மேல் இவர்ந்து காட்சிஅளிக்கிறான். ஔவையாருக்கு நாவல் மரத்தின் கீழ் இக்காட்சி கிடைத்திருக்கிறது.

''செககண சேகு தகுமிகு தோமி
திமியென ஆடும் மயிலோனே
திருமலிவான பழமுதிர் சோலை
மலைமிசை மேவும் பெருமாளே!''

இது அருணகிரிநாதரது வாக்கு. அவரும் அக்காட்சியை அனுபவித்திருக்கிறார். அனிபூதிமான்களுக்கல்லாது சாதாரண மக்களுக்கும் பண்டைத்தன் மணங்கமழ் இளநலம் காட்டி பெறவரும் பரிசில் நல்குகின்றான் பழமுதிர் சோலையில் முருகன்.

மதுரையிலிருந்து பதின்மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது இத்தலம். பஸ்வண்டி மூலம் செல்லலாம். போகும் வழியில் திருப்பரங்குன்றம் உள்ளது. இப்பழமுதிர்சோலைத் தலத்தைக் கள்ளழகர் கோவில் என அழைக்கிறார்கள். மரங்கள் சூழ்ந்த சோலையின் மத்தியில் விஸ்தாரமான கோவிலில் அமர்ந்திருக்கிறார். மூலவர் இருந்த திருக்கோலத்தில் சங்கு சக்கரதாரியாகக் காட்சி அளிக்கிறார். இதை விஷ்ணு கோவில் என்றும் கூறுகின்றனர். இக் கோவிலில் இருந்து ஒற்றை அடிப் பாதை மூலம் நாலு மைல் வரை சென்றால் ஒரு நீர் ஊற்றைக் காணலாம் இலங்கையில் மலை நாடுகளில் உள்ள 'ஸ்பவுட்' (Spout) பீலிக்கரை போன்றது. அதில் லட்சக்கணக்கான அடியார்கள் வந்து தினமும் நீராடுகிறார்கள். அந்த நீர் சிறிய ஓடைபோல அந்தக் குன்றிலிருந்து ஓடுகிறது. இதை நூபுரகங்கை (சிலம்பாறு) என அழைக்கிறார்கள். 'இழுமென இழியும் அருவிப் பழமுதிர்சோலை' என திருமுருகாற்றுப் படையில் குறிப்பிட்ட அருவி இதுவே. இந்த அருவிக் கரையில் சிறு கோவில் ஒன்று அமைத்திருக்கிறார்கள். மூலவர் முத்துக்குமார சுவாமியாக இரு சக்திகளுடனும் வேல் மயில் ஆகியவற்றுடனும் விளங்குகிறார். (இந்தத் திருக்கோலம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மூலவருக்கும் பொருந்தும்.) ஔவையாருக்குப் பழம் கொடுத்த நாவலின்கீழ் இத்தலம் அமைந்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

நாத சொரூபியாகிய பரம்பொருள் அடியவர்களுக்குப் பலபல வடிவங்களில் பலபல தலங்களில் காட்சிகொடுத்துள்ளார். அனுபூதிமான்கள் அருள்பெற்ற தலங்களில் சாதாரண மக்களும் அவனருளைப் பெறுகிறார்கள்- அவர்களுக்கு காட்சிக்கெளியனாக விளங்குகிறான். பழமுதிர்சோலை எங்கணும், கண்ணும் கருத்தும் களிநடம் புரிய மயிலின்மேல் காட்சி அளிக்கும் கோலமே ஒளியாக உள்ளும் புறம்பும் தரிசிக்கிறார்கள். இந்தப் பரவசநிலை அடியவர்களுக்கு பழமுதிர்சோலையில் கிடைக்கிறது.

உள்ளத்து ஒளிக்கும் ஒளியானை உலகெங்கும் தேடியும் காணாத பரம்பொருளை உள்ளன்புடன் வணங்கும் மெய்யடியார்களுக்கு அருள் புரிகிறான் மாவையம்பதியில்' பழமுதிர்சோலை மலைகிழவோன் வேண்டிய வேண்டியாங் கெய்தினர் வழிபட ஆண்டாண்டுறைதலும் உரியன் என்பது உண்மை போலும்.

உ

# ''மூர்த்தி தலமோதினிய தீர்த்தமுறு மாவை''

பிரம்மஸ்ரீ. சு. து. சுந்தரமூர்த்தி ஐயர் B.A.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்து விளங்கும் க்ஷேத்திரங்களுள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலும் ஒன்ருகும். இந்த க்ஷேத்திரத்தில் உன்னத சிறப்பாக இருப்பது யாதெனின் இந்த மூன்று விசேட அம்சங்களுக்கும் பூர்வீக வரலாறு இருப்பதேயாகும்.

## மூர்த்தி

அம்பலவாணர் கந்தர் என்னும் பெயர் கொண்ட கந்தவேள் மகாவல்லி, கஜவல்லி சமேதராக மாவைப் பதியில் எழுந்தருளியிருக்கின்ருர். கி. பி. ஏழாம் நூற்ருண்டில் மாருதப்புரவல்லியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட முருகப் பெருமான் வரலாற்றுச் சிறப்புப் பொருந்தியவராக உள்ளார். சோழ நாட்டில் கைதேர்ந்த சிற்பியால் வடிக்கப்பட்டு காங்கேயன் என்ற திருநாமத்துடன் மாவைப்பதியில் பிரதிஷ்டைக்காகக் கடல்மார்க்கமாக வரவழைக்கப்பட்டு குரக்கன் துறையில் வந்திறங்கியதால் காங்கேயன் துறை என்று வழங்கும் பெயர் பூர்வீக வரலாற்றை எடுத்தியம்புகிறது.

இச்சாசக்தி ஞானசக்தி ஆகிய தேவிமார் இருமருங்கிலும் அணைந்து நிற்க, கையில் வச்சிர வேலாயுதம் தாங்கிய முருகனை மயூரம் அணைந்து தாங்குவதுபோல் காட்சியளிக்கிறது. துஷ்டரை சங்கரிக்கும் தத்துவத்தைக் கொண்டதாக, தோகை மயில் தனது அலகில் பாம்பைக் கௌவிக்கொண்டிருக்கிறது.

பக்தர்களுக்கு இஷ்ட சித்திகளைக் கொடுக்க வரதகரமும், அஞ்ச வருவது யாதொன்றுமில்லை என்பதை உணர்த்த அபயகரமும், சூரனின் மார்பு கீண்டவேற்படையையும், குலிசத்தையும் கொண்ட பாஹஸ்தங்களையும் காண்பவர் மனம் உருகி நிற்பர்.

இத்துணை விசேடங்களும் கொண்ட மாவை முருகன், போத்துக்கீசரால் இவ்வாலயம் இடித்து அழிக்கப்பட்ட பொழுதும், மறையவருக்கு மறையாமல் மறைந்திருந்தார். 1782ஆம் ஆண்டளவில் மீண்டும் இப்பதியில் கோவிற்கடவை என்ற காணியில் எழுந்தருளியிருப்பது சைவப் பெருங்குடி மக்களை ஆட்கொள்வதற்கே பாகும்.

மாவைப்பதியில் முருகமூர்த்தி, நிட்டுர சூரனை சம்கரித்த ஆறுமாமுகப் பெருமானுகவும், உலகில் யாவரும் விரும்பும் துறவு கொண்ட பழனியாண்டியாகவும் காட்சிதருகின்ருர்.

## தலம்

மாவைத்தலம் வரலாற்றுப் புகழுடையது. ஆகம முறைப்படியாக சிறந்த சிற்ப அமைப்புக் கொண்ட மண்டபங்களையுடையது இத்தலம். முருகன் உலா வருவதற்கு உட்பிரகாரமும், பக்தர்கள் அடியளித்து வணங்குவதற்கு இரண்டாம் வீதியும், பஞ்சமூர்த்திகள் தேரில் ஆரோகணித்து வலம்வருவதற்கு மூன்ரும் வீதியும் அமையப்பெற்ற தலம் மாவிட்டபுரம்.

இத்தலத்தின் மகிமையால் இக்கிராமமும் அப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. ஐநூறு பரப்புக் கொண்ட விசாலமான க்ஷேத்திரம் இது. அடியவர்கள் இலகுவாக வந்து தரிசிக்கும் வண்ணம் பிரதான வீதிக்கருகாமையிலும், புகையிரத தரிப்பு நிலையத்துக்கண்மையிலும் மாவைப்பதி உள்ளதை யாவரும் அறிவர். அந்தணக் குடும்பத்தவர் என்றென்றும் முருகனைச் சேவிக்கும்படியாக புறவீதி நான்கிலும் அந்தணர் கிருகங்களாலும், அடியவர் கூட்டம் ஆறுதலாக இருந்து வழிபட மடங்களாலும் சூழப்பட்டிருக்கிறது இத்தலம்.

ஒளிமயமான வெள்ளிக் கொடித்தம்ப மும், வானைமுட்டும் உயர்சப்பறமும், தூல லிங்கமாகிய மேலைக் கோபுரமும் இப்பதி யின் தனிச் சிறப்பு வாய்ந்தவை. உற்சவ மூர்த்திகள் கொலுவீற்றிருக்கும் சபையும், பக்தர் தரிசிக்க வசதியான வசந்த மண் டபமும் கொண்ட இத்தலம் லட்சக்கணக் கான பக்தர்களை வருடாவருடம் தன்பால் ஈர்த்து வருகிறது.

## தலவிருட்சம்

மாவைத் தலத்தின் விருட்சமாக மா விளங்குகிறது. தேனினும் இனிய பழம் தரு வதும் எக்காலத்திலும் காய்த்துக் கொண் டிருப்பதுமான இம் மாமரத்தைக் 'காஞ்சி மா' என அழைப்பர். காஞ்சிமாவடி வைகும் செவ்வேள், மாமரமாக நின்ற அவுணனைத் தன்பால் ஆட்கொண்ட வரலாற்றை இம்மா ஞாபகப்படுத்திக் கொண்டேயிருக்கிறது.

மாவைத் தலத்தில் எழுந்தருளியிருக் கும் மூலவரைத் தரிசிக்க வேண்டுமா? வாருங் கள் தேரடிக்கு. நெரிபடாமல் அமைதியாக, புலனடங்க நின்று வழிபடலாம். அத்துணை அமைப்புக் கொண்ட கோயில் இது.

## தீர்த்தம்

மாவைப் பெருமானின் தீர்த்தமாக விளங்குவது கீரிமலைச் சமுத்திர தீர்த்த மாகும். இங்கு பூமியின் அடியில் ஊறிப் பாயும் நன்னீரும், சமுத்திர நீரும் சங்கமிக் கின்றன. இத்தீர்த்தம் நகுலமுனிவரின் கீரி முகத்தையும், மாருதப்புரவல்லியின் குதிரை முகத்தையும் நீக்கி அழகு பொலிவுடன் விளங்க வைத்தது. இன்னும் பல அடியவர் களின் தீராத நோய்களைத் தீர்த்துமுள்ளது.

கண்டகி தீர்த்தம் எனப் பெயர்பெற்ற இத் தீர்த்தத்திற்கு மாவை முருகப் பெரு மானும் கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானும் வருடத்துக்கு மூன்று முறை தீர்த்தமாட எழுந்தருளுவர். மகா சிவராத்திரி தீர்த்தம், மாசிமகத் தீர்த்தம், ஆடி அமாவாசைத் தீர்த்தம் என்பன முக்கிய தினங்களாகும். மகாமகம், மகோதயம், அர்த்தோதயம், சந்திர சூரிய கிரகணம் ஆகிய தினங்களி லும் சுவாமி இத்தீர்த்தக்கரைக்கு எழுந் தருளித் தீர்த்தமாடுவார்.

சைவாலயங்களில் மிக முக்கியம் வாய்ந்த மூன்று அம்சங்கள் மூர்த்தி, தலம், தீர்த் தம் ஆகியவையாகும். மாவை முருகப் பெருமான் கோவில் கொண்டருளிய க்ஷேத் திரத்தில் இம்மூன்று விசேடங்களும் இயற் கையாக அமைந்துள்ளன.

இந்த மூவகை விசேடங்களையும் வியந்து பல புலவர்கள் பாடியுள்ளார்கள். மாவைத் தலத்தில் எழுந்தருளிய மூர்த்தியாகிய முரு கப் பெருமான் இரண்டு மைல்களுக்கப்பால் உள்ள தீர்த்தத்தில் தீர்த்தமாடி அடியவர் களுக்கு அருள்பாலிக்கும் வகையை வர் ணிக்க சொற்களே இல்லை. அருள் பெற்ற வர்களே இப்பேற்றை அறிவர்.

இப்புனித தீர்த்தம் பிதிரர்களுக்கு இறு திக் கிரியைகள் செய்வதற்கு ஏற்ற இடமா கவும் இருந்து வருகிறது. தீர்த்தமாட வரு பவர் சங்கற்பித்து தீர்த்த மாடுவதையும், பிதிர்கடன் செய்பவர் அஸ்தி, கல் முதலிய வற்றை சமுத்திரத்தில் இடுவதையும் பார்க் கும் பொழுது, இறைவனின் அருளால் எமக் குக் கிடைத்த தீர்த்தம் என்றே எண்ணத் தோன்றுகிறது. பாரதநாட்டில் பிரவகித்து ஓடும் சப்த நதிகளைப் போலவே, அலை மோதும் ஆழிக்கரையான கீரிமலைத் தீர்த்த மும் புண்ணிய தீர்த்தம் எனச் சைவ உல கம் போற்றிக் களிக்கிறது. நாமும் இதன் புனிதத்தை உணர்ந்து புண்ணிய தீர்த் தத்தைப் புனிதமாகப் பேணுவோமாக!

சிவமயம்

# "சுகம் பெறுவ தெந்நாளோ"

செஞ்சொற்புலவர். மா. குமாரசுவாமி.

சூரனொடு சிங்கனையும் சொல்லுதம்பி தாரகனை
நேரினிலே யெதிர்கொண்டு நீண்டசக்தி வேலதனால்
போரினிலே கொன்றொழித்த புண்ணியனே மாவையெனும்
ஊரினிலே உறைந்தருளு முத்தமனே யெனக்கருளே.

போற்றுபெயர் மாருதஞ்சேர் புரவீக வல்லியவர்
மாற்றமுறு மாமுகத்தை மாற்றியெழில் மங்கையராய்
ஏற்றமுற வருள்புரிந்த எம்முருகன் மாவைநகர்
வீற்றிருந்து அடியவர்க்கு வீசுகிறான் தண்ணருளே.

பிரமனுக்கே தெரியாத பிரணவத்தி னுட்பொருளை
அரவணியு மீசனுக்கு அன்றுரைத்த பெருமானே
விரவுமணி மயிலேறும் வித்தகனே குறுமுனிக்குப்
பரவுதமிழ் தானளித்த பண்டிதனே காத்தருளே,

குறையிரந்து முறையிட்டுக் கூறுகின்ற நின்னடியார்
நிறைவுபெற வாழுகின்ற நீர்மையினைக் கண்டிருந்தும்
முறைமையொடு போற்றலிலா மூர்க்கனெனை யாண்டருள
மறைபரவு மாவைநகர் மால்மருகா வேண்டுவனே.

கூறுவள்ளி நாயகியார் குலவுதெய்வ யானையுடன்
ஏறுமயிலேறிவந்து இன்னலிலா மாவைநகர்
வீறுபெற எழுந்தருளும் வித்தகனே வேலவனே
ஆறுமுகநாயகனே! யாறுதலைத்தந்தருளே.

ஆடவைத்தாய் வாழ்க்கையெனு மாடரங்கி லலைந்துநிதம்
வாடவைத்தாய் வாழ்வினிலே வந்ததுயர் போதுமினிப்
பாடவைப்பாயுன் புகழைப் பரவி மகிழ்ந்துன்னடியிற்
கூடவைப்பாய் மாவைநகர்க் குருமணியே குமரேசா.

முடியாத பிறவியெனும் முந்நீரிற் றுனழுந்தி
அடியேனும் படும்துயரை யாற்ற மனமாகாதோ
படியாருஞ் சிரித்திடவே பாவியெனே யேன்படைத்தாய்
வடிவேலுடையவனே வளர்மாவை வாழ்பவனே.

பட்டதுயர்போதுமையா படமுடியா தினித்துயரம்
துட்டனென நீவிலக்கிற் றுணையாவா ரெவருமிலே
மட்டவிழும் மாவிளங்கும் மாவைவளர் மாமணியே
இட்டமுட னென்னையணைத்து இன்னருள்தா னீவதென்றே.

பாடுகிறேன் ஆடுகிறேன் பரவுகிறேன் நின்னடியை
நாடுகிறேன் நாள்தோறும் நலமறியா நாயடியேன்
தேடுகிறேன் நின்னடியார் திருக்கூட்டச் சூழலேயே
பீடுலவு மாவைவளர் பெருமாளே யருள்வாயே.

ஓங்காரத் துள்ளொளியை உள்ளமெனுந் திரையதனில்
நீங்காமற் றுனெழுதி நித்தனித்த முனைத்தொழுதும்
ஆங்காரமடங்க விலே யடிமை நானுனதடியிற்
றூங்காமற் றூங்கிநிதஞ் சுகம்பெறுவ தெந்நாளோ.

### "மாவை நகரதனில் வாழ் மங்கையுமை பாலன்"

திங்களனிச் செஞ்சடைச் சங்கரன் நூதல் விழிச்
செங்கனலிலே பிறந்து
தெய்வ சரவண மணிப் பொய்கை தனிலோராறு
சிறுவர் வாடிவாய் வளர்ந்தே
அங்கணுறை ஒராறு மங்கைமார் கொங்கை தரு
அமுதுண்டு விளையாடியே
ஆறுதிரு முகமீராறு செங்கரமுமாய்
அருனுருக் கொண்ட முருகா!
செங்கணரியும் மலர்புங்கவனும் இந்திரனும்
தேவர் குழுவும் வேண்டிடத்
திண்டிறல் மிகுஞ் சூரபன்மனைக் கொன்றமரர்
சிறை விடுத்திடு குமரனே!
மங்கள வளம் பெருகி எங்கும் இசை பொங்கி மிகு
மாவை நகரதனில் வாழும்
மங்கை உமை பாலனே! செங்கை வடிவேலனே!
மயில் வாகனக் கடவுளே!

மாவைநகர்
'முருக வேள் பதிகம்'
நவாலியூர்
க. சோமசுந்தரப்புலவர்

# ஏழாவது ஆதீனகர்த்தா

ஏ. ரி. பொன்னுத்துரை B. A.

ஈழத் திருநாட்டில் சைவத்தின் ஒளி பரப்பி, சிறந்து விளங்கும் அரியவொரு ஆலயம் மாவைக் கந்தன் ஆலயம். கை கூப்பிச் செல்கிறோம் ஸ்கந்த மூர்த்தியை ஆராதிக்க; அவன் புகழ் பாடுவதில், முழங்குவதிற் புளகாங்கிதமடைகிறோம், ஒரு வித பூரிப்பு-பூரணத்துவம்-சாந்தம் எம்மையறியாமலே எமக்கு ஏற்படுகின்றன. அதே வேளை, ஆலய வளர்ச்சி ஒன்றையே முன் வைத்து, எதுவரினும் என்ன நேரினும் கந்தன் திருவருளால் அதனை முற்றுப்பெறச் செய்வேன் என வைராக்கியம் பூண்டு, புன் முறுவல் பூத்துநிற்கும் அருளுருவை - அழகுருவை - ஆம் எங்கள் ஏழாவது ஆதீன கர்த்தா 'சிவாகம வித்தியா பூஷணம்' பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்களவர்களையும் நோக்குகிறோம். அன்னாரின் அருள்திரு நோக்கில் நயனதீட்சையின் கனதி நினைவு கூராது மீளமுடிகிறதில்லை. குருவழிபாடும் இறைவழிபாடுதானே!

அந்தணர்களுக்குள் அரசன்போல் கொலுவீற்றிருந்த எமது நினைவில் வரும் ஐந்தாவது ஆதீனகர்த்தா, 'இரத்தினக் குருக்கள்' என அன்பு பீறிட அழைக்கப்பட்ட சாமிக் குருக்களவர்கள் இவரது பாட்டனார். ஆறாவது ஆதீன கர்த்தாவும் சாமிக் குருக்களின் மைந்தனுமாகிய பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக்குருக்களவர்களுக்கும் நாராயணி அம்மையாருக்கும் சிரேஷ்ட புத்திரராகத் தோன்றியவரே பிரம்மஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் அவர்கள். 7-ம் நூற்றாண்டிலேயே தில்லை மூவாயிரவர் முதல்வரான தீட்சிதர் பெரிய மனத்துள்ளார் மூலம் உருவாகிய பெரிய பரம்பரையில் இவர் உதித்தமையே இவரது முன் வினைச்சிறப்பை இன்றைய விழுமிய நிலையைச் சுட்டி நிற்கின்றன.

செல்வத்துட் செல்வம் கல்விச் செல்வம் என்பர். கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை இவர் கால்வைத்த ஆரம்பப்பள்ளி. சைவப் பெரியார் விநாயகமூர்த்தி அவர்கள் இவரது ஆரம்பகுரு. இவர் தொடர்ந்து கல்வி கற்ற நிறுவனங்கள் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, வீமன்காமம் ஆங்கில பாடசாலை. சேர் பொன். இராமநாதனால் நிறுவப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி என்பன. சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் என்பவற்றை முறையே கற்றார்.

ஆரம்பத்தில் தந்தையாரிடமே சமஸ்கிருதபாடம் கேட்டு, பின் பிரம்மஸ்ரீ சிதம்பர சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள், மாமனார் பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் ஆகியோரிடம் தொடர்ந்து கற்று உன்னதம் உற்றார். அட்சரசுத்தியுடன், இசையொழுக்குடன், லயத்துடன் இவர் மந்திர உச்சாடனம் செய்யும் வேளை இறையுலகின் விளிம்பிலே நிற்கிறோமோ என்ற உணர்வு பிரவாகிக்கிறது. இவரது ஆசான்கள் அமிர்த்த மணிகள் அல்லவா?

பண்டிதமணி நவநீதகிருஷ்ண பாரதியார் கொக்குவில் குமாரசுவாமிப் புலவர், பண்டிதர் இ. நமசிவாயம், வித்துவான் க. வேந்தனார் என்போர் தமிழுலகு விதந்து போற்றும் பேரறிஞர்கள். இவர்கள் ஊட்டிய செந்தமிழ்ச் சிறப்பை ஏடேறிய குருக்களவர்களது ஆக்கங்கள், நூல்கள், பிரசுரங்கள் நிரூபித்து நிற்கின்றன.

ஆங்கிலம் அழகாகப் பேசவும் எழுதவும் வல்லவர் எமது ஏழாவது ஆதீன கர்த்தா அவர்கள். மேற்கத்திய நாடுகளில் இருந்தும், 'பிரிட்டிஷ் கவுன்சில்' போன்ற அகில உலக நிறுவனங்களிலிருந்தும், உயர் மட்ட உத்தியோக நிலையிலிருந்தும் வருகை

தரும் பிரமுகர்களுடன் இவர் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதுண்டு. 'ஸ்கொலசிப்பில்' இங்கிலாந்து சென்று ஆங்கிலத்தில் M.A. பட்டம் பெற்ற திரு. எஸ். சிவபாதசுந்தரம் M.A. (Cantas) அவர்களிடமும், திரு. அம்பலவாணர் M.A, திரு. V. முத்துக்குமாரு M.A. திரு. G A. இரத்தினவரதர் போன்ற அரிய ஆங்கிலம் கற்பிக்க வல்ல வல்லுனரிடமும் ஆங்கிலம் கற்றவரல்லவா? மும்மொழித் தகைமையும் கணித விஞ்ஞான அறிவும் இவரது நிலையை மேம்படுத்தி நிற்கின்றன.

குருக்களவர்களது உபநயனம் 1943-ஆம் ஆண்டு ஆதீனத்து அக்கிரகாரத்தில் புனிதமான முறையில் நிகழ்ந்தது. பெரிய தந்தையார் பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் குருவாக அமர்ந்து இச்சடங்கினைச் சிறப்புறச் செய்தார்கள்.

1950-ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் குருக்களவர்கள் இல்லறத்தை மேற்கொண்டார்கள். கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களின் புதல்வி நகுலேஸ்வரி அவர்களின் கரம்பற்றி இன்பமான வாழ்வை சிறப்புற மேற்கொண்டு புத்திரச் செல்வங்களுடன் பூரிப்புடன் திகழ்கிறார்.

குருக்களவர்களது ஆச்சாரியர் அபிடேகம் 1954-ம் ஆண்டு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. குருவாக அச்சுவேலி பிரம்மஸ்ரீ. குமாரசுவாமிக் குருக்கள் அமர்ந்திருந்தார்கள். அந்தணர்கள் மற்றும் பெருமக்கள் புடைசூழ, இளவரசுப் பட்டம் பெற்ற குருக்களை பல்லக்கில் வைத்து உலா எடுத்தனர் அடியார்கள் இதே ஆண்டில் நற்சகுனம் போல் வெள்ளியால் அமைக்கப்பட்ட கொடித்தம்பமும் நிறுவப்பட்டது. குருக்களவர்களே கொடியேற்று வைபவத்தையும் நடத்தினார்கள். இரத்தினக் குருக்களுக்கு அடுத்ததாக பல ஆண்டுகளாய் — 19 வருடங்கள் கொடியேற்றிய பெருமையும் ஏழாவது ஆதீனகர்த்தாவைச் சேருகிறது.

எழுத்துத் துறையிலும் குருக்களவர்களுக்கு நல்ல ஈடுபாடுண்டு. முக்கியமாகப் பல சமயக் கட்டுரைகளை பத்திரிகை வாயிலாக எழுதியுள்ளார் 'திருத்தல வரலாறு' என்ற நூலையும் வெளியிட்டுள்ளார்கள். காலத்துக்குக் காலம் சைவ விடயங்கள் கொண்ட பிரசுரங்களையும் வெளிக்கொணர்ந்தார்.

கிரியாம்சம், உச்சாடனம் என்பவற்றில் தலைசிறந்து விளங்கும் குருக்களவர்கள் பல ஆலயங்களில் கும்பாபிஷேகம் செய்துள்ளார்கள். விஷேடமாக ஹற்றன் மாணிக்கப் பிள்ளையார், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயங்கள் குறிப்பிடத்தக்கவை.

சகல சிறப்புக்களும் அமைந்த குருக்களவர்களுக்கு 'சிவாகம வித்தியா பூஷணம்' என்ற பட்டமளிப்புவிழா சிறப்புற நடைபெற்றது. சிரேஷ்ட சிவாசாரியார்கள் மத்தியில் பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் தலைமையில் முகாந்திரம் சதாசிவ ஐயர் ஞாபகார்த்த விழாவில் ஷி பட்டம் அளிக்கப்பட்டது.

1976-ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஆலயப் பொறுப்பு முழுவதையும் பெற்று நன்கு பரிபாலித்து வருவதுடன் பக்தி நெறியையும் பெரிதும் பேணி வருகின்றார். ஆலய புனர்நிர்மாண வேலைகளிலும் அதீத ஈடுபாட்டுடன் இயங்குகிறார். மூலஸ்தான குறைவேலைகளைப் பூர்த்தி செய்வதுடன், மகா மண்டபக் கருங்கல் திருப்பணியை கொழும்பு திரு. நாகமுத்து குமாரசுவாமி குடும்பத்தினர் மூலமும், சண்முகப் பெருமான் திருக்கோவில் விமானத்தை திரு. கந்தையா சரவணமுத்து குடும்ப மூலமும் திருத்தி அமைப்பித்துள்ளார்.

வசந்தமண்டபத் திருப்பணிச்சபையமைத்து, வசந்தமண்டபத்தை தனியழகு மிளிரும் மண்டபமாக அமைக்க முன்வந்தார், 'தாளக் காவடி' என்ற நாடகத்தை என்மூலம் தயாரித்தும், திருப்பணிச் சபை மூலம் நடாத்துவித்தும் இம் மண்டப நிதிக்கு பெருந்தொகை நிதியைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அடியவர்கள் பெருந்தொகையாக இதன் நிர்மாண விழாவில் பங்குகொள்ள வேண்டுமென்பதற்காக அஸ்திவாரம் அமைக்கும் விழாவில், ஆயிரம் அடியவர்கள் ஆயிரம் சங்குகளைப் பதிக்கும் வகையால் சங்குஸ்தாபன விழா எடுப்பித்தார். மாவையாதீனம் மகோன்னத நிலையெய்தி வருங்காலத்தில் சீரிய நிலையில் திகழ வேண்டும் என்ற கருத்தில் தமது சிரேஷ்ட புத்திரன் இரத்தினசபாபதிக் குருக்களுக்கு தருமபுர ஆதீனத்தில் பூரண கல்வியறிவைப் பெறும் வாய்ப்பை அளித்துள்ளார்கள். ஏழாவது ஆதீனகர்த்தா 'சிவாகம வித்தியாபூஷணம்' பிரம்மஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் அவர்கள் அந்தணர்களுள் ஒரு தனித்துவம் வாய்ந்தவர். செந்தண்மை இவரது வாழ்வின் அடி நாதம்.

# மாவை ஆலயக் கற்றூணில் கலையழகு

வரலாற்றுப் பெருமைமிகு மாவை ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தின் பல்வேறு சிறப்புக்களில் ஒரு தனிச்சிறப்பு இவ்வாலயக் கட்டிட அமைப்பாகும். விண்ணை மறைக்கும் கோபுரமும், வியத்தகு பிரகாரங்களும் கொண்டுள்ள இத்தொல் பெரும் பதியிலே அமைக்கப்பட்டு வரும் நிர்த்த மண்டபம் ஓர் அரிய சிற்பக் கலையழகு சேர் மண்டபமாக மிளிர்கிறது.

இம்மண்டபத்தின் கருங்கற் பாளமெல்லாம் கதைகூறும் கற்றூண்களாகக் காட்சி கொடுக்கின்றன. கலையழகு சொட்டும் இக் கருங்கல் திருப்பணியை அமைக்க விழைந்தவர் அண்மையில் முருகனடி சேர்ந்த மாவை அலுமினியத் தொழிற்சாலை அதிபர் ஆ. திருஞானசம்பந்தர் அவர்கள் ஆகும். அவர் தொடங்கிய இத் தெய்வத் திருப்பணி முற்றுப்பெறும் போது, இந்நிர்த்த மண்டபம் ஈடும், இணையுமில்லாத எழில் மண்டபமாகப் புகழ்பூத்த இவ்வாலயத்தில் என்றும் நிலவும் என்பதில் ஐயமே இல்லை.

இம்மண்டபத்தில், கல்லைக் கனிய வைத்துப் புராண இதிகாசக் கதைகளை யெல்லாம் வடித்தெடுத்து வைத்திருக்கிறார்கள் தென்னாடு தந்த சிற்பக் கலைஞர் பெரியசாமி, அவர்களும், அவர்களது சகாக்களும்.

இக்கற்சித்திரக் கதைகளிற் சிலவற்றைச் சொற்சித்திரங்களாக்கி, வரலாறு, வர்ணனை, எடுத்துக்காட்டுப் பாடல்கள் ஆகியவை மூலம், வாசகர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.

## 1. மாருதப்புரவீகவல்லி

மாவை ஆலயத்தைப் பல நூற்றாண்டுகட்கு முன் கட்டி எழுப்பி, நித்ய நைமித்ய பூஜைகட்கு ஒழுங்குகள் செய்து, இவ்வாலய வரலாற்றில் பெருமைக்குரிய முதலிடம் பெறுபவள், மாருதப் புரவீகவல்லி என்ற அரசகுமாரத்தி.

கன்மவினையால் குன்ம நோயும், குதிரை முகமும், வருத்த, தீர்த்தங்கள் பல ஆடினாள், தலங்கள் பலவற்றைத் தரிசித்தாள் இம் மாதரசி. தன் நோய் நீங்கப் பெறாது, நகுலமலை சேர்ந்து, நகுல முனிவரின் ஆசியோடு, நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானை நாளும் வழிபட்டுத் தன் இஷ்ட தெய்வமான முருகப் பெருமானை எந்த வேளையும் வணங்கிக் 'கண்டகி' தீர்த்தத்தில் நீராடி, முருகன் அருள்கூர, தனது நோய் நீங்கப்பெற்றாள் என்பதும், தனக்கு அருள் பாலித்த கந்தப் பெருமானுக்கு, ஆலயம் எடுத்துப் பெருமை பெற்றாள் என்பதும் மாவைத் தலவரலாறு தரும் செய்திகள்.

இப்பெருமாட்டியின் நினைவு நீக்கமற நிலைத்திருக்கின்றதென்பதை, இவ்வாலய வைபவங்களிலும் மந்திர பாராயணங்களிலும் நாம் பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

கற்கோயிலமைத்த இம்மாதரசியை நன்றி மறவாமல், கலைக்கோயிலமைத்த சிற்பிகள் சிலாசாசனம் செய்து வைத்திருக்கிறார்கள், நிர்த்த மண்டபக் கற்றூண்களில்.

தூண் ஒன்றில், அங்கமெல்லாம் அழகு சொட்டும், பாவையாகவும், குதிரை முகத்துடனும், கூப்பிய கரங்களுடனும், காட்சி கொடுக்கும் வல்லி யின் ஒரு தோற்றத்தையும், அடுத்த தூணில் இளமை நயங்கொழிக்கும் அற்புதச் சித்திரப் பொற்பாவையாக வல்லியின் மறுதோற்றத்தையும், வடித்து, மாவைப் பெருமானை எந்தவேளையும் வணங்கிய வண்ணம் அமைத் திருக்கும், பாவனை மிகவும் போற்றத்தக்கதாகும்.

இரண்டு சிலைகள் மூலம், மாவை வரலாற்றை நினைவுகூரும் சிற்பக் கலைஞரை வாழ்த்த வேண்டாமா?

## 2. 'முக்கட் பரமர்க்குச் சுருதியின் முற்பட்டது கற்பித்த குருநாதன் — பரசிவகுரு மூர்த்தம்

கல்லால நிழலமர்ந்து, நான் மறை, ஆறங்கம் முதல் கற்ற கேள்வி வல் லார்களாகிய சனகாதி முனிவற்கு பசு, பதி, பாசத் தொடர்பைக் குருமூர்த்த மாகச் சின் முத்திரையால் உபதேசம் செய்தவன் சிவபெருமான். அச் சிவனுர் மனங்குளிர உபதேச மந்திரத்தை அவர் செவிமீதில் பகர்ந்து பேசிய பெருமை பெற்றவன் முருகப்பெருமான்.

கொன்றைச் சடையார்க்கு பிரணவம் கொஞ்சிப் பகர்ந்தமையால், முரு கன், குமரகுருநாதன், சிவகுருநாதன், சிவஞானதேசிகன், ஞானபண்டிதன், தகப்பன்சாமி, சுவரமிநாதன், புத்திரக்குருக்கள் என்றெல்லாம் அழைக்கப்படு கின்ருன்.

'மகனறிவு தந்தையறிவு' என்ற முதுமொழிக்கமைய ஞானத்தாலுருவா கிய ஞானநாயகனுய், முக்கட்பரமர்க்கு உபதேசம் அருளிய மூர்த்தம், 'பரசிவ குருமூர்த்தம்' ஆகும்.

இவ்வாறு முருகப்பெருமான் உபதேசிக்க எழுந்த சந்தர்ப்பம், வெகு சுவையானது.

கோடாத வேதனைக் குட்டிச் சிறையிருத்திய கோமான் முருகன், கையில் கமண்டலமும், உருத்திராக்கமும் தாங்கி படைப்புத் தொழிலைத் தானே நடத்தி வந்தான்.

இதனை அறிந்த பரமசிவனுர், முருகனை அழைத்து, அறியாமையால், பங்கயன் செய்த பிழை பொறுத்து அவனைச் சிறை மீட்கும்படி கேட்டபோது 'பிரணவப் பொருள் தெரியாத பேதைப் பிரமன் சிருஷ்டித் தொழிலை எவ் வாறு செய்ய முடியும்' என்று கேள்வி எழுப்பினுன் குமரன்.

'பிரணவப் பொருளை உன்னுல் விளக்க முடியுமா' என வினவிய சிவ னுர்க்கு 'குரு சிஷ்ய முறையில் அமர்ந்து தாங்கள் கேட்டால், அதை விளக்க முடியும்' என்று கூறிய கந்தப் பரமனைக் குருவாக அமர்த்தி அவன் முன்னிலை யில், கைகட்டி வாய்புதைத்து, பணிவாகச் சிஷ்ய பாவனையாக பிரணவ உப தேசம் பெற்றுன் முக்கட்பரமன். தந்தைக்கு உபதேசம் செய்த இவ்வரிய திருக்கோலத்தை அருணகிரிநாத சுவாமிகள்

"சேவேறு மீசர் சுத்த மாஞான போத புத்தி
சீராகவே உரைத்த — குருநாதா"

"நாத போற்றி யென முதுதாதை கேட்க, அனுபவ
ஞான வார்த்தை அருளிய — பெருமாளே!"

"தவத்தின் சாமி, மயின்மிசை நடிக்கும் சாமி, ச்ரவண
தகப்பன் சாமி, எனவரும் — பெருமானே!"

"அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழி கொடு தெளிதர வொளிதிகழ்
அறிவை யறிவது பொருளென அருளிய — பெருமாளே!"

என்றெல்லாம் அழகு தமிழில் பாடிப் பரவுகிறார்.

அறிவானந்த சொரூபமாய், ஞானமூர்த்தியாய் முருகன் காட்சி அளிப்பதையும், அவன் முன்னிலையில், பரமன் பணிவோடு மந்திர உபதேசம் பெறுவதையும், சிலைவடிவில் மாவை ஆலய நிர்த்த மண்டபக் கற்றூணில் கண்டு மகிழலாம்.

## 3. கல்லால நிழலமர்ந்த மெஞ்ஞான குருநாதன்

**— தட்சிணாமூர்த்தி**

**ச**னகர், சனந்தனர், சனாதரர், சனற்குமாரர் நால்வரும் நான்முகன் பிள்ளைகள். இளமையிலேயே, கற்கவேண்டிய கலைஞானங்கள், பயிலவேண்டிய நூல்கள், புராணங்கள், வேத மந்திரங்கள் ஆகியவற்றை பழுதறப் பயின்று பாண்டித்யம் பெற்றவர்கள். இவர்கள் சினம் அடக்கக் கற்றிருந்தனர். சித்தியெல்லாம் பெற்றிருந்தனர் ஆயினும், மனம் அடக்க வழி தெரியாது மலைத்து மயங்கி வந்தனர். காலச்சக்கரம் கனன்று சுழன்றது. நால்வரும் பழுத்த பழங்களாயினர். மூப்பின் வேதனையில், மன ஒருமையும், மோன நிலையும் பெற முடியாது பேதலித்து நின்றனர். காரணம் உன்னியது மனம். உணர்ந்தார்கள் உண்மையை. உணர்ந்ததுமே, உலகாளுடை பிஞ்ஞகன், கண்ணுதற் பெருமானின் கழலடி இறைஞ்சி தமக்கு வழிகாட்ட வேண்டினார்கள். கருணைக் கடலாம் கயிலைவாசன், இவர்கள் நிலை கண்டிரங்கினான்.

இளமைத் திருமேனி தாங்கி, கல்லால நிழலில், தென்முகம் நோக்கி அமர்ந்து, இவர்களைச் சீடராக்கி, உடலவிழ, உரை அவிழ, உளமவிழ, மோன நிலையில் மௌனமாகி, மனோ மௌன நிலையை உபதேசம் செய்தான், கல்லால நிழலமர்ந்து, சனகாதி முனிவர்க்கு, பசு, பதி பாசத் தொடர்பை சின்முத்திரை காட்டி, உபதேசம் செய்த தவக்கோலமே, தனி மந்திர ரூபமாகிய, தட்சிணா மூர்த்தம். சுட்டு விரலால் கட்டை விரலைத்தொட்டு, மறு மூன்று விரல்களையும் விரித்தெழவிட்ட அபயகரத்துடன், காட்சி கொடுத்து பேசாமல் பேசியருளிய. இவ்வரிய திருக்கோலத்தை, பரஞ்சோதி முனிவர்,

"கல்லால புடையமர்ந்து, நான்மறை
ஆறுங்க முதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும், வாக்கிறந்த
பூரணமாய், மறைக்கு அப்பாலாய்,

எல்லாமாய், அல்லவுமாய், இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை, நினையாமல்
நினைந்து பவத் தொடர்கை, வெல்வாம்''
என்ற அற்புதமான பாடலால் சித்தரிக்கிறார்

''கல்லால நிழல் மேவிக் காமுறுசீர் நால்வர்கள்
எல்லா அறனுரையும் இன்னருளான் சொல்லினான்''
என ஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும்,

''அன்றாலின் கீழிருந்து மறைபொருள் நால்வர்க்குச் செய்தானை''
என நாவுக்கரசு சுவாமிகளும்,

''மறை நான்கும் கல்லால நிழற்கீழ் பண்ணிய வெங்கள் பிரான்''
எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

''நன்றாக நால் வருக்கும் நான் மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந் தாங் கற முரைத்தான்''
என மணிவாசகரும்,

இத்திரு மூர்த்தத்தைப் பாடிப் பரவியிருக்கிறார்கள்.

நால்வர் கேட்க நன்கினிதுரைத்த, அரிய இத்திருமூர்த்தத்தை மாவை ஆலயக் கற்றூணில் அற்புதமாகச் சமைத்திருக்கிறார்கள் சிற்பியாரவர்கள். இதனைக் கண்டு, தொழுது, நினையாமல் நினைந்து, நெஞ்சம் நெகிழ, ஒருமுறை பார்க்க வேண்டாமா?

## 4. நக்கீரனுக்கு நவையறு காட்சி

சங்கப் புலவர்களில் தலைமைப் புலவன் நக்கீரன் ''இறையனார் அகப்பொருள்'' நூலில் குற்றங்கண்டு ''நெற்றிக் கண்ணைக் காட்டினும், குற்றம் குற்றமே''! எனக் கண்ணுதற் பெருமானுக்கே அஞ்சாது மொழிந்த செஞ்சொற் புலவன்.

வைராக்கிய சிவபக்தியும், தமிழ் பற்றும் கொண்ட இவன் தெய்வங்களில் சிவபெருமானையும், மானிடரில், மன்னவன் மாற பாண்டியனையும், மட்டுமன்றி வேறொருவர் மேலும் தமிழ்மாலை தொடுப்பதில்லை என்ற விரதம் பூண்டொழுகியவன்.

இதனைப் பரங்கிலி புராணத்தில்,

''கூடல் அங்கயற்கண் பாகனன்றி, மானிடரில்
மாறனன்றி, அகிலந்தன்னுட்
துங்க மெழுந் தமிழ் மாலை தொடுப்பதில்லை
என்று கொண்டான்''

என நிரம்ப அழகிய தேசிகரவர்கள் பாடுகிறார்கள்,

தேனூறு தமிழுக்கு வாயூறி நிற்கும் வண்ண மயில் வாகனன் நல்லிசைப் புலவன் நக்கீரன் நாவிலிருந்து நல்லதோர் பாமாலை பெறவேண்டும் என விருப்பம் கொண்டான். நக்கீரனைத் தடுத்தாட்கொள்ள தன் பூதகணங்களை ஏவினான்.

மதுரையிலிருந்து, பரங்குன்றேறிச் சரவணப் பொய்கையில் நீராடிச் சிவபூசை செய்யும் நியதி கொண்ட நக்கீரர், ஒருநாள் சிவபூசைக்கமர்ந்தபோது, அவர் அமர்ந்திருந்த மரத்திலிருந்து, பொய்கையில் விழுந்த இலைச் சருகொன்று பாதி பறவையாகவும், பாதி மீனாகவும் ஒன்றையொன்று மேலும் கீழுமாக இழுபறிப்படும் அருவருத்த காட்சியைக் கண்ணுற்றார்.

இவ்விரு பிராணிகள்படும் துன்பம் சகிக்காமல், அவற்றை எடுத்து இரு கூறுகக் கிள்ளிப் பிரித்து விட்டார். இரண்டும் உடனே துடித்துத் துடித்து மாண்டுபோயின. 'இது என்ன அபசாரம்' என்று புலவர் தயங்கிய வேளையில் பூதமொன்று இவரைத் தூக்கிச்சென்று, ஓர் மலைக்குகைக்குள் தள்ளி, குகை வாயிலைப் பாறையொன்றால் அடைத்து, இவரைச் சிறைப்படுத்திவிட்டது.

சிலகாலம் சிறையில் கிடந்து தவித்த நக்கீரர், கனவில் ஒருநாள் முருகப் பெருமான் தோன்றி, ''உலகம் உவப்ப'' என்ற அடியெடுத்துக் கொடுத்து, கன்னலும், அமுதும், தேனும் சொரியும் ''திருமுருகாற்றுப்படை'' என்ற அரிய தமிழ் மாலை பெற்றான்.

ஆற்றுப் படை பாடித் அரியதமிழ் விருந்தளித்த தனிப்பெரும் புலவரேறும் நக்கீரருக்கு, தமிழ்த் தெய்வம், ஆடுமாமயிலேறி அற்புதக் காட்சி கொடுப்பதை, அழகொழுகு, சிற்பமாக மாவை ஆலய நிர்த்த மண்டபக் கற்றூணில் வடித்திருக்கிறார்கள் சிற்பக் கலைஞர்கள்.

## 5. ''தக்கன் தலை தடிந்த வீரபத்திரனெனும் திறலுடை முதல்வன்''

பிரமதேவன் புத்திரன் தக்கன். ஆயிரமாண்டு அருந்தவம் இயற்றி வரம் பல பெற்றவன். தவப்பயனால் விண்ணும், மண்ணும், கந்தர்வ உலகமும் இவன் ஆணைக்குட்பட்டது. சிவனை வணங்கியவர் யாவரும் இவனை வணங்கத் தலைப்பட்டனர். தேவரும், அசுரரும் தக்கன் பணியாளர் ஆயினர். உலகாளுடை உமையவள் தக்கன் மகள் தாட்சாயணியாகித் தவமியற்றிச் சிவனைக் கடிமணம் செய்து கயிலை சேர்ந்தாள். பிரமன் திருமால் ஆகியோர் பெறற்கரும் அந்தமில்லா வளம் யாவும் பெற்றுத் தக்கன் வாழ்ந்து வந்தான்.

ஆணவம் தலை தூக்கியது. கர்வம் கனன்று வெளிப்பட்டது. தன்மகளாகிய தாட்சாயணியும், மருகனாகிய சிவனும், தன்னை மதிக்காது இருப்பதைப் பெரிதாக எண்ணிப் புழுங்கினான் தக்கன்.

பெருயாகம் ஒன்றை இயற்றியவன், சிவன் உமை தவிர்ந்த ஏனைய தேவர்களை அழைத்து அவிர்பாகம் அளிக்க முற்பட்டான். அறிந்தாள் தாட்சாயணி தன் தந்தையின் விபரீதப் போக்கை. தக்கனிடம் விரைந்து வந்தாள். தேவதேவனும் சிவனை விலக்கி யாகம்செய்ய முற்பட்ட தக்கனைச் சாடினாள். வார்த்தைகள் தடித்தன. தக்கன் இறைவனை இகழ்ந்து பேசினான். ''பேயோடாடும் பித்தனுக்கு, சேலேறும் சிவனுக்கு, அவிர்பாகம் கொடேன்'' என்று நிந்தித்தான்.

வெகுண்டாள் தாட்சாமணி கயிலையை நோக்கி விரைந்தாள். கயிலாச பதியின் காலடியில் விழுந்து வணங்கி தக்கன் வேள்வியைத் தகர்த்தெறிய வேண்டிநின்ருள்.

நெற்றிக் கண்ணைத் திறந்தான் சிவன். அதனிலிருந்து 'ஆயிரம் சிரங்களை யும், ஆயிரம் முகங்களையும், முகந்தோறும் மும்மூன்று கண்களையும், வக்கிர தந்தங்களையும் இரண்டாயிரம் புயங்களையும், குண்டலமணி செவிகளையும், பிர மன், விட்டுணு முதலிய தேவர்களின் சிரங்களையும், என்புகளையும், பன்றிக் கொம்புகளையும், ஆமையோடுகளையும், இடையிடையே கலந்து கோத்த மாலையை யும், பூணூல் தரித்த மார்பையும் வாள், பலிசை, ஆலம், வேல், குலிசம், சக் கரம் முதலாகிய பல ஆயுதங்கள் ஏந்திய கரங்களையும், வீரக்கழலும், சிலம்பும், ஒலிக்கும் பாதங்களையும், சர்ப்பாபரணத்தையும், காளகண்டத்தையும், செவ் வானம் போன்ற திருமேனியையும் உடையராய், கோபாக்கினி அண்ட கோள கைக் கப்பாலுஞ் செல்லவும், சங்கார கர்த்தாவாகிய உருத்திரமூர்த்தி யுடைய் ஒலிபோலும், பேரொலி எண்டிசையும் பரவவும்'' வீரபத்திரன் தோன்றினன். உமையவள் கோபாக்கினி யினின்றும் பத்திரகாளி தோன்றினள்.

வடமுகாக்கினிபோல் தோன்றிய வீரபத்திரனும் காளியும், இறைவன் பணிக்க விரைந்து சென்று தக்கன் யாகத்தைத் தகர்த்தெறிந்து, அண்டரும் அஞ்சியோட அவன் தலை கொய்தனர். இது கந்தபுராணத் தட்சகாண்டச் சித்திரம்.

இவ்வற்புத சித்திரத்தை, வீரவிழிப்பார்வையும், அகோர ரூபமும்கொண்ட வீரபத்திரன் தக்கன் சிகையை ஒருகையால் பிடித்து, மறுகையிலேந்திய வாளால், அவன் சிரம் கொய்யும் காட்சியாக, வடித்தெடுத்திருக்கிருர்கள் நிர்த்த மண்ட பக் கற்றூண் சமைத்த சிற்பிகள்.

## 6. "குறுமா முனிக்கருளும் குருமாமலைக் குமர குருநாதன்"

முருகப் பெருமானின் உபதேசம் பெறும் பேறு பெற்றவர்கள், சிவபெரு மான், அகத்திய முனிவர், அருணகிரிநாத சுவாமிகள் ஆகிய மூவரும் ஆவர்,

மகத்துவம் மிக்கஅகத்தியர் அமுதினும் இனிய தமிழ் தந்த தவச்செல்வர். குடத்தில் தோன்றிய கும்பமுனி எனவும், குறுகிய உருவால் குறுமுனி எனவும் பெயர் பெற்றவர், தன் தவமகிமையால் விந்தகிரியை பாதாளத்திற்கு அமிழ்த் தியவர், கடலை ஆசமனஞ் செய்துண்டவர், உடல் நோய்தவிர்க்க வல்ல அரிய வைத்திய நூல்களை உலகிற்களித்தவர், நாதநயம் விளங்க இசைநூல் வளங்கிய இசைஞானி, வான நூல்களை வகுத்தளித்த ஞான சொருபி, வடமொழி மந்திர மகிமைகளை மக்களுக்கு உபதேசித்தவர். பூகோள நுட்ப திட்பங்களை ஆதியி லேயே அறிஞர்கட்குணர்த்திய குருநாதர். இமவான் மடந்தையை இறைவன் மணம் செய்தபோது வடக்கையும் தெற்கையும் சமப்படுத்தப் பொதிகைமலை சேர்ந்தவர், கடவுள், உயிர் உலகம் ஆகிய மூன்றின் தொடர்பை முற்றிலும் உணர்த்திய முதல்வர்,

சிறப்புமிகு செம்மைத்தமிழ் முனிவராம் அகத்தியரை ஐந்தாம் சங்கர சொருபம் எனத் த்மிழ் கூறும் நல்லுலகம் அழைக்கிறது.

இம்முனிவர்க்குச் சிந்தை மகிழத்தமிழ் உபதேசித்தவன் முருகன் இதனை

"சிவனை நிகர் பொதியவரை முனிவனக மகிழ,
செவிகுளிர, இனியதமிழ் பகர்வோனே"

என அருணகிரிநாத சுவாமிகள் பாடுகிறார்கள்.

அகத்தியற்கு முருகன் உபதேசிநத அருட் காட்சியை அழகுற, ஆலய நிர்த்தமண்டபக் கற்றூணில் வடித்துள்ளார்கள் கலைச்சிற்பிகள்.

17987

## 7. கானவேதனைச் சிறையிருத்திய காரணன்

**நா**ன்கு மறைகளையும் சதா காலமும் ஓதுபவன் நான்முகன். அவன் ஓத் ஓத எழும் நாதவேத அலைகளின் அசைவிலே சிக்குண்ட உயிரணுக்கள் யாவும் தமது கன்ம வினைக்கேற்பத் தகுந்த கருப்பைகளைச் சேர்ந்து பிறவி எடுக்கும். இதுதான் சிருஷ்டி தத்துவம். இத்தத்துவத்தின் க்ருவியாக இருப்பவன் பங்கயன். தொழிலின் பெருமையால் "பெரியோன்" எனப் பொருள்படும் பிரமன் என்ற நாமத்தைப் பெறும் வர்ய்ப்புடையோனாகின்றான்.

கலைமகள் கணவனான கானவேதனுக்கு கர்வம் அடிக்கடி தலைதூக்கும். தானே பெரியவன் என்ற தடுமாற்றம். அகங்காரத்தால் ஓங்கி நிற்கும். இதனால் இவன் பல சமயங்களில் அவஸ்தைப்படுவதும் உண்டு.

ஒரு சமயம் கயிலைவாசனைச் சேவிக்க வந்த பங்கயன் அங்கிருந்த ஆறுமுகனை ஏறெடுத்தும் பாராது சென்றான். முருகன் செருக்குடன் சென்ற நான்முகனை வீரவாகு மூலம் அழைத்து வேதம் ஓதும்படி பணித்தான்.

'ஓம்' என்ற குடிலை மந்திரத்துடன் ஆரம்பித்த வேதனை இடைமறித்து, அம் மந்திரத்தின் பொருள் கூறுமாறு முருகன் பணித்தான். பிரணவ சொருபியாகிய முருகன் முன்னிலையில் குடிலையின் பொருள் தெரியாது தயங்கித் திகைத்துத் தலைகுனிந்தான் பிரமன். பிரணவத்தின் பொருள் தெரியாதவன் எப்படிச் சிருஷ்டித் தொழில் செய்யலாம் என்று கூறி, அவன் நான்கு தலைகளிலும் குட்டி: அவனைச் சிறையிட்டான் முருகன்.

இவ்வரிய நிகழ்ச்சியை, அருணகிரிநாத சுவாமிகள்

"நாலுமகனுதி யரியோமென அதாரமுரை
யாத பிரமாவை விழமோதி. பொருளோதுகென
நாலு சிரமொடு சிகை தூளிபடத் தாளமிடும் — இளையோனே"

எனத் திருப்புகழிலே பாடிவைக்கிறார்.

கோடான வேதனைக் குட்டிச் சிறையிருத்திய குமரன் ஆடலை மாவை ஆலயக் கற்றூணில் கன கச்சிதமாக வடித்தெடுத்திருக்கிறார் கலைச்சிற்பி.

## 8. தன்தலையில் சிதை மூட்டிய தானவன்

**பஸ்மாசுர — மோகினி**

"கெடுவான் கேடு நினைப்பான்" என்பது ஒரு முதுமொழி. இதை விளக்க ஓர் புராணக் கதை.

அறத்தை மறந்த அவுண அரசன் விருகாசுரன் ஆட்சியில் ஆணவம் அட்டகாசம் செய்தது. அபராதச் செயல்கள் தலைவிரித்தாடின. கொடுமைகள் அபரிமிதமாக மலிந்தன. கொடுங்கோல் ஆட்சி புரிந்தவன் சிறந்த சித்தியெல்லாம் பெறவேண்டும் என்ற ஆசை மேலீட்டில் கானகம் போந்து கயிலைவாசனை உன்னிக் கடுந்தவம் புரிந்தான். இவன் தவத்தின் மேன்மையால் விண்ணவர் தலைவன் காட்சி கொடுத்து "வேண்டும் வரம் யாது? என வினம்பி நின்றான்.

ஊழ்வினை, அசுர இயல்பு காலவாசனை ஆகியவற்றால் பீடிக்கப்பட்டிருந்த விருகன், தவத்தால்தான் பெற்ற ஞான வாசனையை மறந்து, நெஞ்சில் வஞ்சம் ஊசலாட விடையவனைப் பார்த்துப் "பெருமானே, நான் எவர் தலையில் கைவைத்தாலும், அவர் உடனே எரிந்து நீறாக, வரம் அருள வேண்டும்" என்று வேண்டி நின்றான்.

அற்ப எண்ணங் கொண்ட விருகனின் விதியின் விபரீதப் போக்கை எண்ணி நகைத்தபடி அவன் வேண்டிய வரத்தையே அவனுக்களித்தார். சிவன்.

வரம் பெற்றதுமே, விருகன் மனம் ஆவேசமுற்றது. அரிய வரமருளிய ஆண்டவன் மேலேயே, இதைப் பரீட்சிக்க எண்ணி; பெருமானை அணுகினான் எல்லாமாய், அல்லவுமாய் இருக்கும் இறைவன், இவன் எண்ணத்தை அறிந்து, அவன் கண்ணில் படாது சுரந்து நின்றான்.

கண்ணுதற் கடவுளைக் காணாது திகைத்த விருகாசுரன், இவ்வடர்ந்த கானகத்தில் எங்கு ஒளிந்திருந்தாலும், அவனைக் கண்டுபிடித்து விடலாம் என்ற எண்ணத்துடன் ஓர் உயர்ந்த மரத்தில் ஏறி, தனது பார்வையை எல்லாப் பக்கமும் செலுத்தினான்.

பசுமைதவழ் மேனியும், பவள நிறமும், பசுஞ்சாந்தணிந்த சிவந்த பாதமுமுடைய பாவை ஒருத்தி அவன் கண்ணில் பட்டாள். மரத்தினிலிருந்திறங்கி, அவள் நின்ற இடத்திற்கு விரைந்தான் விருகன்.

மானின் நேர்விழியாளை அண்மையிற் கண்ட மாத்திரத்தே. தவக் கோலத்தில் தன்னையடக்கியிருந்த விருகன் விரகதாகமுள்ள காம வெறியனாகி மாறி, அவளை அணைக்க முயன்றான். அந்த வேளையில் அம்மோகினி "ஐயா, பல காலமாகத் தவமியற்றிய கோலத்தில் இருக்கிறீர்கள். உங்கள் திருமேனியைச் சுத்தம் செய்து வாருங்கள்" என்று அன்போடு பணித்தாள்.

கோமளவல்லியின் ரூபலாவண்யத்தில் தன்னை மறந்த விருகன் அருகே, இருந்த சுனையில் மூழ்கி, நீராடியபின், விபூதி குழைத்துத் தன்னிரு கரங்களாலும் தன் உச்சிமேல் கைவைத்து வணங்கினான். தலைமேல் கைவைத்த மாத்திரத்திலே விருகன் சிகை தீப்பற்றி எரிந்தது. சிறிது நேரத்தில் அவன் உடல் யாவும் தீப்பற்றி பஸ்மமாகியது.

பலரைப் பஸ்மமாக்க வரம்பெற்ற அசுரன் தானே எரிந்து பஸ்மமாவதையும், மோகினி அதைப் பார்த்து நகைப்பதையும். மாவைக் கற்றூணில் படைத்துள்ளார் கலைச்சிற்பி.

## 9. "காலனைக் காலாற் காய்ந்த கருந்தழற் பிழம்பன்ன மேனிச் செய்யன்" — காலகாலமூர்த்தம்

ஆண்டு பலவாக வேண்டித் தவங்கிடந்து, மிருகண்டு முனிவர் பெற்றெடுத்த பெரும்பிள்ளை மார்க்கண்டேயன்.

தீக்குணம் செறிந்து. மெய்யுணர்வில்லாத் தோற்றமும், கடும் பிணித் தொகை சேர்ந்த. நூறுண்டு வாழ்வுடைப் புதல்வன் வேண்டுமா? அல்லது கோல வனப்பும், குறையாத கல்வியும், இறைவன்பால் மறவாத இன்ப அன்பும், பதினறு வயதுமுடைப் பாலகன் வேண்டுமா? என இறைவன் கேட்டபோது,

"ஆண்டவை குறுகினலும், அறிவுளனுகி யாக்கை
நீண்டொரு தவறு மின்றி, எம்பிரான் நின்பாலன்பு
பூண்டதோர் புதல்வன் தானே வேண்டினேன்"

என்று மிருகண்டு கேட்டுப் பெற்ற பாலகன் மார்க்கண்டேயன்.

மிகச் சிறு வயதிலேயே கற்கவேண்டிய கலைஞானங்களைக் கசடறக் கற்று, பயிலவேண்டிய நூல்கள், புராணங்கள் ஆகியவற்றைம் பழுதறப் பயின்று, ஓத வேண்டிய வேத மந்திரங்களை யெல்லாம், ஓதியுணர்ந்து, இறைவன்பால் அயராத அன்பு கொண்டொழுகிய மார்க்கண்டேயன், தனது தாய் தந்தையரின் கவலை தோய்ந்த வாழ்விலிருந்து, துனது குறுகிய ஆயுள்பற்றி அறிந்ததும். திருக்கடவூர் என்ற செம்பொன்னலயம் அடைந்து நெஞ்சம் நெக்குருகப் பாடி ஆடி, காதலாகிக் கண்ணீர் மல்கி, இறைவனை அர்ச்சித்து வருவானயினன்.

அவனது பதினறுவது ஆண்டு முடிவுற்றதும் காலதேவன் தன் கடமையை நிறைவேற்ற மார்க்கண்டன் முன்னே காட்சியளித்தான். சிவலிங்க பூசையில் அமர்ந்திருந்த மார்க்கண்டேயன் மேல் அந்தகன் தனது பாசக் கயிற்றை எறிந்ததும், பூசையிலிருந்த சிவலிங்கத்திலெழுந்த பெருமான் தமது வாமச் சேவடியால் சிறிது உந்தி உதைத்து மறலியை மண்ணுற வீழ்த்தி மடித்தான். கூற்றுவனை உதைக்க இறைவன் எடுத்த திருக்கோலமே காலகாலத் திருமூர்த்தம். இதனை,

"வந்தடைந்த சிறுமறையோன் உயிர்மேற் சீறி
வருங்காலன், பெருங்கால வலயம் போலும்
செந்தறுகண், வெள்ளெயிற்றுக் கரிய கோலம்
சிதைந்துருள வதைத்தருளும் செய்யதாளர்"

என ஞானசம்பந்தப் பெருமானும்,

தோடுலா மலர்கள் தூவித் தொழுதெழு மார்க்கண்டேயன்
வீடுநாள் அணுகிற்றென்று மெய்கொள்வான் வந்தகாலன்
பாடுதான் செல்லும் அஞ்சிப் பாதமே சரணமென்னச்
சாடினர் காலன் மாளச் சாய்க்காடு மேவினரே"

என திருநாவுக்கரசு சுவாமிகளும் பாடிப் பரவுகிறர்கள்.

இவ்வரிய காலகாலத் திருமூர்த்தம் மாவை ஆலயக் கற்றூணில் 'கலைச் சிற்பிகளின் கைவண்ணத்தில் ஒன்றுகும்.

# 10. நாளாறில் கண்ணிடர்ந்தப்பிய கண்ணப்பன்

நக்கீரன் காலந்தொட்டு, தேவாரம் பாடிய மூவர் முதலியோர் வழியாகச் சமீபகால தமிழடியார்களாகிய பட்டினத்தடிகள் போன்ற பலராலும், பாடிப் பரவப்பட்ட பரம புண்ணிய திருத்தலம் திருக்காளத்தி. இங்குள்ள காளத்தி நாதரை சிலந்தி, பாம்பு, யானை ஆகிய பூச்சி, விலங்கு, மிருகம் ஆகியவை வழி பாடு செய்து முக்தியடைந்திருக்கின்றன. இறைவன் எங்கெல்லாம் உறைகிறான் எனப் பாடவந்த அப்பர் சுவாமிகள்.

''மனத்தகத்தான, தலைமேலான், வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் அன்பர் இனத்தகத்தான்
இமையவர் சிரத்தின் மேலான்'' என்றெல்லாம் கூறி இறுதியாக,

''கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சியான் காண்
காளத்தியான் அவன் என் கண்ணுள்ளானே'' என்றெல்லாம் முடித்து

வைக்கிறார்.

காளத்தியானையும் கண்ணையும் தொடர்பு படுத்தியவர் கண்ணப்பநாயனார்.

வேடர் குலத்துதித்த திண்ணன் என்ற வேடுவன் குடுமியா மலைக்குன் றமர்ந்த லிங்கோத்பவனைக் கண்டு உளம்உருகி தன் இனத்தின் இயல்புக்கமைய மாமிசம் முதலியவை படைத்து வழிபாடு செய்கிறான். வழிபாடு செய்துவந்த ஐந்தாம்நாள், இறைவன் வலது கண்ணில், குருதி சிந்துவதைக் கண்ணுற்ற திண்ணன், செய்வதறியாது திகைத்துத் தனது வலது கண்ணைப் பகழியினால் அகழ்ந்தெடுத்து இறைவன் வலக்கண்மேல் அப்பி வழிபாடு செய்கிறான் உடனே குருதி வழிந்தோடுவது நிற்பதைக் கண்ணுற்றுப் பெருமகிழ்ச்சி அடைகிறான். ஆயினும் ஆறாவதுநாள் லிங்கத்திருமேனியின் இடது கண்ணில் உதிரம் சொட்டு வதைக் கண்ணுற்ற திண்ணன், தனது செருப்பணி பாதத்தினால் கண் இருக்கும் இடத்தைக் குறித்து தனது இடது கண்ணையும் அம்பால் அகழ்ந்தெடுத்து அப்ப முற்படுகிறான். அந்த வேளையில் ''நில்லு கண்ணப்ப நில்லு'' என்ற அசரீரியால் திண்ணனாரைத் தடுத்தாட்கொண்டு அவன் இரு கண்களையும் கொடுக்கிறான் குடு மியா மலைக் குன்றமர்ந்த இறைவன். அன்று முதல் திண்ணன் என்ற வேட்டு வன் கண்ணப்பன் என்ற பெயரோடு இறைவன் திருத்தொண்டு செய்துயர்ந்த அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராக மதிக்கப்பட்டு வந்திருக்கிறான்.

கண்ணப்ப நாயனாரை,

''மலராகு நயனம் காய்கணையால் கிடந்து
ஈசனடி கூடினான்'' என ஞானசம்பந்த சுவாமிகளும்,

''கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்''
என்ச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையு மாட்கொண்டருளி''
என மணிவாசகரும் பாடிப் பரவுகிறார்கள்.

கண்ணப்பன் நாளாறில் கண்ணிடர்ந்தப்பும் காட்சியை, பாவைக் கற்றூ ணில் கற்சித்திரமாக வடித்தெடுத்திருக்கும் காட்சி, கருத்திற் பதியும் ஓர்அரிய காட்சி.

# 11. பூமகளெனவரு பூம்பாவை

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க உதித்தவர் ஞானசம்பந்த சுவாமிகள். இப் பெருமானுர் செய்த அற்புதங்கள் பல. அவற்றிற் சிறப்பானது என்பும் சாம்பலுமாய்க் குடத்திலிருந்த பூம்பாவை என்னும் மங்கை நல்லாளை உயிர் பெற்றெழச் செய்ததாகும்.

திருமயிலாபுரியின் வணிகர் தலைவரும், சிறந்த செல்வருமாகிய சிவநேசருடைய அருந்தவப் பயனுல் அழகுபொலியப் பிறந்தவள் பூம்பாவை. பெருநிதி படைத்த பெருஞ் செல்வர் சிவநேசர், திருஞானசம்பந்தர் மேல் ஆராத பக்தி கொண்டவர். தாம் ''பெற்றெடுத்த பூம்பாவையும், பிறங்கிய நிதியும், முற்றும்'' சம்பந்தப் பெருமானுக்கே அர்ப்பணம் என்று கூறித் தன் செல்வ மகளை வளர்த்து வந்தார்.

மங்கைப் பருவம் எய்திய பூம்பாவை ஒருநாள் மலர் பொழிலில், மலர் கொய்யும் தருணம் நாகம் தீண்டி மரணமுற்றுள். பல்வேறு விடவைத்தியங்கள் செய்தும் பயனில்லாது போகவே பெருந்துயருற்ற சிவநேசர், அவள் ஈமக் கிரியைகளை முறையாகச் செய்து, அவள் சாம்பலையும், என்புகளையும் ஒரு குடத்திலிட்டு, அவள் வளர்ந்த கன்னிமாடத்தில் வைத்துக் காழியர்கோன் வருகைக்காகக் காத்திருந்தார்.

தலயாத்திரைப்போது ஞானசம்பந்தர் மயிலாபுரி வந்தடைந்த போது, சிவநேசர் எதிர்கொண்டு வரவழைத்துத் தமக்கு நேர்ந்த துன்பங் கூறி, அதைத் துடைத்தருள வேண்டி நின்றுர். அவ்வேளை ஞானசம்பந்தப் பெருமான் ''கங்கை வார் சடையார் கபாலீஸ்வரம் அணைந்து, துங்கநீர் சுடர் கோபுரம் தொழுது, மங்கை பங்கர்தம் கோயிலை வலம் வந்து வணங்கி செங்கை சென்னி மேற் குவித்துத் தேவதேவனைத் திருகபாலீஸ்ள்ரத் தமுதை, பாவை பாகனைப் பரிவுறு பண்ணிஞற் பரவிப்'' போற்றியபின், சிவநேசர் அன்புமகள் என்பு நிறை குடத்தைத் திருக்கோயில் திருமதிற்புறத்திற்குக் கொணர்க எனப் பணித்தார். சிவநேசரும் அக்குடத்தைச் சிவிகையில் ஏற்றி, பூம்பாவையின் சேடிகள் சூழ்ந்து வரவுதரத் தம் சுற்றத்தாருடன் திருக்கோயில் மதிற்புறத்தே கொண்டு சேர்த்தார். அப்போது அங்கு குழுமியிருந்த பல்லாயிரம் பக்தர்கள் முன்னிலையில அக் குடத்தைப் பார்த்து,

''மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன், மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணிஞல் அவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்.
உண்மையாமெனில் உலகர்முன் வருகென''

உரைத்து, மன்னுவார் சடையாரைத் தொழுது ''மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலை'' எனத் தொடங்கி மயிலைக் கபாலீஸ்வரர் ஆலயத் திருவிழாச் சிறப்பெல்லாம் கூறும் பத்துப் பாடல்களைப் பாடி, ஒவ்வொரு பாட்டின் ஈற்றடியிலும் இவ்வற்புத விழாக்களைக் காணுது இளம் பருவத்திலேயே ''நீ போதியோ'' என வரும்படி பாடியருளினுர். பாடல்கள் முடிவடைந்ததும், வளையல் அணிந்த

செங்கைகள் முன்வரக் குடத்தை உடைத்து தாமரை மொட்டவிழ்ந்தது போலப் பூம்பாவை உயிர்பெற்றெழுந்தாள். வியப்பும், பக்தியும் மேலிட அங்கு குழுமியிருந்தோர் அனைவரும் "என்ன அற்புதம்" என்று உணர்வுற்றுத் தம் இரு கைகளையும் சென்னிமேல் கூப்பிய வண்ணம் "அரோகரா" என்ற கோஷத்துடன் ஆளுடைய பிள்ளையார் அடிவணங்கி எழுந்தனர். சிவநேசரும், பூம்பாவையும் பெருமானின் திருவடிகளைத் தம் கண்ணீர் சோர வணங்கி எழுந்தனர்.

இவ் வற்புதத்தை, அழகு பொலி சித்திரமாக, மாவை ஆலயக் சுற்றாணில் வடித்தெடுத்த சிற்பியை வாயார வாழ்த்த வேண்டாமா?

## 12. இந்திரன் பூசை

அசுரர் தலைவன், சூரபதுமனின் அட்டகாசம் தாங்கமுடியாது அமரர் தலைவன் இந்திரனும், இந்திராணியும் சிலகாலம் கரந்துறைந்தனர்.

விண்ணுலகம் விட்டு, மண்ணுலகடைந்து, சீர்காழிப் பதியிலே, அழகிய நந்தவனம் அமைத்து, நறுமலர் கொய்து, ஆங்கோர் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வருவானாயினன்.

மறைந்து வாழ்ந்த மகபதியைக் கண்டு பிடிக்க, சூரன் ஒற்றர்களைக் அண்டங்கள் யாவும் ஏவினன், மண்ணுலகில் உலாவிய ஒற்றர் பற்றிய செய்தியறிந்த அமரர்கோன், தான் மறைந்திருந்த நந்தவனத்திலே மூங்கிலுருவாக இருந்து ஈசனைப் பூசைசெய்து வருவானாயினன்.

அசுர மாயையின் விளையாட்டால் மண்ணுலகில் மழைபெய்யா தொழிந்தது. அழகிய நந்தவனம் காய்ந்து கருகத் தொடங்கிற்று. மனம்நொந்த மகபதி மாதொருபாகரை வேண்டி நின்ற வேளையிலே அசரீரியாக சிலகாலத்தில் ஓர் ஆறு அந்த வனமூடாகச் செல்லும் என்ற வாக்கைப் பெற்றான். ஈசன் அருளாடலை எண்ணி மகிழ்ந்த இந்திரனும், தொடர்ந்து தன் பூசனைகளைத் நடாத்தி வந்தான்.

காலம் கனன்று சென்றது. அகத்தியமுனிவர் கங்காதீர்த்தம் கொண்டு வந்த கமண்டலத்தை தம் பொதியமலையில் வைத்திருந்தபோது விநாயகப்பெருமான் காக உருவெடுத்து அதைக் கவிழ்த்துவிட்டார். காவிரிநதி உற்பத்தி ஆயிற்று பெருகிவந்த புதுவெள்ளம் சீர்காழியில் இந்திரன் வழிபாடு செய்த நந்தவனத்திற்கூடாகச் சென்று வளம் படுத்தியது. இந்திரன் நந்தவனம் செழித்தது. பூசனைக்குரிய மலர்கள் கிடைத்தன. இந்திரனும் அகமகிழ்வோடு லிங்க பூசையைத் தொடர்ந்தான்.

இப்புராண சித்திரத்தை, மாவைக் கற்றாணில் இந்திரன் லிங்கபூசை செய்யும் சித்திரமாக வடித்து நினைவூட்டுகிறார்கள்.

## 13. இடும்பன்

சூராதி அவுணர் வில்லாசிரியன் இடும்பன், அவுணர் குலமுழுதும் அழிந்ததும், அகத்தியர் பாலடைந்து அவர் சீடனுயினன். அவனுக்கு கந்தவேளின் திருவருட் பேறுகிடைக்க அவனுக்கு அகத்திய முனிவர் சடக்கர மந்திர உபதேசம் செய்து, பிரமதண்டத்தையும் அட்டநாகங்களேயும் அளித்துக் கந்தகிரியில் உள்ள சிவமலே, சக்திமலே ஆகிய இரு குன்றுகளேத் தாம் பூசை செய்யும் பொருட்டு, எடுத்து வரும்படி பணித்தார்.

இடும்பனும், அவன் மனேவி இடும்பியுமாகக் கந்தகிரி சென்று, சிவமலே சக்திமலே ஆகிய இரண்டையும், பிரமதண்டத்தில், அட்டநாகங்களினுல் உறிகள்போல, இருபகுதிகளிலும், பிணித்துத், தன்தோள் மேல்வைத்துக் காவடி போலத் தூக்கி வந்தான்.

வரும் வழியிலே சற்று இளேப்பாறும் வண்ணம், இரு குன்றுகளேயுரா இறக்கி வைத்தான் இடும்பன். இளேப்பாறி முடிந்ததும், தான் கொண்டுவந்த மலேகளேத் தூக்க முயன்றபோது அவை தூக்க முடியாதிருந்தன. மீண்டும், மீண்டும் முயன்றும் பயனளிக்காதுபோகவே இடும்பன் வெகுண்டு, சுற்றும் முற்றும் பார்த்தான். சிவகிரி மலேயிலே, குராமர நிழலிலே குழந்தை ஒன்று நர்த்தனமாடுவதைக் கண்டான்.

அக்குழந்தையை மலேயினின்று இறங்குமாறு பலமுறை பணித்தும், அது இறங்காதது கண்டு, இடும்பன் அதனேப் பிடிக்க இருகைகளேயும் நீட்டியபடி பாய்ந்தான். குழந்தை சற்று அசைந்து கொடுத்ததும், இடும்பன் எண்சாண் கிடையாக விழுந்து மூர்ச்சித்தான்.

இடும்பி செய்வதறியாது முருகவேளேத் துதித்து, மலேமேல் நின்ற குழந்தையைப் பார்த்தாள். அப்போது மயிலேறி முருகன் காட்சி கொடுத்து, இடும்பனேயும் எழுப்பி ரட்சித்தான். தான் அமர்ந்த சிவகிரிமலே பழனிமலே எனவும் அன்றுதொட்டு, தன்னே வணங்க வருபவர்கள் இடும்பனேப் போலக் காவடி எடுத்துப் பலனடைவார்கள் என்றும் கூறி மறைந்தார்.

குழந்லை முருகன் இடும்பனுக்குக் காட்சி கொடுப்பதையும், இடும்பாசுரன், சிவமலே, சக்திமலே ஆகியவத்றைத் தூக்கிவருவதையும், கல்லில் வடித்து, இடும்பன் வரலாற்றைச் சொல்லாமல் சொல்லவைக்கும், சித்திரமாக வடித்துள்ளார்கள், சிற்பிகள்.

## 14. நகுலமுனிவர் பூசை

ஈழநாட்டின் புராதன சிவத்தலங்களில் ஒன்று திருத்தம்பலேஸ்வரம். இன்று இத்தலம் கீரிமலே என்றும் நகுலேஸ்வரம் என்றும் வழங்கப்பட்டு வருகிறது. இங்கு எழுந்தருளிய மூர்த்தியும் திருத்தம்பலேஸ்வரர் என்று அழைக்கப்பட்டு, இன்று நகுலேஸ்வரர் என்று நாவினிக்க அழைக்கப்படுகிறுர். இப்பெருமான் பண்டுதொட்டுச் சிறந்த வரப்பிரசாதி என்பதும், இத்தலத்தின் கடலோரக் குன்றுகளிலிருந்து ஊற்றெடுத்துக் கடலோடு சங்கமிக்கும் நன்னீர் ஊற்

றுக்கள் நோய் பிணியகற்றும் மகத்துவம் மிக்கவை என்பதும், இப் புண்ணிய தலத்தில் அந்தியேட்டி சிரார்த்தம் ஆகிய பிதுர் கடன்களைக் கழிப்பது புண்ணியச் செயல் என்பதும், சைவ உலகில் பிரசித்தமான செய்திகள்.

இப் பழம்பெரும் பதியின் பெயரும், பெருமானின் திருநாமமும், மாறிய வரலாறு மிக ரசமானது.

முன்னொருகால் ஜமதக்கினி என்ற முனிவர் தனது தந்தையின் சிரார்த்தம் செய்யத் தனது குருவாகிய பிருகு முனிவரை அழைத்திருந்தார். சிரார்த்த தினத்தன்று எதிர்பாராது பெருமைமிக்க வியாசமுனிவரும் ஜமதக்கினியின் ஆசிரமம் வந்து சேர்ந்தார். வருகைதந்த இரு முனிவர்களில் யாரைத் தன் சிரார்த்த குருவாக ஏற்பது என்ற சிக்கலில் மூழ்கிய ஜமதக்கினி, சிரார்த்தத்தைத் தாமதித்தார். விஷயமறியாத பிருகு முனிவர், கீரி உருவெடுத்து, உணவு வைக்கப்பட்ட அறைக்குள் நுழைந்து அங்கிருந்த சிரார்த்த உணவுகளை எச்சில் படுத்திவிட்டு தனது இருப்பிடம் சென்றடைந்தார், சிரார்த்தத்திற்கு வந்திருந்த பிதிர்கள், தமக்கு நிவேதிக்கப்படவிருந்த உணவுகள் எச்சிற்படுத்தப்பட்டதைக் கண்டு மிகவும் கோபமடைந்து ஜமதக்கினியின் குலமே அழிந்து போகச் சபித்துச் சென்றனர். இதனல் மிகத் துன்பமடைந்த ஜமதக்கினி தனது குருவிடம் சென்றபோது பிருகு முனிவரும் சினந்து, சிரார்த்தத்தை தாமதித்துத் தம்மை அவமானப்படுத்தியதால் "கீரிமுகத்தோடு அலைவாய்" என ஜமதக்கினியைச் சபித்தார். பின்னர். மிகுந்த கவலையுடன் ஜமதக்கனி தனக்கேற்பட்ட சிக்கலை எடுத்துக் கூறியதும், பிருகு முனிவர், மனமிரங்கி அவரை ஈழநாட்டின் வடபால் அமைந்த சிவத்தலமாகிய திருதம்பலேஸ்வரம்சென்று அங்கு கடற்கரைக் கற்பாறைகளிலிருந்து பெருகிக் கடலோடு சங்கமமாகும் நன்னீர் ஊற்றுக்கள் சேரும் அந்தர் வாவியில் நீராடித் திருத்தம்பலேஸ்வரரை வழிபாடு செய்து வர, அவர் கீரிமுகம் மறையும் எனச் சாப விமோசனம் கொடுத்தருளினர். பிருகு முனிவர் அருளிய வண்ணம் ஜமதக்கனியும், திருத்தம்பலேஸ்வர மடைந்து, அந்தர் வாவியில் நீராடித் திருத்தம்பலேஸ்வரரைப் பூசித்துத் தனது கீரிமுகம் மாறப் பெற்ருர். திருத்தம்பலேஸ்வரரின் மேல் மிகுந்த பக்தி கொண்ட முனிவர் கடலோரக் கற்பாறைக் குகைகளிலே ஜபதபம் செய்து, மக்கள் பிணிநோய் தீர்த்து வந்தார் என வரலாறு கூறுகிறது.

கீரிமுகத்தோடு ஜமதக்கனி, திருத்தம்பலேஸ்வரம் வந்து, சாப விமோசனம் பெற்றமையாலே அவர் நகுலமுனிவர் எனவும், இத்தலம் நகுலேஸ்வரம் எள எனவும், பெருமான் நகுலேஸ்வரர் எனவும் பெயர்மாற்றம் நடைபெற்றது.

நகுல முனிவர் நகுலேஸ்வரப் பெருமானைப் பூசிக்கும் நற்காட்சியை மாவைக் கற்றூணில், சிற்பமாக்கி, சிந்தைக்கு விருந்தளித்த சிற்பிகளுக்கு ஒரு வணக்கம் செலுத்துவோமா?

பொ. சோ.

# ST. MARY TEXTILES

**Manufacturers & Exporters**

**of**

**High - class Handloom cotton Fabrics**

Post Bax No. 50, Kasim Sahib Street,

KARUR S. Ry. (Tamilnadu.)

*Products:*

**Bedspreads - Table Cloth - Pillow covers**

**Casement & Matty Plain - Heavy & Striped**

**Casement - Furnishings - Curtain Materials -**

**Shirtings - Door Curtains - etc etc.**

Trade Mark

**'Marytex Fabrics'**

Telegrams

**'Marytex'**

*With best compliments from :*

Grams: "BEST CEMENT" Phone: 25356

★ CHETTINAD CEMENT CORPORATION LIMITED,
★ "CATHOLIC CENTRE"
★ 6, ARMENIAN STREET
★ MADRAS-1,

Manufacturers of:

"CHETTINAD BRAND" PORTLAND CEMENT

Factory:

KUMARARAJAH MUTHIAH NAGAR, PULIYUR (KARUR.)

Phone: 144 Grams: 'Cement'

Branch:

34, NARASIMHARAJA ROAD, BANGLORE-2.

18-C, SUKEAS LINE (Brabourne Road), CALCUTTA-1.

*With best compliments from :*

# JAYEL CORPORATION

Old Tumkur Road,
**BANGLORE-12.**

*Manufacturers of :*

★ HIGH CLASS PAINTS,
★ INSULATING VARNISHES,
★ THINNERS & ALLIED PRODUCTS

TNGST 264115.
CST 9899. 15-12-66.

PHONE :
32482

*With best compliments from :*

# YOUSUFF FURNITURE CENTRE

*SPECIALISTS IN:*

"APPAS" BRAND SOFA CUM-BEDS & SPRING MATTRESSES

15 47, VARIETY HALL ROAD,

**COIMBATORE-1**

*Proprietor :* **S. M. MOHAMED YOUSUFF**

பள்ளிக்கா ? படிப்பதற்கா ? கல்லூரிக்கா ?

நூல்நிலையத்துக்கா ? அன்புப்பரிசளிப்புக்கா?

அனைத்திற்கும் உகந்த அருமையான புத்தகங்கள் கிடைக்கும் தரமான

புத்தக வியாபாரிகள்

# மெர்க்குரி புக் கம்பெனி,

20, கருப்ப கவுண்டர் வீதி, கோயமுத்தூர்-1.

போன் : 24228

# KHODAY'S

## KHODAY'S QUALITY LIQUORS:-

PETER SCOT WHISKY :- A few sips of it and You feel Right on the Top of the world

SOVEREIGN BRANDY
DOLLAR BRANDY
FIVE STAR BRANDY
GOLDEN SUN WHISKY
KHODAY'S COCK TAIL GIN No. 1

Here's a smooth mellow Flavour that Lingers on Your tongue.
Here's Warm pleasantness that goes right to Your Heart.

KHODAY'S x x x RUM — Force behind Force.

DRINK KHODAY'S Quality Liquors,

*Distributors for*
*Coimbatore, Nilgiris, Salem & Dharmapuri Districts.*

CNR SAKTHI WINE STORES,
882, BIG BAZAAR STREET,
COIMBATORE-1.

With best compliments from :

# M/S. SAMBA STATIONERIES PRIVATE LTD.,

40, North Chithirai Street,

MADURAI-1.

Branches :

200, Brough Road,

ERODE-1.

&

12, Francis Joseph Street,

MADRAS-1.

Registered Office. MADURAI

★

Phone Office : 27263

Factory : 31448

★

Phone Erode : 963

Madras : 29563

*Manufacturers :* All kinds of School Notebooks College Notebooks and account note-books and other stationeries.

St. Joseph's Printing Press, Coimbatore-1.